JL
Y/15m211 N24CM
N 26.3.2
207608

No. M. 1957. WHOLE NUMBER 26. VOL. III, No.

10 NOV 1926

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

III.] அக்ஷய புரட்டாசி—September 1926. [இதழ் 2.

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

ஜீவிய (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு 50—0—0 வெளிநாடு 60—0—0

	ரூ.	அ.	பை.
மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா	50	0	0
ஜமீந்தார்களுக்கு	30	0	0
போஷகர்களுக்கு	25	0	0
நன்கொடையாளருக்கு...	15	0	0
அபிமானிகளுக்கு	10	0	0
உள்நாடுகளுக்கு	5	0	0
வெளி நாடுகளுக்கு	6	0	0

—உள் நாடு ரூ. 5. All Rights Reserved. வெளி நாடு ரூ. 6

பொருளடக்கம்.

	பக்கம்.
சுபோத ராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்)	... 66
பெண்களின் விவாக வயது (பத்திராதிபர்)	... 67
செந்தமிழ் நாட்டுச் சிறப்புக்கும்மி (ஸ்ரீமான் வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்)	... 71
சுகாதாரம் (ஸ்ரீமதி S. அம்புஜவல்லி.)	... 73
இந்திய வீரப் பெண்களின் சரிதைகள் இராணி துர்க்காவதி (சுவாமி அற்புதானந்தா).	... 75
நூர்ஜஹான் அல்லது பாத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்)	... 78
பழனியாண்டவன் பெருமை (முருகப் பிரசாதம் பெற்ற ஒரு மாது)	... 85
மார்க்கோபோலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S. R. அனந்தநாராயண அய்யர்)	... 88
தியாகம் (ஸ்ரீமதி பி. மங்களாபாயி.)	... 91

	பக்கம்.
எங்கள் தீர்த்த யாத்திரை (ஸ்ரீமான் V. நடராஜன்)	... 95
பர்வதகுமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா.)	... 99
சிந்தாமணிச் சிறப்பு வெண்பா (தேவகோட்டை ஸ்ரீமான் கு. பெ. வீராசாமி செட்டியார் இயற்றியது)	... 105
கிராசை அல்லது நீங்காத்துயரம் (சிறுகதை) (சகோதரி வி. பாலம்மாள்)	... 106
மானிட வாழ்க்கையின் இன்பம் (ஸ்ரீமதி கஜலக்ஷ்மி அம்மாள்.)	... 111
அக்டோபர் மாதத்துப் பரீக்ஷை (ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்.)	... 113
பூர்வீக காலத்திலும் தற்காலத்திலுமுள்ள இந்திய ஸ்திரீகள் (By The Hon. Sir C. V. Kumaraswami Sastri Kt.,	... 121
ஒரு சம்பாஷணை (ஸ்ரீமதி செ. ராஜம்மாள்).	... 127

ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், மெடிகல் ஆபீசர் 28—5—25ல் அலஸ்டாரிலிருந்து எழுதுவது.

அன்பார்ந்த சகோதரியே,

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மன மகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம். அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே ஓர் பெருமையுமாகும், எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது சமயமின்மையால் இத்துடன் விடுத்தனன்.

ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு உபயக்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும் சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்கள் நம் தேசம் முன்னேற வேண்டுமெனப் பேரவாக்கொண்டவர்களென்பதைத் தாங்கள் ஆரம்பித்துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்து கொண்டேன். அதற்காக யான் வந்தனமும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சி விருத்தியுறக் கருணைபுரிவார்.

ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது.

சகோதரீ !

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன். படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் தலைமை நாயகமாய் விளங்குவது பற்றி நாட்டிலுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்களென்பதில் சந்தேகம் உளதோ? எல்லாம் வல்ல ஈசன் செயலும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ சந்தா வனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவுசெய்து எனக்குப் பத்திரிகையை யனுப்பி வரவும்.

சிந்தாமணி பைண்ட் வாலியம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுப்புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3—ரூபாய்க்கு சார்ஜ் உள்பட அனுப்பப்படும்.

பைண்ட் வாலியம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினலன்றி புத்தகம் அனுப்பப் படமாட்டாது.

1926 அக்டோபர் 31—தேதிவரையிலும் இக்குறைந்த விகிதத்திற்கு தபாற் கூலி இனமாக கொடுக்கப்படும். சொற்பபிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாபூர், சென்னை.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாராகச் சேர்ந் திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஹு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரிமீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், சௌமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் சௌமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. அவ் வாறு பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூபா2—8—0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

Some Select Opinions on "Chinthamani."

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani.* From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl., M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—*

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz. the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu.* The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah, writes under date 12-8-26, as follows:—

Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the womanhood of India is of great interest.

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4 8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.— *West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" verv suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under dat 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most in valuable and interesting magazine. I am sorry I did not make my acquaintance wit it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

P. G. Naicker Esq., Durban; 25th April 1925.

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

Goonaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. III.] September 1926. [No. 2.

श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.

(All Rights reserved by the Authoress)

207608

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः॥

जवेन सा ततो गत्वा जनस्थानं खरालयम् ।
खराय रक्षोमुख्याय सर्वं वृत्तं न्यवेदयत् ॥ ११ ॥

ततः பிறகு सा அந்த சூர்ப்பநகியானவள் जवेन விரைவாக खरालयं கரனுக்கிருப்பிடமாகிய जनस्थानं ஜனஸ்தானமென்னுமிடத்தை गत्वा சென்று रक्षोमुख्याय ராக்ஷசர்களின் தலைவனான खराय கரனிடம் सर्वं சகல वृत्तं சமாச்சாரத்தையும் न्यवेदयत् தெரிவித்தாள் ॥ ११ ॥

तच्छ्रुत्वा राक्षसास्सर्वे कोपाविष्टाः खरादयः ।
क्षिप्रं पञ्चवटीं प्राप्य राघवं रुरुधुस्तदा ॥ १२ ॥

तत् அவ்வார்த்தையை श्रुत्वा கேட்டு कोपाविष्टाः கோபங்கொண்டவர்களும் खरादयः கரன் முதலியவர்களும் ஆன सर्वे சகல राक्षसाः ராக்ஷசர்களும் तदा அப்பொழுது क्षिप्रं வேகமாக पञ्चवटीं பஞ்சவடியை प्राप्य அடைந்து राघवं ஸ்ரீராமனை रुरुधुः தகைந்தார்கள் ॥ १२ ॥

नियुज्य लक्ष्मणं सीतारक्षणाय रघूद्वहः
अवधीद्राक्षसान्सर्वान्खरमुख्याञ्छितैश्शरैः ॥ १३ ॥

रघूद्वहः ஸ்ரீராமர் सीतारक्षणाय சீதையைப் பாதுகாக்கும்பொருட்டு लक्ष्मणं லக்ஷ்மணனை नियुज्य ஏற்படுத்திவிட்டு खरमुख्यान् கரன் ஆதியாக सर्वान् எல்லா राक्षसान् ராக்ஷசர்களையும் शितैः கூரிய முனைபெற்ற शरैः பாணங்களினால் अवधीत् கொன்றார் ॥ १३ ॥

विरूपितमुखी गत्वा लङ्कां शूर्पणखा ततः ।
विवेश यमदूतीव दशकन्धरमन्दिरम् ॥ १४ ॥

ततः பிற்பாடு विरूपितमुखी மூளியாக்கப்பட்ட முகத்தையுடைய शूर्पणखा சூர்ப்பநகியானவள் लङ्कां தென்னிலங்கையை गत्वा சென்று यमदूतीव யமதூதியைப்போல் दशकन्धरमन्दिरं ராவணனுடைய வீட்டை विवेश பிரவேசித்தாள் ॥ १४ ॥

(To be continued.)

7/15 m 211, N24 CM

ஸ்ரீராமஜயம்.

OFFICE ... 10 NOV 1926

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய புரட்டாசி—September 1926. [இதழ் 2.

பெண்களின் விவாக வயது.

(பத்திராதிபர்)

பெண்களின் விவாக வயதை நிச்சயப்படுத்தாவிடில் தம்பதிகளுள் நேசப்பான்மையும் குடும்ப வாழ்க்கையில் ஐகமத்தியமும் குறைந்துவிடும் என்றதோர் உணர்ச்சி ஜனங்களில் சிலரிடையே உண்டாயிருக்கிறது. இதுபற்றி பால்ய விவாகம் என்று ஓர் வியாசமும் மகாத்மா காந்தி அவர்களால் "யௌவன இந்தியா"வில் எழுதப்பட்டு அதை நந்தமிழ் நாட்டு தினசரி வாராந்திரப் பத்திரிகைகளும் வெளியிட்டு வருகின்றன.

விவாகமென்பது பெண்களுக்கு அவர்கள் வாழ் நாளை இகபர சாதகமான உயர் வழியைக் கைப்பிடித்து நடத்துவதற்கு ஓர் ஒப்பற்ற முக்கிய சாதனமாயுள்ளது. விவாகமில்லாத பெண்ணின் நிலைமை ஆதாரமற்ற பூங்கொடிபோல ஓங்கி வளராது தரையிலேயே சுழன்று வளர்ச்சியற்று ஒளிகுன்றி மங்கலடைந்து விடுகின்றது. ஈதன்றி ஆடவனுடைய வாழ்க்கையும் ஒரு பெண்பாலை மணந்து இல்லற தர்மத்தை நடத்தினாலன்றி சிறப்படைவதில்லை. இவ்வுண்மையை நவ நாகரிகம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கும் இக்காலத்திலும் பலர் ஒப்புக்கொள்ளுகின்றனர். விவாகமின்றி தமது வாழ் நாளை நடத்தக் கூடுமென்ற ஆற்றலை ஒரு சில ஆண் பெண் பாலார் அடையக்கூடுமென்றி ஜன சமூகப்பொது விதியில் ஆண் பெண் இருபாலார்க்கும் விவாகம் அத்தியாவசியமாக ஏற்பட்டிருப்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.

சாஸ்திரவாதத்தையும் சம்பிரதாயத்தையும்

நடப்பதுபோல் பெண்ணுக்குப் பத்து வயதும் மணமகனுக்கு இருபது வயதுமாக இருந்த தில்லை. இதைக் கவனிக்குங்கால் மணமகனுக்கும் மணமகளுக்கும் சம வயதாக இருப்பதும் சில காரணங்களை முன்னிட்டு சிலாக்கியமாகவே இருக்குமென்பதில் தடை இல்லை. இதுவரை பால்ய விவாகத்தால் பெண்கள் விதவைகளாய் விடுகிறார்களென்று சொல்லப் பட்டது. சிறு வயதிலேயே பெண்கள் பிரசவித்து அகால மரணத்திற்குள்ளாவது பால்ய விவாகத்தினாலென்றும் கூறப்பட்டது. இச்சமயம் தம்பதிகளுள் மன வேற்றுமைக்குப் பால்ய விவாகமே காரணமெனப்படுகிறது. இக்காலத்தில் நடைபெறும் விவாகங்களை பால்ய விவாகமென்று சொல்ல இடமில்லை. தவிர தற்காலம் குடும்ப வாழ்க்கையிலேற்பட்டுள்ள பல கஷ்ட நிஷ்டூரங்களுக்கு விவாகத்தைக் காரணமாகக் கொள்ளவும் முடியாது.

இக்குறைகள் நீங்கவேண்டுமாயின் ஆடவனுக்குப் பதினெட்டு வயதிற்குள் விவாகம் செய்யக்கூடாதென்றும் வரதக்ஷிணை வாங்கக் கூடாதென்றும் சமூகக்கட்டுப்பாடுகள் ஏற்பட வேண்டும். பெண்மக்கட்குரிய படிப்பு பரவ வேண்டும். எல்லோரும் பெரும் பணச்செலவில் உயர்தரப் பரிட்சைகளுக்குப் படிப்பதென்பதில்லாது ஆடவனுக்கு இருபதாவது வயதில் ஜீவனோபாயமளிக்கக் கூடிய தொழிற் கல்வி பெருகல்வேண்டும். சிற்றின்ப எண்ணங்களைப் பெருகச்செய்வதான ஆடல், பாடல், ஆடைகள், கதைகள், படங்கள், பழக்க வழக்கங்கள் ஜன சமூகத்தால் அறவே பகிஷ்கரிக்கப்படவேண்டும். கற்பு எனப்படுவது ஆண் பெண் இருபாலார்க்கும் முக்கியமான தென்பதை வற்புறுத்தவேண்டும். பெண்கள் கேவலம் விளையாட்டுப் பொருள்களல்லவென்பதை யுணரவேண்டும். இவ்வாறாயின் பெண்களுக்கு விவாகம் எவ்வளவு வயதில் நடைபெற்றாலும் ஒரு விவாகமில்லாமலே இருந்தாலும் பெண்கள் நிலைமை ஒரு விதத்திலும் பாதிக்கப்படாமல் மேன்மையுற்றிருக்க முடியும். ஈதன்றி நாகரிகக் கோலாகலத்தில் நடையுடைபாவனைகளிலெல்லாம் சிற்றின்பப்பேய் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் சமயத்தில் பெண்களின் விவாக வயது முற்காலம் போலுயர்த்தப்படல் எங்ஙனம் பொருந்துமென்பதை அறிவிற் சிறந்த மேதாவிகள் ஆராயவேண்டுமென்பதே நமது வேண்டுகோள் ஆகும். தற்சமயம் நடைபெறும் விவாகங்கள் ஆண் பெண் இரண்டிற்கும் முற்காலம் போல் இளம் வயதாக இல்லாமலும் தற்காலம் கோருவது போல இருவருக்கும் தக்க வயதாகவும் இல்லாமலும் வரதட்சிணையின் ஏற்றக்குறைவிற்கும் பெற்றோர்களின் மனப்போக்கிற்கு ஏற்றதுபோல நடைபெற்று வருவதையும், பெண்கள் கேவலம் பிரஜைகளை விருத்திசெய்யும் யந்திரங்களாகவே நடத்தப்படுவதையும் நம்மவர்கள் கவனிப்பார்களா? பெண்களின் விவாக வயதை உயர்த்துவதால் மட்டும் இக்குறைகள் நீங்கி விட மாட்டா என்பது நிச்சயம்.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

(ஸ்ரீமான் வித்வான் நா. கோவிந்தசாமி பண்டிதர்)

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூவுருவும் பரஞ்சோதி யுருவான
முன்னவனே மறை சொன்னவனே
ஏவர் துதிக்கினும் அவர்க்கெளியனும்
ஏறுடையாய் தரும் பேறுடையாய். (68)

என்னொரு நாவினாற் சொல்ல முடியுமோ
ஈசனே யுன்றன் திருப்புகழே
பன்னருஞ் சிறப்பில் மன்னிய செந்தமிழ்ப்
பாடலைக்கேட்கும் பரம்பொருளே. (69)

என்று தொழுதான் தொண்டனைத் தேடவே.
ஏவலர் தங்களை யேவினன் காண்
சென்றவனே வலர் தண்புனற் பந்தலில்
செந்தமிழ்ப் பாணனை நன்கறிந்தே. (70)

மன்னவன் தன்னிடங் கூறினர் தண்டுடன்
மாதேவன் தொண்டனைக் கண்டனன் காண்
பொன்ன காளியுந் தேவரும் போற்றிய
புண்ணியன் தன்னருளென்றறிந்தே. (71)

கண்டென வீழ்ந்தனன் போற்றினன் பாடினன்
ஙகாற்கன்பு மிகுந்த தொண்டர்
மண்டனென்னகரைத் தேடியே வந்தது
மேலைத்தவம் பெரும் பாக்கியமே. (72)

என்று புகழ்ந்தவன் பட்டத்தி யானையின்
எருத்த மீதிசை யானை வைத்தே
மன்றல்மிகு மலர் மாலையைச் சாத்தினன்
வாத்தியமெல்லா முழங்கிடவே. (73)

தெள்ளிய அந்தணர் துணைவர் சேர்ந்தவர்
தேசத்திலுள்ளவர் சூழ்வுறவே
வெள்ளிய சாமரை வீசினன் பார்த்திவன்
வீதிவலஞ்செய்து வாயில்வர. (74)

அட்டமங் கலங்களேந்தி நிற்க மாதர்
ஆலத்தி சுற்றி யெறிந்திடவே
பட்டுவிரித்த அம்பாரியிலிருந்த
பக்தனைக் கைலாகு தந்திறக்கி. (75)

வாசப்பன்னீர் விளாவிய தெண்ணீரிசை
வாணனை யாட்டிமெய் மாசகற்றி
மாசறு கூடலினின்றெழுதான் மிக
வலிக்குமென்றே கையால் பிடித்து. (76)

ஈசந்துவட்டி வெண்ணீறணிந்து செம்பொன்
இழைபொராயிரம் பெற்றபட்டும்
ஆரந்துலங்கு மதாணி மலர்மாலை
அணிந்து நல்லலங்காரஞ் செய்தே. (77)

சுந்தா மண்டபந்தன்னிலே கொண்டுபோய்ச்
சோதிமணித் தவிசேற்றி வில்லோன்
சந்தனந் தாம்பூலஞ் சபையில் வழங்கிச்
சாமரைகால் செய்வட்ட மிசைத்தே. (78)

பொற்கலத்தமுதம் ஊட்டியே மாநிதிப்
பொன்னறை யாவுந்திறந்து விட்டான்
கற்கலனுடை பொற்காசு தன்மரபின்
காவலர் தேடியே வைத்த வெல்லாம். (79)

சென்றொரு வள்ளலைத்தேடி முகம்வாடி
தேசமெங்கு மலைந்தே மனந்தான்
கன்றியே வாழாத வண்ணந்தமிழை
கற்றவற்குற்ற கருணையொடே. (80)

யானை ஒட்டைபெருதாள் மிசையேற்றியே
யாழில் வல்லானை இபத்தில் வைத்து
சேனையொடேழுடி பின்னடந்து பாண்டித்
தேசத்துக் கனுப்பினன் குடக்கோன். (81)

பாண்டிய தேசத்திற்சென்று தமிழ்ப்பாணன்
பார்வதி நாயகன்தாள் பணிந்து
வேண்டி வருந்தொடர் வேதியர் மாதவர்
மேலவர்க்கீந்து பன்னாளிருந்தான். (82)

செந்தமிழுதனைத் தேவர்க்கு நாயகன்
செங்கையிலேடு கொண்டே யெழுதிச்
சந்ததம் போற்றிய பாணற்கீந்தானெனின்
தமிழ்ச் சிறப்பைச் சொல்லல் எளிதோ? (83)

மாசறு தேசிகன் மெய்யுப தேசங்கொள்
மாணிக்கஞ் செந்திருவாய் மலர்ந்த
வாசகம் எழுதிக்கையெழுத்திட்டனன்
மன்னு திருச்சிற்றம்பலம் உள்ளான். (84)

என்று பெரியவர் சொல்லுவர் படைத்த
ஈச்சுரன் கருணை மெத்த அம்மா
மன்றில் நடம்புரி வானவன் எழுதும்
வண்டமிழ்ப் பெருமை யென்ன சொல்வோம். (85)

செந்தமிழ் நிலத்திற் பிறந்துங்கெ விட்டாச்
செந்தமிழின் சிறப்பைப் தெரியார்
செந்தமிழை வளர்க்கத் தெரியார் வந்து
செய்தவுதவியென் தேசத்திற்கே. (86)

அமிழ்தமாகுமித் தமிழ்ச்சுவையென
ஆன்றபன்னூடும் புகழ்திருக்கத்
தமிழுக்கு மற்றோர் பாஷையாதி யென்று
தமிழன் கூறுவதாச்சரியம். (87)

சுகாதாரம்.

(ஸ்ரீமதி S. அம்புஜவல்லி)

வியாசம் II.

நாம் சன்மார்க்கத்தைக் கடைப் பிடித்து அதன்படி நடப்பதற்கு அடிப்படியாய் வேண்டியதுபூரண தேகஆரோக்கியமே. குணங்களின் சேர்க்கை ஒழுக்கம் எனப்படும். அவ்வொழுக்கமாவது, நம்வாழ்க்கை அதன் பல துறைகளிலும் தன்னடக்கத்தின் ஆளுகைக்குட்பட்டு பெரிய நன்மையடைந்து மேம்பட்டு விளங்குவதேயாம். நம்மூதாதைகளான முனிவர்களும் "மனிதன் முதற் கடமையானது தன்னைத் தான் அடக்கிப் பின்பே பிறரை அடக்கமுயல வேண்டும்" என்று கூறியுள்ளார். இதைப்பெற மனிதன் தன் இந்திரியங்களை ஜயித்து அதைத் தன் புத்திவசத்திற்குக் கொண்டுவருவது அவசியம் என்றும் வற்புறுத்தியுள்ளார். மேற்கூறிய தன்னடக்கமே வடமொழியில் "தம" எனப்படும். அத் தமத்தையுடையவனே "தாந்தன்" (தன்னடக்கமுள்ளோன்) எனப்படுவான். "தன்னடக்கமே மனிதனை தேவர் ஸ்தானத்தில் கொண்டு நிறுத்தும்" என்றும் மேதாவிகள் பல தேசத்தார் செப்புகின்றனர். நம் தேகத்தைத் தன்னடக்கத்திற்குட்படுத்துவது என்பது சுகாதாரமுறைப்படி தேகத்தைவழக்கத்திற்குக் கொண்டு வருவது என்பதே. மானிடராய் ஜனித்த ஒவ்வொருவருக்கும் நியாயமாய்ச் சேர வேண்டியது எனப்படும் ஸ்வாதந்திரியம் அல்லது விடுதலை, அடிமை நீங்கல் என்பவை அவரவர் இஷ்டப்பிரகாரம் நடக்கச் செலவு கொடுப்பது என்பதல்ல. விவேகம், பகுத்தறிவு, இவையுடைய ஒருவருக்கு எது ஏற்றதோ, நேர்மையுடையதோ, நன்மை தரத்தக்கதோ, அவைகளைச் செய்வதே உண்மையில் ஸ்வாதந்திரியம். அல்லது, அடிமை நீங்கினவனுக்கு எது அடையாளம் என்றால், லோகநீதிக்குட்பட்டு, சட்டங்களை மீறுமலிருப்பதேயாம். எவன் தன் சரீரத்தைச் சுகாதார விதிகளுக்குக் கட்டுப்படுத்தாமல்இருக்கிறானோ அவன் கடைசியில் தன் சரீரத்திற்கு அடிமையாய் விடுவான். சரீரம் நம்மால் போஷித்து ரக்ஷிக்க ஏற்பட்டதே யல்லாமல், கெடுப்பதற்கன்று. சரீரத்தின் சுபாவம் ஓர் இயந்திரத்தைப் போன்றது, சிறிது கெடுதல் ஏற்பட்டாலும் அதன் வேலையில் தவக்கம் ஏற்படும். ஆகையால் ஆரோக்கிய விதிகளை அனுஷ்டிப்பதற்குத் தன்னடக்கம்அதிஅவசியமானது. அதை அப்பியாசத்திற்குக் கொண்டு வருவதோ மிகக் கஷ்டம். ஆகையால்தான் வெகுபேர் தேக உணர்ச்சிகளுக்குஇடங்கொடுத்து, பல போகங்களை நுகர்ந்து, முடிவில் பெருந்துன்பத்தை அநுபவிக்கிறார்கள். "துன்பமின்றேல் இன்பமில்லை." "முந்தி மதுரமாயிருப்பது பிந்தி விஷமாய்ப்போய் விடுகிறது." "முந்தி விஷமாய்த் தோற்றுவது பிந்தி அமிர்தமாய் மாறி விடுகிறது" என்று பகவத்கீதையில் கூறியுள்ளது. இவ்விதமே சுகாதார முறையும் தேக ஆரோக்கிய விதியும் இருக்கின்றன.

சுகாதார முறைகளாவது யாவை யென்றால் உள்ளும் புறமும் சுத்தமாயிருப்பது. யுக்த ஸ்நான போஜன முதலியவைகளிலும், நித்திரை, வியாமம், விராமம் இவைகளில் கருத்துச் செலுத்துவது, முறை தவறாமை, மிதம் என்பவையே அதை அடைவதற்கு சாதனமானவை. முறை தவறாமை என்பது ஒழுங்கு. அதாவது குறித்த நேரத்தில் குறித்த செயலைப்

புரிவது. எப்போது மனிதன் ஸ்நான போஜனங்கள் செய்வதிலும், நித்திரை, விழிப்புகளுக்கும், வேலை, ஓய்வு, இவைகளுக்கும் ஓர் குறிப்பிட்ட நேரத்தை விதிக்காமல் வேளை தப்பி வேளைகளில் செய்து வருகிறானோ, அப்போது அவன் சரீரம் தன்னிலைகெட்டு, தன் வேலையைச்செய்ய இயலாததாய் ஆகிவிடுகிறது. குறிப்பிட்ட கால நிர்ணயப்படி அன்றாடம் மேற் கூறியவற்றைச்செய்து வருவது கேவலம் அடிமை வாழ்க்கை யென்று சிலர் எண்ணுகிறார்கள். அது பிசகு. ஓர் நியமமும் இல்லாத வாழ்க்கையே பின் அடிமைத் தன்மையை விளைவிக்கும். லோகத்திற்கே நன்மை புரிகிறவரும், பெரும் பரோபகாரியாயும், தன் தேசத்திற்காக பல தியாகங்கள் புரிந்து தன்னயப்பற்றற்று உழைப்பவர்களுமான எத்தனை மகான்கள், தேசாபிமானிகள் இளமையில் திடகாத்திரம் உள்ளவராயிருந்திருப்பினும், அஜாக்கிரதையினால் தேக ஆரோக்கியம் க்ஷீணிக்க, நல்ல நடுப்பிராயத்தில் நம்மத்தியை விட்டு நீங்கி, பரலோகப் பிராப்தி அடைந்து, நமக்கும் நம் தேசத்திற்கும் தீராத்துயரை உண்டாக்கி விடுகின்றனர். இவ்விதமே இளமையில் நோயுற்று பலமற்றவராயிருந்த அநேகர் பிந்திய காலத்தில் சுகாதார முறையை வழுவாமல் அனுஷ்டித்து நெடுங்காலம் பூர்ண ஆரோக்கியத்துடன் ஜீவித்து வருகின்றனர். சுகாதார முறையைச் சரிவர அனுஷ்டிக்க கீதையில் உள்ள ஓர் சுலோகமே உத்தம முறையை போதிப்பதாய்த் தோற்றுகிறது. அதாவது :— “மித மற்று புசிக்கிறவன் அல்லது பட்டினி கிடப்பவன் ; அதிகம் தூங்குபவன் அல்லது தூங்காமலே இருப்பவன் இவர்களுக்குயோகம் சித்திக்க மாட்டாது. எவன் மித போஜனம் கொள்வானோ, எவனுடைய சுகானுபவம் ஓர் அளவுக்கு மீறிச் செல்வதில்லையோ, எவன்கிருத்தியங்களுக்கு ஓர் எல்லையுண்டோ, எவன் நித்திரையிலும் விழிப்பிலும் மற்றும் எல்லாவற்றிலும் மிதமாயிருக்கிறானோ அவனுக்கே யோகம் சித்திக்கும்.” இவ்விதமே ஞானேச்வரர் என்ற மகானும் கீதை வாக்குக்குக் கீழ் வரும் விதமாக வியாக்கியானம் பண்ணியிருக்கிறார். “எவன் தன் நாவிற்கும், நித்திரா தேவிக்கும் அடிமைப்படுகிறானோ, அல்லது கோண புத்தியினால் தன் பசி தாகத்தை அடியோடு அழித்து விடுகிறானோ, தேக ஆரோக்கியத்திற்கும் காணாமல் புசிக்கிறானோ, நித்திரையை அடியோடு வெறுக்கிறானோ அவன் யோகம் செய்ய அருகனல்ல.” ஆகையால் நாம் அவைகளுக்குக் கண்டபடி இடங்கொடுத்து அடிமையாயும் இருக்கலாகாது. அவைகளை வெறுத்து துவேஷம் பாராட்டுவதாயுமிருக்கக் கூடாது. இரண்டும் கூடாது. எதற்கும் மிதமே வேண்டும். தேக ரக்ஷணைக்காகப் புசிக்கவேண்டும். ஆனால் அளவுடன் இருக்கவேண்டும். இவ்விதமே நம் காரியங்களிலும் சாவதானத்துடன் இருக்கவேண்டும். பேசும்போதும் ஓர் வரம்புக்கு மீறிச் செல்லுதல் கூடாது. வியாமம் எடுத்துக்கொள்வது, அல்லது உலாவச்செல்வது இவையும் அளவுக்கு மீறிச் செய்யாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். தினப்படி நித்திரைக்குப் போவதற்கும், விழித்துக்கொள்வதற்கும், வேலை செய்வதற்கும் ஓர் குறித்த நேரத்தைத் திட்டமிட்டு, அந்நியமப்படி நடத்தல் வேண்டும். இவ்விதம் செய்து நம் வாழ்க்கையை ஓர் நிதானத்திற்குக் கொண்டு வந்தோமானால் சரீரத்திலுள்ள சப்த நாடிகளும் தத்தம் வேலையைச் சரிவர புரிந்து ஆரோக்கியத்தைக்கொடுக்கும். மனமும் கூட இன்பமடையும்.

மனிதன் என்பவன் சரீரம், மனது, ஆத்மா இவைகளால் ஆக்கப்பட்டவன். இவை ஒவ்வொன்றும்மற்றவையின் உதவியைக்கொண்டுள்ளது. சரீரம் சுகமற்ற காலத்தில் மனதும் கெடுகிறது. எப்போது சரீரம், மனம் இவை

இரண்டும் பூரண ஆரோக்கியத்துடன் இருந்து வருகிறதோ அப்போதே ஆத்மா மேன்மை அடைகிறது. இதனால் “நியமமே விண்ணுலகின் முதற் சட்டம்” என்று ஓர் கவி பாடியுள்ளார். அது உண்மையே. ‘கடவுள் லோகத்தை நடத்தும் விதம் கவனி. பிரதிதினம் குறித்த நேரத்தைத் தவறாமல் சூரிய சந்திரர்கள் உதயமாகுகின்றனர் ; ருதுக்களும் கிரமப்பிரகாரம் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றது. மேலும் விவேகமற்ற பசு பிராணி முதலியவைகளும் கால நியமத்தை அனுஷ்டித்து வருகின்றன. வேளை தப்பி வேளை கறக்கும் பசுவின் பால் ருசியிலும் அளவிலும் வித்தியாசப்படுகிறது.’ மேல் நாட்டு மேதாவி ஒருவர் ஓர் சுகாதார உபன்னியாசத்தில் இதைக் கூறியுள்ளார்.

சரீரம் சோகம், துவேஷம், கோபம் முதலிய தீவிர மனோபாவங்களுடைய அதிகாரத்திற்கு எளிதில் உட்படக்கூடியது. ஆனால் அவையே தங்கள் அதிகாரத்தைச் செலுத்த இயலா. எப்பொழுதும் சரீரம் முற் கூறியவாறு சுகாதார முறைப்படி நடத்தப்பட்டு சுகாதார முறைகளை அனுஷ்டித்து வரும் மனிதர்களுடைய மனமானது சதா சாந்த மமைந்ததாயிருக்கும். ஏனென்றால், சரீரம் ஆரோக்கியம் உற்றதால் உடலில் உள்ள கெட்ட ரத்தம் குறைந்து பித்தநீர் முதலியவைகள் தலைக்கேறி, புத்தியைக்கலக்கி கோபதாபங்களை உண்டாக்காமல் இருக்கச்செய்யும். மனது நல்ல சாந்த நிலைமையில் சதா உற்ற போது சரீர உபாதிகளை வரவிட்டாமல் தடுக்கிறது. இப்படி தேகாரோக்கியமும், மனோநிலையும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. சில வேளைகளில் நாம் என்ன முன் ஜாக்கிரதையுடன் இருப்பினும், நோய் வந்து விடும். ஆனால் மேற் கூறிய நல்ல வழக்க பழக்கங்களினால் அது பெரும்பாலும் நம்மை அணுகாமல் காத்துக்கொள்ளலாம். அப்படியே வந்து விட்டாலும் நோய் சீக்கிரம் சொஸ்தமாய் விடும். “குணப்படுத்துவதை விட தடுப்பது மேல்” என்றோர் ஆங்கில மூதுரையுளது. அது ஓர் சிறந்த கொள்கை.

ஆரோக்கியம் என்பது ஒரு நிதிச்சாலை (Bank). அச்சாலையில் நாம் சுகாதாரத்தை அனுஷ்டித்து சரீரத்தை நன்றாய் போஷித்து அதனால் உண்டாகும் பலம் என்ற நிதியை சேமித்து வைத்தால், நோய்க்குட்பட நேருங்கால்ஏற்கனவே சேமித்துவைத்திருக்கிற பலத்தைக்கொண்டு நோயை வாராமல் தடுக்க இயல்வதுமல்லாமல் அந்நோயுடன் போராடி ஜயம் பெறவும் சாதகமாகும்.

இந்திய வீரப் பெண்களின் சரிதைகள்.

(சுவாமி அற்புதானந்தர்)

II.

இராணி துர்க்காவதி.

மத்திய மகாணத்தில் குருமண்டல் என்ற ஒரு சிற்றரசு இருந்தது. இமயமிருந்து சேது வரை இந்தியாவின் எல்லா பாகங்களும் அக்பர் மன்னனால் ஆளப்பட்டு வந்தன. எனினும் இச்சமயம் மொகல் ஏகாதிபத்திய ஆட்சியில் குருமண்டல் ஒரு தனிப்பட்ட அரசியலாகவே இருந்தது. இந்நாட்டின் அரசியல் ஒரு பெண்ணினால் நடத்தப்பட்டது. இவ்வம்மையார் ஐக்கிய மகாணத்தின் கநௌஜ் அரசர்களில் ஒருவனாகிய சந்தனன் என்பவனின் குமாரி. இவ்வம்மையாரை துர்க்காவதி யென்று பெற்றோர்கள் அழைத்தனர். இவளை இராஜ

புதனத்தின் மன்னர்களில் ஒருவருக்கு மணம் புரிந்து கொடுக்கவேண்டுமென முயன்றனர். ஆனாலும் இவ்வம்மையார் குருமண்டலத்தின் தலைவனாகிய தல்பத்ஷா வென்பவனின் மீது ஆசையாகி இவனையே மணம் புரிவதென்று கோரி தன் தகப்பன் வீட்டிற்கு வரும்படியாக தூதிகளின் மூலமாக செய்தி அனுப்பினாள்.

இதற்கிணங்கி தல்பத்ஷாவும், துர்க்காவதி ராஜ கன்னிகையை மணம் புரிவதற்கென பெரும் சேனையுடன் மணக்கோலமாய் குருமண்டலத்திற்குச் செல்ல, கனௌஜின் சிற்றரசனாகிய சந்தனன் விருப்பமற்றவனாகி இகழவே, போர் புரிந்து சந்தனனை தோல்வி அடையும்படி செய்து, துர்க்காவதியை குருமண்டலம் எடுத்தேகி இராணியாக்கினான். சில வருடங்களுக்குள் இவ்விராணி ஒரு இராஜ புத்திரனைப் பெற்றனள். இக்குழந்தைக்கு வீரநாராயணன் எனப் பெயரிட்டனர். இவனுக்கு மூன்று வயது ஆகியதும் தல்பத்ஷா காலம் சென்றான். துர்க்காவதி இராணிக்கு அளவுக்கடங்காததுக்கம் உண்டாயிற்று. எனினும் அதைப் பொறுத்து குருமண்டலத்தின் அரசைக் கைக்கொள்ளலானாள். இக்குழந்தை இளவரசனாக நியமிக்கப்பட்டு அதற்குக் கார்டியனாகத் தான் இருந்து அரசியல் நடத்தலானாள். இதைத் தெரிந்த டெல்லி மகாணத்தின் கவர்னர்கள் ஒருவர் பின் ஒருவராக இச்சிற்றரசின் மீது படை யெடுக்க முயன்று டெல்லி மன்னபிரானிடம் உத்திரவு கேட்டனர். எனினும் அக்பர் மன்னன் இக்குருமண்டலத்தின் வரலாறுகள் யாவையும், தல்பத்ஷாவின் நேர்மை முதலியவைகளையும் நன்கு அறிந்திருந்தனன். இவ்வரசியலில் பெருந்தடாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. சத்திரங்கள், சாவடிகள், கோயில்கள், பாட்டைகள் ஏற்பட்டு விருட்சங்களும், சோலைகளும் பயிரிடப்பட்டன. இந்தியாவில் ஒரு அழகிய சிற்றரசாக இக்குருமண்டலமிருந்ததென்பதை அக்பர் நன்கு அறிந்திருந்தான். விவசாயத்திலும், வியாபாரத்திலும் நாடு செழிப்புற்றிருந்தது. இந்நாட்டைக் கைபற்றுவதற்கு அக்பர் மன்னன் பல கவர்னர்களின் வேண்டுதல்களுக்கு ஆக்ஞை அளிக்க மறுத்திருந்தும், மத்திய மகாணத்தில் முஸ்லீம் கவர்னராக இருந்த அஜப்கானின் வேண்டுகோளுக்கு இணங்கினான். எனவே ஒரு பெரும்படை திரட்டப்பட்டது. அஜப்கான் ஒரு இந்துப் பெண்ணின் அரசியலை யாதொரு காரணமுமில்லாமல் அக்பர் மன்னனுக்கென கவர்ந்துக்கொள்வதென முற்படலானான். இம்முயற்சிக்கு துர்க்காவதிப் படையும் எதிர்த்துப் போராடுவது துர்கடனமே. யோசிக்க யோசிக்க மொகல் மன்னனின் மன மாறுதல் கண்டு வியப்புப் பெருகலாயிற்று. எனினும் துர்க்காவதி எதிர்க்கவே முற்பட்டதினால், எண்ணாயிரம் குதிரை வீரர்களையும், இரண்டாயிரம் யானைகளையும் தயாரித்தனள். இவைகளைப் பல தளகர்த்தர்களுடன் தானே அரங்கமேற்ற முற்பட்டனள். வீரர்களும் பெண்ணரசியின் ஆக்ஞையால் போர்புரியவே மிகவிருப்பங்கொண்டு முற்படலானார். ரணபேரிகைகள் இருபுறமும் முழங்கின. போர்க்களச்சங்குகளையும் ஊதலாயினர். மொகல் மன்னனின் படை அஜப் தலைமையில் ஆகாயம் பாவிய அசிகளுடன் பல காலாட் படைகள் கொண்டும், குதிரை வீரர்கள் கொண்டும் குருமண்டலத்தை நெருங்கலாயிற்று. குருமண்டலத்து யானைகளும், குதிரை வீரர்களும், காலாட்படையும் அணிவகுப்பாகி துர்க்காவதி இராணியாரின் தலைமையில் போர் முகமாயின. அஜப்கான் குருமண்டலத்தின் படை பெருகுமென நினையாமலே சுமார் ஐந்தாயிரம் குதிரை வீரர்களை மட்டும் கொண்டு வந்திருந்த

னன். நெருங்க, நெருங்க தன் மதியின்மையையும் கவனிக்கலானான். ஒரு கைம்பெண்ணொன்று படையெடுக்க முற்பட்டவன் இவ்வமயம் திகிலடையலானான். எனினும் பின்வாங்கக் கூடாத நிலையில் போர் புரியவே முற்பட்டனன். ஆனால் மிகக்கஷ்டங்களில் சிக்கிக்கொண்டவனாகி, உயிர் தப்பி அஜப்கான் ஓடலானான் குருமண்டல வீரர்கள் மிகக் களிக்கலாயினர். எனினும் துர்க்காவதி இராணி இத்தோல்வி மொகல் படையை அதிகரிக்கச் செய்யும் என்ற ஆழ்ந்த சிந்தையில் இருந்தனள். அஜப்கான் தோல்வியுற்று டில்லி திரும்பவே, அக்பர் மன்னன் செவியுற்றுப் புன்சிரிப்பு கொண்டவனாக சுமார் ஒன்றரை வருடத்தின் பின்னர் ஒரு பெரும்படையைத்திரட்டி குருமண்டலத்தின் மீது ஏகச் செய்தான். இவ்வமயமும் இப்பெரும் படையைத் தலைமைவகிக்க அஜப்கான் ஏற்படுத்தப்பட்டான். மொகல் படையின் முதல் தோல்வியின் சமயமிருந்து, துர்க்காவதி இராணியார் பெரும் படையைச் சேகரிக்கவே முற்பட்டிருந்தனள். தன் உயிர் இருக்கும் வரை போர்புரிவதிலிருந்து பின்வாங்குவதில்லை யென்ற நிச்சயம் கொண்டவளாகவும் இருந்தனள். எனவே இவ்விரண்டாம் போர் முனையிலும் குருமண்டலத்தின் சேனைகளே வெற்றி கொள்ள, அஜப்கான் தோல்வியுற்றுத் திரும்பலானான். இவ்வமயம் சில நாட்கள் வழியில் தங்கி, ஒரு யோசனை செய்தான். அதாவது, மொகல் மன்னனிடம் இத்தோல்வியுடன் திரும்பினால் தனது தளகர்த்தத் தன்மை மிக்க இழிவுக்குள்ளாகு மெனக் கருதி தன் படையை அங்கே நிலைநிருத்திக் கொண்டு தேற்றி குருமண்டலத்தின் படைகளைக் கலைப்பதற்கு அக்கம் பக்கம் கிராமத்தாரிடம் முயன்றான். பெரும் பொருள்களை அளித்து சில படைகளையும் தலை வீரர்களையும் விலகச் செய்தான். சில அணி வகுப்பில் சச்சரவுகளை உண்டாக்கி பிறிவுகளை ஏற்படுத்தினன். இன்னும் சிலருக்குப்பெரும் ஊதியங்களையும், நில பலன்களையும் அளிப்பதாகவும், மொகல் ராஜ்யத்தில் உயர் பதவிகளையும் வாங்கிக் கொடுப்பதாகவும் சொன்னான். இவை யெல்லாம் சில மாதங்களில் செய்து முடித்து உடனே மூன்றும் படையெடுப்பைத் தயாரித்தனன். இவ்வமயம் துர்க்காவதி தன் நாட்டில் உண்டான சீர்கேடுகளை யெல்லாம் நன்கறிந்தவளாகி, தன் படையை முன் போல சேகரிக்கக் கூடாத நிலையிலிருப்பதையும் நன்குணர்ந்தவளாகி தன்னுடன் போர்க்களம் போகக்கூடிய நபர்களை யெல்லாம் ஒருங்குச் சேர்த்து அரங்கமேகினாள். அஜப்கானும் தன் படையை மிக்கதிறமையாக அணிவகுத்து காலை, மாலைகளில் போர் புரிவதும், மத்தியானம் இரவுகளில் ஆலோசனைகளில் அமரவுமானான். இவ்வமயம், துர்க்காவதியின் மகன் சுமார் 14 வயதினனாக இருந்ததினால் இவனையும் போர் அரங்கத்தின் தலைவனாக ஏற்படுத்தி சண்டையிடச் செய்தாள். சில நாட்களுக்கும் பின்னர் இச்சிறுவன் அரங்கத்தில் வாள் காயமுண்டு மாண்டான். இவனைச் சூழ்ந்திருந்த வீரர்கள் துர்க்காவதியிடம் ஓடி செய்தி தெரிவித்து இவளை அங்கு செல்ல வேண்டு மெனக் கேட்கவே, இவள் தன் அணி வகுப்பை விட்டு வெளியேகக் கூடாதென்றும், அவன் அவ்வணி வகுப்பில் மாண்டனனாகில் அவன் தல்பத்ஷாவின் வீரப் புதல்வனென்றும் அவனைக் கைலாசத்திற் காணலாம் என்றும் சொல்லித் தன்படையை நடத்தி அஜப்கானின் படையை எதிர்த்துப் போர் புரியச் செயதுக் கொண்டிருக்கையில், ஒரு அம்பு அவள் கண்ணிற் பாய்ந்தது. இவ்வம்பைப் பிடுங்கி எறிந்து விடலாமெனப் பன்முறை முயன்றும் முடியாமற் போனதினாலும், தானும் அரங்கம் விட்டு

போகாமல், யானையுடன் யானையும், குதிரை வீரர்களுடன், குதிரை வீரர்களும், காலாட் படையுடன் காலாட் படையும் போர்புரியச் செய்ய ஆர்ஞைகளை இட்டுக்கொண்டு அசுவாரூடையாக இங்கும் அங்கும் இக்கண்ணில் பாய்ந்திருக்கும் அம்புடன் சென்று கொண்டிருந்தனள். இவள் படைமுழுவதும் மொகல் மன்னனின் படையினால் மாளலாயிற்று. சில சிப்பாய்களே துர்க்காவதி இராணியின் பாதுகாப்பினர்களாக ஏற்பட்டிருந்தனர். அம்பினால் கண்ணிலும் மார்பிலும் கால்களிலும் சிதைவுண்டிருந்தும் மாலையில் அடுத்த நாளுக்கென போர் முடிந்து திரும்புகையில் தன் இருப்பிடத்தை மறைத்துத் தன்னை ஊடுருவிச்சென்று பாய்ந்து கிடந்த அம்புகளையெல்லாம் எடுத்துத் தானும் இனி மொகல்களின் பேரில் வெற்றிக் கொள்ளலாமென எண்ணங்கொண்டவளாயிருந்தும், மொகல் படையினால் சூழப்பட்டிருப்பதினால் இதை விட்டு வெளியேறிச் செல்லவும் கூடாதவளாகி அடிக்கடி போர்க்களத்தைப் பார்த்தவளாயும் தன் குருமண்டலக் கோட்டையை நோக்கினவளாயும் இருந்து, இதைப்பார்த்து கொண்டிருந்த பாதுகாப்பினர் இவள் என்ன விஷயத்திற்காக இவைகளை மாறிமாறிப் பார்க்கின்றனள் எதை தெரிந்து கொள்ளுமுன்னர், தன் உடை வாளை உருவி பிராணத்தியாகம் செய்துக் கொண்டனள்.

இவ்விதம் துர்க்காவதி இராணியார் மொகல் மன்னர்களுக்கு இணங்கி குருமண்டல நாட்டைக் கப்பம் செலுத்தவிடாமல் இருக்கச் செய்யவேண்டுமென வலுவந்தமாய் தல்பத்ஷாவை மணந்தும், பல வருடங்கள் ஆண்டும், முடிவில் எதிரிகளினால் பலவகையான துன்புறுத்தப்பட்டும் தன் உடைவாளினாலேயே தன் உயிரைப் போக்கிக் கொண்டனள் என இன்றும் கநௌஜ் பெண்கள் ஒரு கதையாக வீரவாக்குகளை கூறுங்கால் துர்க்காவதியை ஒப்பிடுவர். யஷோரேஷ்வரி தன் கணவனின் உறவினர்களை தன் கணவன் துன்புறுத்தக் கூடாதெனக் கங்கணம் கட்டிக்கொண்டு முயற்சித்ததில், கணவன் இணங்காதவனாகி, பல தீமைகளைத் தானே இழைத்துக் கொண்டும், போர் களத்தில் இராஜா மன்சிங்கின் தலைமையில் ஏற்பட்ட பெரும் படையினால் சிறையாக்கப்பட்ட பின்னரும் ஜெஸ்ஸோர் கோட்டையை மொகல் படை தாக்க எதிர்த்து போர் புரிந்து கடைசியாக கணவனுடன் சிறையாகி, காசியில் கணவனுடன் உடன் கட்டை ஏறியதைப் போலவே இராணி துர்க்காவதியும் இந்துக்களின் பிரீதிக்கெனவே தனக்கு உகந்த புருடனை மணந்து கைம்பெண்ணாகி அரும்புதல்வனையும் போர்களத்தில் இழந்தும், அதையும் பாராட்டாமல் போர்களத்தில் பல துன்பங்களை அநுபவித்து முடிவில் வீர சொர்க்கம் சென்றனள்.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(58-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினைந்தாவது அத்தியாயம்.

ஆஹா! சம்சாரத்தின் விசித்திரத்தை யாதென்று சொல்லுவது? மஞ்சுளமான வீணாகானத்தின் நாதம் அந்தக்கரணத்தைக் குளிரச் செய்கின்றது. கடோரமான விலாபஸ்வரமானது இருதயத்தைப் பிளக்கின்றது. சில இடங்

களில் பண்டித ஜனங்கள் உயர்ந்த விஷயங்களைக் குறித்து சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றார்கள். மற்றும் பலர் மதுபானத்தில் மயங்கிச் சண்டையிடுகின்றார்கள். சம்சாரம் அமிர்தமயமா அல்லது விஷமயமா வென்பகர யாரால் சாத்தியமாகும்?

அக்பர் பாதுஷா புண்ணிய யமுனாநதி தீரத்திலுள்ள ஆக்ரா நகரத்தைத் தனது ராஜதானியாகச்செய்து, அதற்கு 'அக்பர் பாத்' என்னும் பெயரிட்டனன். டெல்லி சக்கரவர்த்தியின் ராஜதானியெனிற் பிறகு கேட்பானேன்! புராணங்களிற் புகழப்பட்டுள்ள அமராவதிப் பட்டணமே மறுபடியுமிங்கு வந்துள்ளதோவெனப் பண்டிதர்களும் சம்சயிக்கும்படி அந்நகரம் வர்ணிக்க முடியாத சோலையுடனும், அபூர்வ வைபவத்துடனுமிருந்தது. ஓர் அரசனது பட்டராணி மீதியுள்ள ராணிகளைவிட விசேஷ வைபவங்களுடன் எவ்வண்ணம் சிறப்புற்றிருப்பாளோ, அவ்வண்ணமே மற்ற பட்டணங்களைக் காட்டிலும் ராஜதானியாகிய ஆக்ரா நகரம் சிறப்புற்றிருந்தது. ஆக்ரா நகரத்தின் நாலா பக்கங்களிலும் கருங்கற்களாற் கட்டப்பட்ட ஒரு கோட்டை ஆகாயத்தை யளாவிய மதிற் சுவர்களுடனிருந்தது. அக்கோட்டையின் பெருத்த கதவருகாமையில் வெண்மையான கற்களாற் கட்டப்பட்ட ஒரு சுந்தரமான மசூதி தென்படும். அம்மசூதியின் கோபுரங்கள் ஆகாயத்தையளாவி யிருந்ததால், ஸ்வர்க்கத்திற்குச் செல்லும் மார்க்கத்தைப் புண்ணிய சீலருக்குக் காண்பித்துக் கொண்டிருப்பதாகவே தோற்றியது. அம்மசூதியினெதிரில் 'நகினா மசூதி' யென்ற மற்றொன்றுங் காணப்படும். பாதுஷாவின் பேகம் நிதமும் அம்மசூதிக்குச்சென்று கொரான் வாசித்து வருவது வழக்கம். இதற்கருகில் மீனாபஜார் இருந்தது. அவ்விடம் ஸ்திரீகள் மாத்திரமே சென்று வருவது வழக்கம். அக்கடைகளின் மத்திய பாகத்தில் ஒரு ரமணீயமான மஹால் கட்டுவிக்கப்பட்டிருந்தது. அம்மஹாலின் சுவர்களில் நானாவித சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. அவ்விடம் பேகமும், பாதுஷாவின் கன்னிகைகளும் மாலை வேளைகளிலுட்கார்ந்து கடைகளின் அழகைக் கண்டு ஆனந்தித்து வருவது வழக்கம். பற்பல ஊர்களிலுமுள்ள வஸ்துக்களால் அக்கடைகள் நிரப்பப்பட்டிருந்ததுமன்றி, ஸ்திரீகளே கடைகளுக்குச் சொந்தக்காரராகவுமிருந்தனர். ஆகவே, கோஷாக்களாகிய மகமதிய ஸ்திரீகள் கொஞ்சமேனும் பீதியின்றி, அக்கடைகளில் தங்களுக்குத் தேவையான வஸ்துக்களை வாங்கவேண்டி, சீதளமான காற்று வீசிவரும் சாயங்கால வேளைகளில் அவ்விடம் வருவதற்கு சௌகரியமாயிருந்தது. நாள் முழுதும் சிறையிலடைபட்டிருக்கும் அவர்களது முககமலங்கள் அவ்விடத்திலேயே கொஞ்சநேரம் விடுதலையடைந்து வந்தன.

மீனாபஜாருக்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால், 'திவானெ ஆம்' அல்லது பாதுஷாவின் கச்சேரி தென்படும். அங்கே அக்பர் பாதுஷா நியாயாசனத்திலாரூடனாகி, காலத்தை யனுசரித்து, நியாய மூர்த்தியின் ரூபத்தைத் தரிப்பான். இக்கச்சேரியில் களங்கமில்லா ஸ்படிகத் தூண்களில் பாரசீகம், அரபி முதலிய பாஷைகளில் நீதியைப்போதிக்கும் வசனங்கள் செதுக்கப்பட்டிருந்தன. பற்பல வர்ணச் சலவைக் கற்களை அழகாக அக்கட்டடத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்ததால், தரையில் ரத்ன கம்பளமே விரித்திருப்பதாகப் பார்ப்பவரது கண்களுக்குத் தோற்றும். இக்கச்சேரிக்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் நான்கு உப்பரிக்கைகளுடன் கூடிய ஜோத்பூர் ராணியின் மஹாலையும், அதற்கருகில் ஓரழகிய கோயிலையுங் காணலாம். இப்பெருங் கட்டடங்களுக்கப்பால் சர்வ பாவங்களையும் பரிகாரஞ்செய்ய

வல்ல யமுனா நதி தீரத்திலுள்ளோர் பூலோக யாத்திரை முடிவுபெற்றபின் இளைப்பாறும்—அதாவது ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஸ்திரீ புருஷர்கள்—ஸ்மசானம் தென்படும். ஆஹா! என்ன அபூர்வமான காக்ஷி! இதைக் கண்டவுடன் எப்படிப் பட்டவர்களும் தமது பிறப்பை நினைத்து வைராக்யமடையாதிருக்க முடியாது. மசூதிகளும், தேவாலயங்களும் அடுத்தடுத்திருப்பதால், இந்து மகமதியர்களுக்குள்ளிருக்கும் அவிவேகபேதங்களை யகற்றும் அப்சர ஸ்திரீயொருத்தி, யமுனா நதி தீரத்திற் தோன்றியிருக்கின்றனளோவென சிந்திக்க நேரிடும். இத்தகைய புண்ணிய நகரத்தை அக்பர் பாதுஷா தனது முக்கிய வாசஸ்தலமாகச்செய்து ஆண்டு வந்தனன்.

பிரிய சகோதர சகோதரிகாள்! நாமிதுவரை புண்ணிய நகரமாகிய ஆக்ராவின் வைபவங்களைப்பற்றிக் கவனித்தோம். இனி பிரதாபசாலியான அக்பரது உதரத்தில் ஜனித்துள்ள புத்திரனது துஷ்கிருத்தியங்களை சிறிது விசாரிப்போம். தந்தை பரமேச்வரனது மகிமையை விஸ்தரிக்கும் பொருட்டு மங்கள காரியங்களிலேயே கண்ணாயிருக்கத் தனயனோ தன் தந்தைக்கு விரோதமாக அமங்கள கிருத்தியங்களைச்செய்து வந்தனன். பிதா சற்குணமே உருவாகவும், புத்திரன் துர்குண தேவதையின் அவதாரமாகவு மிருந்தார்கள். சுருங்கச் சொல்லுங்கால், தர்ம சாஸ்திரத்தில் வர்ணித்துச் சொல்லப்பட்டுள்ள ஸ்வர்க்கமும், நரகமும் ஒன்று சேர்ந்திருந்தன. புண்ணிய நகரமாகிய ஆக்ராவை இளவரசன் தன் பாவ கர்மங்களால் நரகக் கண்டமாகச் செய்து வந்தனன்.

உண்ணுதல், குடித்தல், சுகமாய் உறங்குதல், இச்செயகைகளே ஜீவனுக்காதாரமானவைகளென இளவரசன் காட்டி வந்தான், இரவும் பகலும் நானாவித மதுக்களை வேண்டியமட்டும் பருகி, பற்பல தேசங்களிலுள்ள தாசிகளின் நாட்டியம், மற்றும் பலவித தமாஷாக்களைக் கண்ணுற்ற வண்ணம் இளவரசன் இருந்து வந்தனன். நீதி, தர்மம், விவேகம் இவைகள் இருக்குமிடந்தெரியாது மறைந்து, அநீதி, அதர்மம், அவிவேகம் இவைகளே அவனிடங் குடிகொண்டிருந்தன. ஸ்மசான பூமியில் எவ்வண்ணம் நாய், நரிகள், பேய், கழுகுகள் மாமிசத்தைப் பக்ஷிக்க வாய்களைத் திறந்தவண்ணங் காத்திருக்குமோ, அவ்வண்ணமே இளவரசன் சலீமின் பயங்கரமான மஹாலில், இரவும் பகலும் பாவிகளும், சண்டாளர்களும் தமது விஷய வாசனையைத் திருப்தி செய்து கொள்ளும் பொருட்டுக் காத்திருப்பார்கள்.

சலீமின் விலாஸபவனத்தில் இன்று இவ்வளவு தடபுடலாயிருப்பதற்குக் காரணமென்ன? சூரியன் மேற்கு திசையைக் கிட்டியவுடன், விலாஸபவனத்திலுள்ளவர்கள் யாவரும் குதூகலங் கொண்டனர். பற்பல தீபங்களால் விலாஸபவனம் பிரகாசித்தது. தாழை, ரோஜா, மல்லிகை, மகிழம் முதலிய புஷ்பங்கள் நாலாபக்கங்களிலும் வாசனையை வீசி வந்தன. இளவரசன் சலீம் மஞ்சத்திற் சயனித்த வண்ணம் எண்ணிறந்த விளக்குகளைக்கண் கொட்டாது பார்த்து வந்தனன். ஆனால் அவன் மனமோ, தன்னைத் தரிசிக்கவரும் சுந்தரியையே நாடியிருந்தது. காலடிச் சத்தத்தைக் கேட்டால் திடீரென திடுக்கிட்டெழுந்து ‘சுந்தரி’ யென அழைத்து, மிருச்சகடிக மென்னும் நாடகத்தில் வசந்தசேனையை மோகித்த சகாரரைப்போல், தனது வேலைக்காரனை அச்சுந்தரியே யென நினைத்து கட்டிக்கொள்ளுவான். தான் எதிர் பார்த்திருந்த ஸ்திரீயல்லவென அறிந்தபின், விசனமுற்று, அவளது பெயரைச்சொல்லி ஜபஞ் செய்வான். இப்படி

யிருக்கும்பொழுது தலையிலிருந்து கால்வரை வெள்ளை வஸ்திரத்தால் மூடிய ஒரு ஸ்திரீ அதிவேகமாய் தன்னை நாடி வரக்கண்டனன். ஸ்திரீயின் உருவம் தன் திருஷ்டியிற்பட்ட மாத்திரத்தில் திடீரென எழுந்து எதிர்சென்று அவளை ‘சுந்தரீ’ என அழைத்து ஆலிங்கனஞ் செய்யவே, அவள் தன் முகத்தை மறைத்திருந்த வஸ்திரத்தை நிரைத்த தன் தலை தெரியும் வண்ணம் அகற்றி, மிக்க வினயமுடன், “இளவரசே! பொருமல்பேகம் இப்பொழுதுதான் வந்துள்ளாள்!” எனப் பகரக் கேட்டு, ஒரு அடி பின் நகர்ந்து நோக்க, தன் விஷய வாசனையைத் திருப்திசெய்யும் பொருட்டு நிதமும் பற்பல ஸ்திரீகளைக்கொண்டு வரும் கிழவி அவளென அறிந்தனன். உடனே தன்னை நாடிவரும் ஸ்திரீயை எதிர்கொண்டழைத்து வரத் தானே உப்பரிகையை விடுத்துக் கீழே சென்றனன். மஹாலிலுள்ள ஓர் கள்ள வழியினருகாமையில் ஒரு மேனா வந்து நின்றது. அதினின்றும் அழகு வாய்ந்த தருண ஸ்திரீயொருவள் இறங்க, இவன் முன்னுற்சென்று அவளது சுகுமார கரத்தைப் பிடித்து வரவேற்றுபசரித்து, உப்பரிகைக்கு அழைத்துச் சென்றனன். ஆஹா! இந்த ஸ்திரீ யாராயிருக்கக்கூடும்? தரித்திரத்தால் அநீதியான மார்க்கத்தை யனுசரித்துள்ள ஓர் துர்ப்பாக்கியதருணியாயிருக்கலாமோ? பர்த்தாவால் துர்நடத்தை காரணமாக நீக்கப்பட்ட பாக்கிய மற்ற ஸ்திரீகளிலொருத்தியா யிருக்கலாமோ? மூர்க்கனும், மடையனுமான கணவனையடைந்த ஒரு மடந்தையா யிருக்கலாமோ? ஒருகாலுமில்லை! லக்ஷ்மி, சரஸ்வதி இவ்விருவரது கிருபா திருஷ்டியைப் பெற்றவனும், பாதுஷாவினாற் போற்றப்படுபவனும், இந்துக்கள், மகமதியர்களது பிரியத்திற்குப் பாத்திரப்பட்டவனுமான மந்திரிகளிலொருவனாகிய பைஜியின் மனைவியே இத்தருணி! இவள் மிக்க அழகு வாய்ந்திருந்த காரணத்தால், தன் வலையிற் பற்பல தருணர்களைச் சிக்க வைத்து வந்தனள்.

இவ்வண்ணம் நற்குலத்திற் பிறந்துள்ள இத்தருணி எல்லோரும் நிந்திக்கும் அநீதியான இவ்வியாபாரத்தைச் செய்து வரும்போது, கல்வி மிக்க இவளது கணவன் நற்தருமங்களை எங்கும் ஸ்தாபிக்கும் பொருட்டு பாதுஷாவிற்கு உதவிபுரிந்து வந்தனன். எல்லாத் தர்மங்களிலுமுள்ள சாராம்சங்களைக் கண்டு பிடித்து, அக்பர் பாதுஷா ஸ்தாபித்துள்ள புதிய மதத்தைக் குறித்து இரவும் பகலும் வாதவிவாதங்கள் நடந்துகொண்டிருந்ததென முன்னுலேயே கூறப்பட்டுள்ளது. இன்று பைஜி வழக்கப்படி அந்த விவாத சபைக்கு தர்ம விஷயமாய்ச் சம்பாஷித்து வரும் பொருட்டு சென்றிருந்தனன். ஆஹா! என்னே சம்சார விசித்திரம்! சர்வ ஜனங்களுக்கும் நீதி மார்க்கத்தைக் காண்பித்து, பூலோகத்திற்கு ஸ்வர்க்க சுகத்தைக்கொண்டு வரவேண்டி ஒரு புறத்திற் பதியானவன் பிரயத்தினஞ்செய்து கொண்டிருக்க, மற்றொரு புறத்தில் மனைவியானவள் அகோர நரக குண்டத்தை நிர்மாணிக்கத் தலைப்பட்டுக் கொண்டிருந்தனள். கணவன், தர்மம், நீதி முதலிய விஷயங்களை நிலை நிறுத்த ஏற்பாடு செய்துகொண்டிருக்க, அவனுக்கு வாழ்க்கைப்பட்டுள்ள மனைவி அநீதியையும், அதர்மத்தையும் நிலை நிறுத்த வழிதேடி வந்தனள். பதிக்கும் பத்தினிக்குமுள்ள வித்தியாசங்களை விஸ்தரிக்க மாளுமோ?

பர புருஷர்களைத் தன் மோகவலையிற் சிக்க வைக்கும் ரஜியா, இளவரசன் சலீமின் பிரேமைக்குப் பாத்திரமாகி, அவனது முக்கிய பேகமாகவேண்டுமென அவாக்கொண்டிருந்தனள். சலீம் அவளது கழுத்திற் கரத்தை யிட்டு, “கண்மணி! இன்று சந்திரன் இங்

கேயே உதயமாயுள்ளான்" எனவே, "அரசே! இச்சரணங்களது தரிசன மெப்பொழுது கிடைக்குமோ வெனக் காத்திருந்து, என் கண்கள் பூத்துப்போயின. அல்லாவின் கிருபையால் இத்தினமே சுதினமாயிற்று. இன்றே கிருதார்த்தமானேன்" என்று வினயத்துடன் பகர்ந்தனள் ரஜியா.

சலீம்:—"சுந்தரீ! இன்று எப்படி உனக்கிங்கு வரச் சமயம் வாய்த்தது?"

ரஜியா:—"இதுவும் அல்லாவின் கிருபையே! இப்பொழுது சில நாட்களாய் எனது யஜமானரும், அவரது சகோதராகிய அபுல்பாசலும் இந்துக்கள் பக்கஞ்சேர்ந்து ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்து வருவது உமக்குந் தெரிந்த விஷயமே. பாதுஷாவும் இம்மூர்க்கர்களுக்கு உதவிசெய்து வருகின்றார்."

சலீம்:—"அச்சங்கதிகள் யாவற்றையும் நானுமறிவேன். அபுல்பாசலும், அவனது சகோதரனாகிய பைஜியும் இக்காரியத்தில் முக்கியஸ்தர்களாக இருப்பதையும் நானறிந்துள்ளேன்."

பைஜியின் நாமதேயத்தைக் கேட்ட மாத்திரத்தில் நாடகி ரஜியாவானவள் மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்பவள்போல் பாசாங்குசெய்து, தேகத்தைக் குலுக்கியவண்ணம் தரையிற் பிரேதத்தைப்போல் திடீரெனச் சாய்ந்தாள். இவளது அவஸ்தையைக் கண்ட சலீம் பீதியடைந்தவனாய், உடனே யெழுந்து நின்று, 'ஷர்பத், ஷர்பத்' எனக் கூவி, வேலைக்காரர்களை ஷர்பத் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தனன். இளவாசனது குரலைக்கேட்ட மாத்திரத்தில், இரண்டு மூன்று வேலையாட்கள் ஷர்பத் பேலாக்களைக் கரத்திலேந்தி அவன் முன் நின்றார்கள். சலீம் கீழே உட்கார்ந்து கொஞ்ச நேரம் விசிறிக்கொண்டிருந்தனன். பிறகு ஓர் வேலைக்காரனிடம் விசிறியைக் கொடுத்து, அவளை விசிறிக்கொண்டிருக்கும்படி பகர்ந்து, ஒரு பேலாவை வாங்கிக் கொஞ்சங் கொஞ்சமாய் ஷர்பத்தை அவளது வாயில் ஊற்றினான். பேலாவிலிருந்த மது அவளது அதரத்தில் வீழ்ந்த மாத்திரத்தில் ரஜியா கண்களைத் திறந்து கைகால்களை அசைத்தனள். கொஞ்ச நேரம் தன் நாடகத்தை நடித்துக் காட்டியபின், அவள் மெதுவாக எழுந்திருந்துட்கார்ந்து, ஆச்சரியமடைந்தவள்போற் பாசாங்குசெய்து, நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்து, மிகவுந் தாழ்ந்த குரலில், "நானெங்கே யிருக்கிறேன்? சகிகாள்! என்னைத் தனியாக விடுத்து எங்கு சென்றீர்கள்? அடியம்மா! இதெல்லாமென்ன: என்னை க்ஷமியுங்கள்! க்ஷமியுங்கள்!" எனப் பகர்ந்த வண்ணம் மறுபடியும் மூர்ச்சையுற்று திடீரெனத் தரையில் வீழ்ந்தாள்.

சலீம் மறுபடியும் கையிலுள்ள ஔஷதத்தை ரஜியாவின் வாயில் ஊற்றவே, அவள் அதிக நேரம் பாசாங்குசெய்யாது சீக்கிரமெழுந்திருந்தனள். இளவரசனும் அவளை நோக்கி, "பிராணேச்வரீ! உனது துக்கத்திற்கு நானே காரணமாயிருப்பதால் என்னைத் தயவுசெய்து க்ஷமிப்பாய்!" என்றனன்.

ரஜியா:—"க்ஷமிப்பதா? தாமோ என்னை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றீர்? ஆஹா! என்ன பாக்கியத்தைச் செய்தவளானேன்? எனது துக்கத்திற்குக் காரணம் தாமோ? நான் எனது கர்மத்தின் பலனை யனுபவிக்கின்றேன். இப்பாவி இவ்வளவு சன்மானத்திற்கும் பாத்திரப்பட்டவளல்ல."

சலீம்:—"உன்னைப்போலுள்ள அருமையான ரத்தினம் ஒரு சண்டாளனது கையிற் சிக்கியுள்ளது. ஆஹா! அல்லாவினது விளையாட்டின் விசித்திரத்தை யாதென வர்ணிப்பேன்! குருடன் கையிற் கலோசனம்! சரி, இஃதி

ருக்கட்டும். உனது கணவன் மதுர மதுக்களைக் கொடுத்து எப்பொழுதாவது உன் மனதை ரஞ்சிக்கச்செய்வதுண்டா?"

ரஜியா:—"என்ன? மதுரமான வார்த்தைகளிருந்தாற் போதாதா? இரவும் பகலும் புஸ்தகமுங் கையுமாகவே யிருக்கின்றார். சுகம் என்பதின் வாசனையே யறியாதவர். அவர் தமது புஸ்தக அறையையே விலாஸபவனமாகக் கருதியுள்ளார். ஜீவனற்ற புஸ்தகங்களே அவரது மித்திரர்கள். பிரமை கொண்டவரைப்போல் எப்பொழுதும் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது சில நாட்களாய் அவர் மனம் ஒரு நிலையிலில்லை. இந்தப் புதிய தர்மத்திலேயே மனதைச் செலுத்தியுள்ளார். விலாஸிகளுக்குத் தகுந்த இரவு நேரங்களில் இவர் இந்துக்களுடன் உட்கார்ந்து சம்வாதஞ்செய்து கொண்டிருக்கின்றார். இப்படிப்பட்ட பதியுடனிருந்து வாழ்வதைக் காட்டிலும், விதவையாயிருப்பது ஆயிரம் மடங்கு மேலானதாகும்."

சலீம்:—"பிராணசுந்தரீ! ரஜியா! உன்னையொத்த விலையில்லா மாணிக்கம் இச்சண்டாளனது சகவாசத்திலிருக்கவேண்டியிருப்பதை நினைக்க மிக்க விசனமுண்டாகிறது. நீ இப்பொழுது மூர்ச்சையுற்று விழுந்ததால், உன் மனதிலுள்ள துக்கம் யாதென நன்கு விளங்குகிறது. நானுவித சுகங்களை யனுபவிக்கும் பொருட்டே ஈச்வரன் மனிதர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்துள்ளான்."

ரஜியா:—"என் கிருகத்தில் ஔஷதத்திற்கும் ஒரு துளி மதுவகப்படாது. இளவரசனது சரணங்களின் கிருபையால் என் மனம் இன்று சந்துஷ்டி யடைந்தது. கோடை காலத்தில் தவித்து நிற்கும் பூமியில் நல்ல மழை யடித்தால் ஜனங்கள், விலங்குகள், பறவைகள், மற்றுஞ் செடிகொடிகள் யாவும் எவ்வண்ணம் திருப்தியடையுமோ, அவ்வண்ணமே மதுபானத்தால் என் மனம் சமாதானத்தை யடைந்துள்ளது."

சலீம்:—"என்ன! அமிர்தம் போன்ற மது உனது வீட்டில் உபயோகப்படுத்தப்படுவதில்லையா!"

ரஜியா:—"உபயோகப்படுவதொரு புறமிருக்கட்டும். மது என்ற வார்த்தையை அங்கே உச்சரிக்கவுங் கூடாது. மதுவை ஸ்பரிசஞ் செய்வதில்லை யென்று சத்தியஞ் செய்பவர்களையே வீட்டில் வேலைக்கு அமர்த்தி யிருக்கின்றார். இதற்கு விரோதமாக யாராவது செய்துவிடில், அவர்கள் மறுபடியும் அந்த வீட்டிற் காலெடுத்து வைக்கமுடியாது."

இவளது வார்த்தைகளைக் கேட்டுவந்த சலீம் அவளை நோக்கி, "நிரம்பவும் அழகாயிருக்கின்றது! இந்த இருசகோதரர்களும் இவ்வளவு படித்தும் பலன் யாது? யாரடா அங்கே? இரண்டு பேலா ஷர்பத் கொண்டுவா" என்றனன். உடனே ஒருவன் ஷர்பத் நிறைந்த இரண்டு பேலாக்களை இராஜ புத்திரனிடம் நீட்டினான். அவைகளிலொன்றை ரஜியாவிடங் கொடுத்து, மற்றொன்றைத் தான் வாங்கிக்கொண்டனன். பிறகு கொஞ்ச நேரத்தில் இருவரும் அப்பேலாவிலுள்ளதைப் பருகி, மெய்மறந்து உருண்டார்கள்.

விடியற்காலம் சமீபித்து விட்டதென சர்வ ஜனங்களுக்கும் எச்சரிக்கை செய்யும் கோழிகள் கூவ ஆரம்பித்தன. தமது பர்த்தாக்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களே தெய்வமெனப் போற்றும் பதிவிருதைகள் பின் உறங்கி முன்னெழவேண்டிய நியாயப்படி எழுந்திருந்தனர். பாரிஜாத புஷ்ப வாசனை எங்கும் பரவிவந்தது. ஆந்தைகள் தமது வைரியாகிய சூரியன் உதயா

சலத்தில் புறப்படுஞ் சமயம் வந்து விட்டதென மரங்களின் பொந்துகளிலும், பாழான வீடுகளிலும் மறைந்து கொண்டிருந்தன. சந்திரன் கீழ் மக்களின் நிந்தையினின்றுந் தப்பவேண்டுமே யென்ற பீதியுடன், மிக்க அவசரமாய்த் தன்னில்லத்தை நோக்கி நோக்கி நடந்து கொண்டிருந்தான். இப்படிப்பட்ட சமயத்தில், நற்குலத்திற்கு அபகீர்த்தியைக் கொணரும் நமது ரஜியா, தன் கணவன் வீடு சேருமுன் தான் வீட்டையடைய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனள். ஆனல் இளவரசனது முக்கிய பேசமாக வேண்டுமென்ற துராசையால், அவனது மனதையறிய விரும்பியவளாய், அவனிடம் விடைபெறும்போது, "இனி கடவுளது இச்சை என்றிருக்குமோ அன்றே நாம் ஒருவரையொருவர் சந்திக்கலாம்."

சலீம்:—"ஏன்! கடவுளது இச்சையேன்! இந்த மஹால் உனதே! என்று உனக்கிச்சையிருக்கின்றதோ அன்று நீ இங்கு வந்து போக யாதொரு தடையுமில்லை."

ரஜியா:—"ஆம் இங்குவர யாதொரு தடையுமில்லை. ஆயினும் நான் பாஸ்வாதீனத்திலிருப்பவளன்றோ? இப்பொழுது சில நாட்களாய் அவர் என்மேற் சந்தேகங் கொண்டிருப்பதால், என்னைச் சுற்றிக் காவல் வைத்துள்ளார். அப்படியிருந்தும் நானின்று மிக்க சாதுரியமாய்க் கிளம்பித் தமது சரணத்தை யடைந்தேன். ஆனல் நிதமும் இக்கள்ள வழியையே அனுசரிப்பதென்றால் அழகல்ல. ஆகவே இதற்கு வேறு ஏதாயினும் உபாயஞ் செய்தால்—"

இவ்வார்த்தைகளைக் கேட்ட இளவரசன் மிக்க கோபங்கொண்டவனாய், உரத்த குரலில், "நானும் அந்த விசாரத்தையே கொண்டுள்ளேன். நமது சுகத்திற்கு நடுவில் நிற்பவனை யழிக்காமல் இந்த மஹாலின் ஒரு க்ஷணமேனுமுட்கார்ந்திரான்" என்றனன். இருக்க இருக்க அவனது கோப மதிகரித்துக்கொண்டே வந்தது. அளவு மீறிய மதுபானத்தாற் சிவந்திருந்த கண்கள், பிசாசைப்போல் நின்றுகொண்டிருந்த தலைரோமம் முதலியவைகளோடு கூடிய பயங்கர முகம் இவை பூதத்தையும் பீதியடையச் செய்யும்படி யிருந்தன. வைரியாகிய பைஜி தன்னெதிரிலேயே நின்றுகொண்டிருப்பதாக நினைத்து, தன் மஞ்சத்தினின்றும் குதித்து, ரஜியாவை ஒரு புறமாகத் தள்ளி, வாளையுருவி, இவன் கண்களுக்கு முன் தோன்றிய பைஜியைக்கொல்லப் பாய்ந்தனன். இதைக் கண்ட அப்பெண் பிசாசும் அவனைத் தடுத்து, அவன் கோபத்தைத் தணிக்கக் கருதி, "பிரியகரா! இப்படி கோபங்கொள்ளக் காரணமில்லை. சாந்தமடையும்! அவசரத்திற் செய்யுங் காரியம் யாதொன்றும் சித்தியடையாது. இங்கே பைஜியிருந்தாலல்லவோ நீர் கோபங் கொள்ளுவதற்கு?" என்றனள்.

அக்கினியில் தண்ணீரை ஊற்றினல் எப்படி சுவாலை யடங்குமோ, அப்படியே தனது பிரியத்திற்குப் பாத்திரமாகிய ரஜியாவின் மதுரமான குரல் காதில் விழுந்த மாத்திரத்தில் இளவரசனது குரோதாக்கினி குறைந்தது. கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தபின், "பிராணேச்வரீ! நீ இன்னும் என் சங்கதி முழுவதையுமறியவில்லை. இப்பொழுது சில நாட்களாய் அந்த பைஜி என்னையும துவேஷித்து வருகின்றனன். அவனைக் கண்டால் என் கோபம் பொங்கி யெழுகின்றது. பாதுஷாவை யுத்தேசித்தே நான் பேசாதிருக்கின்றேன். இல்லையேல் அவனைத் தொலைக்க எனக்கெவ்வளவு நேரமாகும்?" என்றனன்.

தனதிச்சையை சித்திக்குக் கொண்டுவர இளவரசனை இதுவரை தூண்டியும் திருப்தியடையாதவளும், தன் சௌக்கியத்தைத் தன் காத்தாலேயே அழிக்கத் தயாராயிருந்தவளுமாகிய ரஜியா, "பிராணேச்வரா! மூன்கோபம் உமக்கதிகமாயிருக்கிறது. ஆனல் இக்காரியத்தை அவசரப்பட்டுச் செய்யாது, யுக்தியாலேயே செய்வீராகில், உமக்கு வெற்றியே கிடைப்பதுமன்றி, இத்தாசியினது கஷ்டத்தையும் நிவர்த்தி செய்தவராவீர்!"

சலீம்:—"கண்மணீ! நீ இதைக் குறித்துக் கொஞ்சமேனுங் கவலை கொள்ளக்காரணமில்லை. என்னை என்ன! மூடனெனவோ நினைத்தாய்?"

ரஜியா:—"இது வாஸ்தவந்தான். ஆயினும் அவனிடம் ஜாக்கிரதையாகவே யிருக்க வேண்டும். பாதுஷாவின் காதைக் கடித்து உம்மை யுவராஜ பதத்தினின்றும் நீக்க அவன் கொஞ்சமேனும் பின் வாங்கான். அந்த இரு சகோதரர்களும் தற்சமயம் பாதுஷாவின் இரு கண்களாய் விளங்குகின்றார்கள்."

சலீம்:—"நானும் அவையாவற்றையு மறிந்துள்ளேனாதலால், அவர்களிருவரையும் இவ்வுலகத்தினின்று மகற்ற வழிதேடி வருகின்றேன்."

தனதிச்சை கூடிய சீக்கிரத்தில் சித்தியடையுமென்ற சந்தோஷத்துடன் ரஜியா இளவரசனிடம் விடைபெற்று, மேனவிலுட்கார்ந்து, கணவன் வீடு வருவதற்கு முன் தான் வீடு சேர்ந்து உறங்குபவள்போற் பாசாங்கு செய்துகொண்டே மனோ ராஜ்பத்தி லாழ்ந்திருந்தனள். கொஞ்சநேரங் கழிந்தபின், தன் மனைவியின் கபடத்தை யறியாத பைஜியும் வீட்டை யடைந்தான். ஆகா! இந்த ஸ்திரீயின் யோக்கியதையை என்னென்று சொல்லுவது.

பழனியாண்டவன் பெருமை.

முருகப் பிரசாதம் பெற்ற ஒரு மாது.

யாரை முகத்தோனைத்துதித்து, பின் அவர் இலையோனைப் பற்றி எழுதப்புகுவோமாக.

இவ்வுலகின் கண் மானிடராய் ஜனித்த நாம் கடவுளை இடைவிடாமல் ஸ்மரிப்பதே நாம் ஈசனுக்குச்செய்யும் முதற் கடமையாகும். இந்திர ஜாலம் போன்ற இவ்வுலகில் அவர் செயல்இல்லாமல் யாதொன்றையும்செய்வதற்கு நம்மால் இயலாது. சர்வ ஜகத்தையும் சிருஷ்டி செய்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய இவைகள் அவருக்கு ஓர் லீலையாய் ஏற்பட்டிருக்கின்றன. அநித்தியமான இச்சரீரத்தை அடைந்த நாம் பேரின்பமான பதவியை அடைய மார்க்கம் இந்த மன உடலிலே யன்றி மற்றபடி ஜன்மாவில் அடைவது துர்லபம். அப்பரஞ்ஜோதியான வஸ்துவின் கருணைப்பிரபாவத்தை நாம் சிறிது சிந்தித்துப் பார்த்தால் நம் புத்திக்குப் புலப்பட்டு அநேக விஷயங்கள் தோற்ற ஆரம்பிக்கும். பாரில் ஓர் அற்ப உபகாரம் செய்தவர்களுக்கு நாம் எவ்வளவோ நன்றி அறிதலைச்செய்யக் கடமைப்பட்டிருக்கும்போது எண்ணற்ற பேருதவியான வஸ்துக்களைப்படைத்திருக்கும் அப் பராபர வஸ்துவை நாம் எப்படி வந்தனம் செய்யாமல் இருக்கக்கூடும். அவர் செய்த உதவியோ எண்ணற்றது. இஜ்ஜகத்தில் பிரகாசத்திற்குச் சூரிய சந்திராதிகளையும், சுவாசிக்க வாயுவையும், அருந்த திவ்யதீர்த்தத்தையும், அன்னபானுதிகளைப்பக்குவப்படுத்த அக்கினியையும் இன்னம் ஸ்தாவரஜங்கமங்களில் உலகில் கணக்கற்ற பொருளையும் அரும்பிலிருந்து மகா மேரு பர்வதம்

அடங்க சகல வஸ்துவையும் எறும்பு முதல் யானை அடங்க சகல பிராணிகளையும் மனிதனையும் எல்லாம் ஈசன் ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுக்கும் சாதகமாகவே ஏற்படுத்தியிருக்கிறார் அன்றோ. ஆஹா! என்னே அவருடைய கருணை! அக்கிருபா சமுத்திரருடைய மகிமையை அளவிட்டுச் சொல்ல யாரால் கூடும். அப்பரப்பிரும்மம் முருக வேலாய் ஆவிர்பவித்து காக்ஷி தந்தருளிய பிரதாபத்தை ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் எடுத்துரைக்க இயலாதென்றால் கேவலம் இந்த அற்ப மானிடர்களால் சொல்லத்திறமோ. சனகாதி யோகிகளும் காணக்கிடைக்காதுவருந்திய அத்திவ்விய தேஜோமயத்தைக் கேவலம் புழுவுக்குச் சமானமான ஒருபதர் எழுதத்துணிந்தது விந்தையிலும் விந்தையே. பலதுளி பெருவெள்ளமாவதுபோல் பிரதி ஜன்மந்தோறும் அப்பரமாத்மாவை தியானித்து வந்தால் ஒரு காலத்தில் அதற்குப் பலமேற்படுமென்ற நம்பிக்கையை நாம் கைகொள்ளவேண்டியதாயிருக்கின்றது. யாவருமறியாத அநாதி வஸ்துவைச் சிறிது எடுத்துரைக்க இவ்வேழை மனம் தூண்ட இதை எழுதலாயிற்றன்றி வேறு ஒன்றும் சொல்ல இம்மனம் சக்தியற்றதாயிருக்கின்றது.

ஆறுமுகமும், பன்னிரு புஜமும், வேலாயுதமும், மயில்வாகனமும், கோழிக் கொடியுடன் வள்ளி தெய்வயானையுடன் வீற்றிருக்கும் காக்ஷியைக் காண எண்ணங்கொள்ளும்போதே இம்மனம் அடையும் ஆனந்தம் சொல்லி முடியாமலிருக்கும்போது அவருடைய சாயுஜ்ய பதவியை அடைந்தவர்களின் பெருமையைச் செப்பவும் வேண்டுமோ. இவ்வளவு மகிமை வாய்ந்த கந்தபிரான் பூவுலகில் வசிக்கும் அநேக இடங்களில் திருப்பழனி ஒன்றாகும். சகலகுண கலியாணன் வசிக்கும் இடத்தை சாக்ஷாத் குமரன் வசிக்கும் கந்தபுரமென்றே சொல்லவேண்டுமே யொழிய சாமானியமாய் மானிடர்கள் வசிக்கப்பட்ட இடமென்று சொல்வதற்கில்லை. சாலையில் இருபக்கமும் பாற் காவடி எடுத்துச்செல்லும் பக்தர்களும் அவர்கள் "முருகனுக்கு ஹரோ ஹரா" "தண்டாயுத பாணிக்கு ஹரோஹரா" என்று கூவும் சத்தமும் கேட்கக் கேட்க மனதில் தன்னறியாமல் ஓர் ஆனந்த பரவசம் ஏற்பட்டு எப்படிப் பட்ட பாபியின் மனதும் கண்மணி பாலசுப்பிரமணியனிடம் சென்றுவிடுமென்றால் அந்த கருணைவள்ளலுடைய புகழை எடுத்துரைக்கமுடியுமோ. மலையின் அடிவாரத்தில் யாத்திரிகர்கள் திரள் திரளாய்மோட்டார் பஸ்களில வந்து இறங்கும் சத்தமும் காவடியுடன் செல்லும்வைபவமும் திருப்புகழ்,காவடிச் சிந்து வாசிக்கும் மேளவாத்திய ஓசையும் கடல் ஒலிபோலச் சப்திக்கும் மகிமையே மகிமை. சத்திரங்களிலே கலியாணம் செய்பவர்கள் கணக்கும் முடிவாங்கும் குழந்தைகளுடைய சங்கையும் காவடி எடுத்து கிரியைச் சுற்றிவரும் பக்தர்களுடைய எண்ணிக்கையற்ற கோலமே கோலம். மலைக்கு அபிஷேக சாமான்களை கூடைகளில் எடுத்துச் செல்லும் கூட்டமும் மலையில் இருபாரிசத்திலும் பிச்சைகாரர்கள் ஓலமிடும் சததமும் ஸ்ரீராம தூதப்படைகள் ஏறிச்செல்வோரின கைபபழததைப் பறிக்கும் காட்சியும் அருள்வந்து காவடியைச் சுழற்றி ஆடுபவர்களைப் பின்தொடர்ந்து ஓடும் ஜனங்களின்கோலாகலமும்,மலையில்வீசும்குளிர்ந்த காற்றுடன் அபிஷேகம் செய்த வெட்டிவேர் சந்தன வாசனையும் கண்டாமணியின் ஓசையும் முத்துகுமாரனைத் தெரிசனம் செய்யப் போகிறோமென்று ஆனந்தம் மேலிட ஏறிச்செல்லும பக்த சிகாமணிகளுடைய குதூகலமும, அவ்விடத்தை நோக்கின அது பூலோக கைலாசமேஎன்று ஐயமுற்று பிரமிக்கும ஆச்சரியமே ஆச்சரியம். காலையில் பாலாபிஷேக

மும் சம்பு குமாரனின் புன்முறுவலும் பார்க்க நமக்கு நேரே வந்து காட்சி தர உருக்கொண்டனரோ என்று ஒவ்வொரு ஹிருதயத்திலும் தோன்றும் எண்ணமே எண்ணம். சந்தன அபிஷேகமும் உடன் விபூதி அபிஷேகமும் காஷாய வஸ்திரமும் கழுத்தில் ருத்ராக்ஷ மாலையும் கையில் தண்டாயுதமும் இளமுறுவலுடன் பக்தர்களுக்கு "பயப்படாதே" என்று அளிக்கும் ஆண்டிப் பண்டாரத்தின் காட்சியை அடைந்தவர்களே இவ்வுலகில் பாக்கியவான். பஞ்சாமிர்த அபிஷேகமும் வெட்டி வேர்ச்சடையும் அஞ்சனமிட்ட விழியும் இளம் பாலவடிவும் சாந்தமே உருக்கொண்ட முகமும் கண்டவர்கள் கண்களன்றோ கண்கள். கந்தசஷ்டி உற்சவத்தன்று ஏறும் தங்க மயில் வாகனமும் அணிந்த முத்தங்கி மேனியும் சர்வாபரண பூஷிதராய் விளங்கும் ஜகன்மோகன விக்கிரகத்துடன் எண்ணற்ற பக்த கோடிகள் பின்தொடர, பதினெட்டுவித வாத்தியம் ஒலிக்க, இருபுறத்திலும் யானை வெண்சாமரம் போட, தேவர்கள் பூமாரி சொரிய, தேவதாசிகள் நாட்டியமாட, வேதியர்கள் மறை ஓத, தீவட்டி மத்தாப்புடன் கிரியைச் சுற்றி வந்து சூரனைச் சக்தி வேலாயுதத்தால் ஸம்ஹாரமும் செய்த கோலாகலப் புருஷனைத் துதிப்பவனே மேதினியில் பாக்கியவான் ஆவான். நாணற் புதரில் தங்கிக் கார்த்திகையர்கள் பால் உண்ட பாலன் அடியார்கள் இடர்களைத் தீர்க்கவென்றே இக்குன்றில் வந்து தங்கிய வைபவமே வைபவம். 'முருகா' என்று ஒரு தரம் ஸ்மரித்த மாத்திரத்தில் ஸர்வாபீஷ்டங்களையும் அளிக்க வல்ல அவ்வள்ளி மணவாளன் ஒரு பழத்திற்காக இக்குன்றின்மேல் தங்கிய சிலாக்கியமே சிலாக்கியம். மச்சக்காவடியும் சேவல் காவடியும் எண்ணற்ற பாற் காவடியும் கண்டுஉள்ளம்பூரித்துப் புன்னகையுடன் பார்வதி மைந்தன் பரதேசிக் கோலம் பூண்ட ஆனந்தமே ஆனந்தம். ஆறுமுக சோபையும், இடும்பனை அடக்கிய புஜமும், அவர் சன்னதி அலங்காரமும், சாதுக்கள் ஸ்துதியும், நான்முகனை சிறைபடைத்த ஞான பண்டிதன் சேர்வை புண்ணியவான்களுக்கு மட்டுமே அவனியிற் கிட்டும். அரிது அரிது சரவணன் தெரிசனம் காண்பதரிது! அதினிலும் அரிது குஹன் அருளை அடைவது. பின்னும் அரிது ஸ்வாமி நாதனை பக்தி பண்ணும் மனதை அடைவது. தாமே அச்சுந்திர மூர்த்தியைத் தெரிசித்து ஒவ்வொருவரும் தத்தம் (மன) இல்லத்தில் அச்சண்முக திவ்விய விக்கிரகத்தை ஆராதித்து என்றும் அழியாத பேரின்பப் பேற்றை அடைவோமாக.

சுபம்.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்தநாராயணய்யர்.

(38-ம் பக்கத் தொடர்ச்சி)

(இருபதாம் அத்தியாயம்)

மங்கி மாகாணம், அதைத் தார்த்தார்கள் கைப்பற்றித் தங்களது ஆளுகைக்குள்ளாக்கிய விதம், கொய்கன்ஸா, பௌகின், கயிம், தின்குவி, ஸின்குவி, ஜங்குவி, நாகின், ஸைன்பூ, ஸிங்கி, கியாங் நதி, சீனு தேசக் கப்பல்கள், ஸாயங்கி, ஸிங்கன்பூ, டின்குவி, குவி, விங்குவி, வாகியூ.

கீழ்த்திசையிலுள்ள நாடுகளிலெல்லாம் மிகச் செழிப்பும் பிரசித்தமுமானது மங்கியென்னும் நாடு. அதை 1269-ம் வருஷத்தில் பான்பூர் என்னும் பெயருடைய அரசன் ஆண்டு வந்தான். அந்நாட்டை அவனுக்கு முன் நூறு வருஷங்கள் ஆண்டு வந்த அரசன் ஒருவனுக்காகிலும் அவனது செல்வமும் பராக்கிரமுமிருக்கவில்லை. சாந்தமும் தர்ம சிந்தனையுமே அவனிடம் குடிகொண்டிருந்ததினால் அவனது குடிகள் அவனிடம் அதிக விசுவாசமாயிருந்தார்கள். அவனது ராஜ்யமும் நன்றாகக் காவல் காக்கப்பட்டு வந்தது. அவனது ராஜதானியைச் சுற்றிலும் நீர் நிறைந்த அகழ்கள் இருந்தன. இக்காரணங்களினால் அவன் தான் ஒருவராலும் ஜயிக்கப்படாதவனென்றும் தனக்கும் தனது பிரஜைகளுக்கும் யுத்தப்பயிற்சியும் ஆயுதப்பயிற்சியும் அனாவசியமென்றும், தான் ஒருவருக்கும் பயப்படக் காரணமில்லை யென்றும் நினைத்துத் தனது காப்புக்காக ஒரு குதிரைப்படை கூட வைத்துக்கொள்ளவில்லை. நாளடைவில் அவன் மித மிஞ்சிச் சிற்றின்பத்திலாழ்ந்து தனது ஆயிரம் வைப்பாட்டிகளுடன் தன் கால முழுவதையும் உல்லாசமாகவே கழித்து வந்தான்.

ஆனால் அவன் நியாய பரிபாலனம் சரியாகச் செய்துகொண்டு, தேசத்தைக் குழப்பமில்லாமல் அமைதியாக ஆண்டு வந்ததினால், அவனது பார பக்ஷமில்லாத கொடுந்தண்டனைக்கு ஆளாவோமென்று பயந்து அவனது குடிகள் ஒருவரோடொருவர் சண்டை சச்சரவுசெய்து கொள்ளாமலிருந்தனர். இப்படி அவன் ஆட்சி செலுத்தி வந்ததினால் வியாபாரிகள் தங்களுடைய கடைகளை இராக்காலங்களிலுங் கூடத் திறந்து வைத்துவிட்டு அடிக்கடி வெளிச்சென்றாலும் புற மனிதர் அக்கடைகளுள் காலெடுத்தும் வையார். பிராணிகளும் புற நாட்டாரும் ஒருவருக்கும் பயப்படாமல் இரவு பகலாய் அந்நாட்டிற் பிரயாணஞ் செய்வார்கள்.

அவன் ஏழைகளிடம் கிருபை கூர்ந்து உண்ணச்சோறின்றித் தவிப்போரையும் தரித்திரத்தின் கொடுமையை அனுபவிப்போரையும் ஆதரித்து வந்ததுமன்றி வருஷா வருஷம் காப்பாற்றச் சக்தியின்றித் தாய்மாரால் விடப்பட்ட இருபதினாயிரம் குழந்தைகளை ஸ்வீகரித்து, அவர்களை வளர்த்து, அவர்களுக்கு வயது வந்தபொழுது, தொழில்களைக் கற்பித்துப் பின் கலியாணங்களும் செய்து வைப்பான்.

கூப்ளேகானின் சுபாவமென்றாலோ, பான்பூரின் சுபாவத்திற்கு முற்றும் மாறானது. அவருக்கு யுத்தம் செய்வதிலும் பிற நாடுகளைப் பிடிப்பதிலுமே சந்தோஷம். ஆதலால் தமது பெருமையை அதிகரித்துக் கொள்ளும் நிமித்தம் அவர் துரகபதாதிகள் நிறைந்த ஒரு சேனையைக் கூட்டி அதற்கு சின்ஸன் பயன் அல்லது நூறு கண்ணன் என்பவனைத் தலைவனாக்கி, அவனை மங்கி தேசத்தைப் பிடித்து வரும்படி அனுப்பினார்.

அவன் இச்சேனையுடனும் ஒரு கப்பற்படையுடனும் மங்கி தேசத்திற்கு வந்து கொய்கன்ஸா வென்னும் ஊரையடைந்து, அவ்வூராரைக் கூப்ளேகானுக்குக் கீழ்படியும்படி சொன்னான். அவர்கள் மாட்டோமென்றனர். அவன் சிறிதும் சந்தடியோ சண்டையோ செய்யாமல், ஒன்றொன்றாக வேறு மூன்று ஊர்களுக்குச் சென்று அவ்வவ்வூராரையும் கூப்ளேகானுக்குக் கீழ்படியும்படி சொன்னான். அவர்களும் கொய்கன்ஸா ஜனங்களைப் போலவே மறுத்துவிட்டனர். பின்பு அவன் வேறொரு நகரஞ் சென்று வெகு தைரியத்துடன் அதைத் தாக்கிப் பிடித்து, அங்குள்ள ஆண் பெண், சிறியோர் பெரியோர் எல்லாரையும் கத்திக் கிரையாக்கினான். இதைக்கேட்ட முந்தின நகரங்களிலிருந்தவர்களெல்லாம் உடனே அவனுக்குப் பணிந்து விட்டனர்.

அப்புறம் கூப்ளேகான் முன்னதைப்போன்ற பெரியதான பின்னுமொரு சேனையையனுப்பவும் சின்ஸன் பையன் இவ்விரண்டு சேனைகளுடனும் புறப்பட்டு பான்பூர் ராஜாவின் இருப்பிடமும் ராஜதானியுமான குவின்ஸே யென்னும் நகரத்தை நோக்கிச் சென்றான். அரசன் எப்பொழுதும் யுத்தமென்பதே கண்டவனல்லவாதலால், அதிகம் பயந்து, தன் மனைவியை யழைத்து, குவின்ஸே நகரத்தைக் கடைசிவரை காக்கவேண்டிய பொறுப்பு அவளுடையதென்றும், தோற்றுப்போனாலும், ஸ்திரீயானதால் அவளுக்கு அவமானமும் பிராண பயமும் இல்லையென்றுஞ் சொல்லி சில கப்பல்களைச் சித்தம்செய்து, அவற்றில் தன்னுடைய ஆஸ்திகளனைத்தையும் ஏற்றிக்கொண்டு எதிரிகள் பிடிக்க முடியாத சமுத்திரத்திலுள்ள சில தீவுகளுக்கு ஓடி அங்கு தனது காலத்தைக் கழித்தான்.

பான்பூர் ராஜாவுக்கு அவனது ஜோஸியர்கள், அவனது ராஜ்யமானது நூறு கண்ணனொருவனாலன்றி வேறொருவராலும் பிடிபடாதென்று சொல்லியிருந்தமையால் அதையறிந்த இராணி, ஒரு மனிதனுக்கு நூறுகண்களிருப்பது அசாத்தியமென்று நினைத்து என்னென்ன கஷ்டங்கள் வந்தாலும் தன் பட்டணம் எதிரிகள் கைவச மாகாதென்று நினைத்திருந்தாள்; இப்படியிருக்கையில் தார்த்தாரது சேனாதிபதியின் பெயர் சின்ஸன் பையன் அல்லது "நூறு கண்ணன்" என்று யாரோ சொன்னது இவளது காதுக் கெட்டியது. அதைக் கேட்டவுடன் இவள் மிகப் பயந்து, ஜோஸியர் சொல்லிய மனிதன் இவன்தானென்று நினைத்து, அவனை வரவழைத்துத் தன் நகரத்தை அவனிடம் ஒப்புவித்து விட்டாள். அப்பொழுது அத்தேசத்து நகரங்களிலும் கிராமங்களிலுமிருந்த சகல ஜனங்களும் கூப்ளேகானுக்குக் கீழ்படிந்தனர். இராணியை, சின்ஸன் பையன் என்பவன் கூப்ளேகானது சந்நிதியில் கொண்டு வந்து சேர்த்தான். கூப்ளேகானும் அவளைச் சகல ராஜமரியாதைகளுடனும் வரவேற்று ஒரு இராணியைப் போலவே நடத்தி வந்தான்.

இனி மங்கியிலுள்ள பட்டணங்களைப் பற்றிச் சிறிது சொல்வோம்.

கொய்கன்ஸா என்பது மங்கிதேசத்தின் தென்கிழக்கு, கிழக்கு எல்லையில், காமா நதியின் மேலுள்ள அதிசேர்த்தியும் தனம் நிறைந்ததுமான ஒரு பட்டணம். அங்கு கணக்கற்ற கப்பல்கள் அளவிட முடியாத வியாபாரச் சரக்குகளை சதாகொண்டு வந்து குவிக்கின்றன, அங்கு உப்பு மிகுதியாகச் செய்யப்படுகின்றது.

கொய்கன்ஸாவினின்று ஒருநாட் பயணம் வரை ஒரு நீண்ட கற்பாலம் இருக்கின்றது. அதன் இருபுறமும் கைப்பிடிச்சுவர்களும் ஆழமான நீர் நிலைகளுமிருக்கின்றன. அவற்றின் வழியே அந்நாட்டார் தங்களது கப்பல்களில்

பிரயாணஞ் செய்வார்கள். இக்கற்பாலத்தை விட்டால், மங்கி தேசத்திற்குச் செல்ல வேறு தரை மார்க்கம் கிடையாது. மற்றைய மார்க்கங்களெல்லாம் தண்ணீரின் மேலேயே செல்லுகின்றன. இந்த ஒரு நாட் பயணத்தின் கடைசியில் பௌகின் என்னும் நேர்த்தியான பெரிய நகரமொன்றுளது. அங்குள்ள ஜனங்கள் தங்கத்தினலும் பட்டினலும் பலவித சாமான்கள் செய்து விற்கின்றனர். அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். சீனச் சக்கரவர்த்தியின் காகித நாணயம் இந்நாடெல்லாம் வழங்கி வருகின்றது. மனிதருக்கு வேண்டிய சகல சாமான்களும் இங்கு கிடைக்கின்றன.

பௌகின் பட்டணத்துக்குத் தென்கிழக்கில் ஒருநாட் பயணத்தில் கயிம் பட்டணமிருக்கின்றது. அதுவும் ஒரு பிரசித்தமான பட்டணந்தான். அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் மீன்களும் மிருகங்களும் பறவைகளும் உண்டாகின்றன. பட்சிகளில் பெருந்த மயில்களே விசேஷம். அவைகள் வெகு மலிவாகவும் கிடைக்கின்றன. ஒரு வெனீஷியன் குரோட்டுக்கு அம்மயில்கள் மூன்று வாங்கலாம்.

அங்கிருந்து ஒருநாட் பயணத்தில், நன்றாக எருவிடப்பட்டதும், மிகவும் செழிப்பானதும், அதிக ஜன நெருக்கமுமுள்ள பிரதேசத்துக்கப்பால் தின்குவி நாடு இருக்கின்றது. தின்குவி பட்டணம் அதிகப் பெரிதல்லவென்றாலும் அங்கு போஜன பதார்த்தங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவ்வூரார் வியாபாரிகள். அவர்களிடம் கணக்கற்ற கப்பல்கள் உண்டு. அங்குள்ள மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் கணக்கேயில்லை. தின்குவி பட்டணம் அந்நாட்டின் தென் கிழக்கு பாகத்திலிருக்கின்றது. அதன் கிழக்கில், அதற்கு இடப் பாகமாகவும் சமுத்திரம் வரையிலும் பரவியுமிருக்கும் மூன்று நாட் பிரயாணமுள்ள பிரதேசத்தில் அனேக கண்டங்கள் இருக்கின்றன. அவற்றினின்று மிகுதியான உப்பு செய்யப்படுகின்றது. அதற்கப்பால் லின்குவி யென்னும் பெரிய பட்டணமிருக்கின்றது. அங்கிருந்துதான் மேற் சொல்லிய உப்பு ஏற்றுமதியாகின்றது. அவ்வுப்பினின்றும் சக்கரவர்த்திக்குக் கிடைக்கும் இலாபத்திற்கு அளவேயில்லை; சொன்னலும் புறநாட்டார் நம்பமாட்டார்கள். அங்குள்ள ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். அவர்கள் காகித நாணயத்தை வழங்குகின்றனர்.

லிங்குவியின் தென் கிழக்கில் ஐன்குவி யென்னுஞ் சிறந்த பட்டணமிருக்கின்றது. இருபத்தேழு வேறு பட்டணங்கள் அதன் அதிகாரத்துக்கு உட்பட்டிருக்கின்றன. அப்பட்டணத்தில் மாகாண அதிபர்களாக விருக்கும்படி குப்ளேகானல் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு பிரபுக்களில் ஒருவர் வசிக்கிறர். அவ்வூரார் விக்கிரகாராதனைக்காரர்கள். வியாபாரமே அவர்களது தொழில். அவர்கள் யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்களும் வேறு சாமான்களும் செய்கின்றனர். குப்ளேகானது நியமனப்படி மார்க்கோபோலோவானவர் அவ்வூரை மூன்று வருஷகாலம் மேற் குறித்த பிரபுவுக்குப் பதிலாக ஆண்டு வந்தார்.

தியாகம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி)

I

கடற் கரையில் ஸஹ்யாத்ரி மலையின் தொடர் முடிவு பெற்றிருந்தது. அடர்ந்த விருட்சங்களின் நிழலால் மலையிலிருக்கும் மேடுபள்ளங்களெல்லாம் மறைந்து, பச்சை ரத்ன கம்பளத்தால் மூடப்பட்ட ஆசனத்தைப்போல் அம்மலைத் தொடரின் கடைசிப் பிரதேசம் சோபித்துக் கொண்டிருந்தது. நீலவர்ணமான சமுத்திரத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கும் வெண்மையான அலைகள், நீலவர்ணமான ஆகாயத்தில் நிருத்தனம் செய்து கொண்டிருக்கும் வெண்மையான நட்சத்திரங்கள், கபிலவர்ணமான மணலில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் வெண்மையான கிளிஞ்சல்கள் இவைகளைப் பார்த்துமலையிலிருக்கும் வனஸ்ரீயானவள் தன் வைபவத்தால் பொங்கிக்கொண்டிருந்த போதிலும் வெட்கமடைந்தாள். விருட்சங்களிலிருக்கும் பல நிறமுள்ள சில மலர்கள் காற்றினல் பச்சைப் பசேலென்றிருக்கும் ரத்ன கம்பளத்தின்மேல் பரவின. மலர்களின் மணம் வனமெங்கும் சூழ்ந்தது. இதற்குள் ஒரு யுவகனும் யுவதியும் குன்றின் உச்சியிலிருக்கும் பச்சைக் கொடிகளால் மூடப்பட்டு அதே நிறமுள்ள வனசோலையினல் மறைந்த ஒரு சிறிய பர்ணகுடியிலிருந்து வெளி வந்தனர்.

நறுமணத்தை முகர்ந்து களிப்புற்ற யுவதி சொன்னள்:—" அண்ணு, இவ்வழகிய காட்சியை நீ தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்

னும், உனது குன்றிய முகம் மலருவதில்லை. இதற்கு என்னவென்று சொல்லுவது? நமக்கு இங்கு என்ன குறை யிருக்கிறது?"

"தங்காய், என்னவானாலும் இருக்கட்டும். அன்னை இறந்தது முதல் கடந்த மூன்று வருஷங்களாக எனது சித்தம் ஸ்திரமில்லாமலிருக்கிறது. தந்தை இறந்தபோது எனக்குப் பத்து வயது; ஆனால் அன்னையின் அன்பென்னும் குடையின்கீழ் நான் துக்கத்தை உணரவில்லை. 'வந்த பிரயாணியானவன் போகப்பட்டவன்தான்' என்னும் பகவான் பரசுராமருடைய உபதேசத்தை நான் தினமும் சிரவணம் செய்கிறேன். அது எனக்குப் பிரியமாகவுமிருக்கிறது. நான் பிறந்தது முதல் இதே காட்சியைக் கண்ணுறுகிறேன். இதே இயற்கை அழகால் என் சித்தம் தினமும் புளகித மடைகிறது. இந்த எல்லையில்லா சமுத்திர தரிசனத்தால் மானிட ஜீவனத்தின் எல்லையில்லா (ஒப்புயர்வில்லா)த் தன்மை எனக்கு ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆனால் என்ன செய்தபோதிலும் என் சித்தம் ஸ்திரமடையவில்லை. எனக்குத் தெரிகிறதேயன்றி சொல்லத் தெரியவில்லை. சகலமும் அநுகூலமாயிருக்கிறது, சகலமும் தெரிகிறது; உன்னைப் போன்ற அருமைச் சகோதரி யிருக்கின்றனள், பகவானைப் போன்றவர் அன்பான குரு உபதேசம்செய்யச் சித்தமாயிருக்கின்றனர்; ஆனால் என்ன? என்னவோ தவறிவிட்டது போலிருக்கிறது!"

"அண்ணா! நீ தபசி என்று சொல்லிக் கொள்ளுகிறாய்; அப்படியிருக்க உன்மனதிற்கு எதற்காகக் கவலைஏற்பட்டிருக்கிறதென்று உன்னால் சொல்ல முடியவில்லையா? இந்த சொர்க்கத்திற்கு நிகரான சுகம் உன் மனதை ஏன் உடைத்துவிட வில்லை? மனதின் உதாசீனத்தின் காரணம் உனக்கு இன்னதென்று புலப்படவில்லையா?"

"தங்காய், பிரேமையின்மையால் என் மனம் இப்படி வெறுப்படைந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. நீ என் பேரில் எவ்வளவோ அன்பு பாராட்டுகின்றனை; நானும் உன்பேரில் கூடியவரையில் அன்பு பாராட்டுகிறேன். இருந்த போதிலும் அன்னை போனது முதல் என் உள்ளத்தில் காலியான இடம் இன்னும் நிறையவில்லைபோல் அடிக்கடி தோன்றுகிறது. தங்காய், நீ கோபித்துக் கொள்ளாதே. நீ சிறியவளா யிருக்கின்றனை. இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்? என் எண்ணங்களும், என் உள்ளத்திலுண்டாகும் கலக்கமும் என்னால் எடுத்துரைக்க முடியாதவைகளாயிருக்கின்றன."

யுவகன் ஓர் பெருமூச்செறிந்தான். பாலிகை தன் வேலையை——பகவான் பூஜைக்காகப் புஷ்பங்களைக் கொய்துக்கொண்டு வரும் உத்தியோகத்தை—நாடிச் சென்றாள்.

II

பகவான் பரசுராமருடைய ஆச்சிரமத்தில் சிஷ்யர்களுடைய சமூகம் கதை சொல்லிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. 'ஓர் மலையின் குகையில் தேவாதிதேவனான ஸ்ரீவிஷ்ணுவின் மூர்த்தியிருந்து, அந்த மூர்த்தியின் பாதத்தின் மீது எவன் தன் ரத்தத்தைத் தெளிப்பானோ, அவனுடைய மனோரதம் பூரணமாகும்' என்று ஒரு சிஷ்யன் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் இச்சங்கதியைஜனங்களிடமிருந்து கேட்டிருந்தான். இதரசிஷ்யர்களுக்கு இதுஉண்மை என்று தோன்றவில்லை. 'இரண்டொரு ரத்தத் துளிகள் காலில் தெளித்தால் நினைத்த காரியம் நிறைவேறுமானால் அனர்த்தங்கள்தான் உண்டாகும். தமது சுயநலஎண்ணங்களால்ஜனங்கள் எத்தகைய அக்கிரமத்தையும் செய்யப் பின்வாங்கார்' என்று இதர சிஷ்யர்கள் சொல்லலா

னார்கள். வாதவிவாதம் நல்ல சுவாரஸ்யத்திலிருந்தது.

பகவான் பரசுராமர் வெளிவந்து வாதத்தின் காரணத்தைக் கேட்டனர். இரு திறத்தாரும் தத்தம் கொள்கையை பகவான் அவர்களுக்குத் தெரிவித்தனர். பகவான் சொன்னார்:—"வத்ஸர்களே! தியாகத்தினால் கடவுள் சந்துஷ்டியடைகிறார். சுயநலமில்லாத மனோரதத்தை சாதிக்கும் உத்தேசத்துடன் யாராகிலும் தியாகம் செய்தால் அது ஒப்புயர்வற்றதாகும். அதிக லாபத்தின் இச்சையால் செய்யும் தியாகம் தியாகமாகமாட்டாது. அது வியாபாரமாகும். பிறருக்கு சுகமுண்டாக வேண்டுமென்கிற பரிசுத்தமான உத்தேசத்துடன் எவன் தியாகம்செய்யச்சித்தமாகிறானோ, அவனுடைய தியாகத்தின் பெருமை வர்ணிக்க முடியாததாயிருக்கிறது. அதே மந்திரத்திலிருக்கும் விக்கிரகமென்ன? எவ்விடத்திய விக்கிரகத்திற்கும் இத்தகைய உண்மையான தியாகத்தினால் உருக்கமுண்டாகிறது. கடவுள் எங்குமிருக்கிறார், பரமசுகத்திற்காக ஆத்மத்தியாகம் செய்யச் சித்தமான மனிதனின் மனோரதம் எப்படிப் பூரணமாகாமலிருக்கும்? கடவுள் என்றும் படுத்துத் தூங்குவதில்லை."

பகவான் பரசுராமருடைய நிர்ணயத்தைக் கேட்டு பாலிகையின் கண்கள் ஆனந்தத்தினால் விரிவடைந்தன. பாலிகை சிஷ்யர்களுடன் உட்கார்ந்திருந்தனள். சகோதரனுடைய குன்றிய முகம் கண்டு பாலிகைக்குச் சில தினங்களாகக் கவலையாயிருந்தது. இன்று இப் புதிய விஷயம் அறிந்ததனால் பாலிகையின் மனதில் ஏதோ ஒரு கற்பனை யுதித்தது என்பது நிஜம். மனதின் பரிசுத்தத் தன்மையாலும் கற்பனையின் மேன்மையாலும் அவள் கண்கள் ஒளி வீசலாயின. "உபாயம் கிடைத்தது" என்று சொல்லி அவள் ஆனந்தத்துடன் ஆச்சிரமத்திலிருந்து வெளியிற் சென்றாள்.

III

சாயங்காலம் ஆன பிறகு நடந்த சங்கதி இது. மாடுகள் மேய்ந்து ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்தன. சிஷ்யர்களெல்லோரும் தத்தம் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தனர். கன்றுகள் கத்திக்கத்தித் தம் தாய்களைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தன. பகவான் பரசுராமர் சமாதியிலாழ்ந்து அந்த திவ்வியானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர். தற்சமயத்தில் குன்றின் பின்புறத்திலுள்ள குகையிலிருக்கும் அரவின்மேற் பள்ளிகொண்ட பகவான் ஸ்ரீவிஷ்ணுவின் மூர்த்திக்கு முன்னிலையில் பாலிகை ஒருத்தியே கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அவள் கண்கள் மூடியிருந்தன.

சற்றுநேரத்தில் அவள் சொன்னாள்:—"தேவர் தேவனே! என் அண்ணாவுக்குச் சுகமுண்டாகட்டும். அவனுடைய இச்சை நிறைவேறட்டும். அவன் உள்ளத்தில் காலியான இடம் மறுபடியும் அன்பினால் நிறையட்டும். இப்படிச்செய்வதில் எனக்கு கஷ்டமுண்டானாலும் ஆகட்டும். அவனுடைய சுகத்திற்காக நான் என்னையே தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறேன்!"

பாலிகை மடியிலிருந்து ஒரு கத்தியை எடுத்துத் தன் சுண்டு விரலை அறுத்து ரத்த தாரையைக் கடவுளுடைய சரண கமலத்தின் மேல் பிடித்தாள். இடிமுழக்கமுண்டாயிற்று! மின்னல் மின்னியதுபோல் ஒளி வீசியது! பாலிகையின் கையிலிருந்த கத்தி நழுவி விழுந்தது. ரத்ததாரை அடைபட்டது. விரல் முன்னிருந்தது போலாயிற்று. மந்திரத்தில் ஒலி நிறைந்தது. "வத்ஸே, உன் மனோரதம் பூரணமாகும். போ, உன் அண்ணன் பூரண சுகத்தை அடைந்திருக்கிறான்!"

பாலிகை கண்களைத் திறந்து பார்த்தாள். அப்பொழுது அவளுக்கு என்ன தென்பட்

டது? எல்லாக் காட்சியும் முன்னிருந்தது போலவே! ஒரு விதமான மாறுதலும் காணப்படவில்லை. ஆனால் மந்திரத்திலுண்டான தொனி அவள் மனதிலும், காதிலும் சூழ்ந்து கொண்டிருந்தது—'போ, உன் அண்ணன் பூரண சுகத்தை அடைந்திருக்கிறான்!' பாலிகைக்கு அந்த தெய்வ—அசரீர—வாக்கில் பூரண விசுவாசமிருந்தது. அவ்வாக்கு பொய்யல்ல என்பது அவளுடைய பாவனை. மனோரதம் பூரணமானதனால் அவள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தாள். உல்லாசமான மனதுடன் அவள் தனது இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தாள்.

மலையின் அடிவாரத்தினருகில் வந்ததும் மேலே ஏறுவதற்கு முன் அவள் ஒரு தரம் கடலின்கண் சகஜமாய்த் திரும்பிப்பார்த்தாள். வெண்மையான நிலவு வெளிச்சத்தில் அலைகள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அந்த அலைகளின் பேரில் குதித்து விளையாடிக்கொண்டு ஓர் அழகிய படகு மெல்ல மெல்லக் கரையினின்றும் தூரதூரப் போய்க்கொண்டிருந்தது. படகில் ஓர் அழகிய யுவகனும் யுவதியும் உட்கார்ந்திருந்தனர். யுவகனுடைய கை யுவதியின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது. பாலிகை உற்றுப்பார்க்கலானாள். யுவதி மிகவும் அழகு வாய்ந்தவளாயிருந்தனள். ஆனால் அவள் யார் என்பது பாலிகைக்குத் தெரியவில்லை. அந்த யுவகன் சகஜமாய்ப் பின்புறம் திரும்பிப் பார்த்தபோது, அவளுக்கு என்ன தென்பட்டது? அந்த யுவகன் அவளுடைய தமயனேதான்!

பாலிகை கூக்குரலிட்டு அழலானாள். "அண்ணா! என்னை விட்டு 'எங்கடா போகிறாய்?"

படகு வெகு தூரத்திலிருந்தமையால் அவளுடைய குரல் அவன் காதிற்கெட்டவில்லை.

அவள் கண்களினின்றும் நீர் தாரை தாரைகப் பெருகலாயிற்று. அவள் மனம் துடித்தது.

"ஆ! தெய்வமே!" என்று சொல்லி அவள் மணலில் விழுந்தாள். இதற்குள் பகவான் பரசுராமர் அவ்விடத்தில் தோன்றி, அன்புடன் சொன்னார்:—"வத்ஸே, இப்படி பயித்தியத்தைப்போல் என்ன செய்கிறாய்? உன் தமயன் பூரண சுகத்திலிருக்கிறான். பத்தினிப்பிரேமையின் லாபமுண்டாய் அவனுடைய உள்ளம் ஆனந்தத்தினால் நிறைந்திருக்கிறது. அவனுடைய சுகத்திற்காக நீ ஆத்மத் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கின்றனையல்லவா?"

பகவான் பரசுராமருடைய அன்பு நிறைந்த மொழிகளால் பாலிகை எழுந்து நின்றனள். அவள் மேலே நிமிர்ந்து பார்த்தாள். நட்சத்திரங்களெல்லாம் அன்புடன் நிருத்தியம் செய்துகொண்டிருந்தன. கடலைப் பார்த்தாள். அலைகள் அன்புடன் விளையாடிக்கொண்டிருந்தன. படகும் தூரஞ்சென்றிருந்தது; ஆனால் அந்த யுவதியை அவள் தமயன் தனது இரு கரங்களால் இருகத்தழுவிக் கொண்டிருப்பது அவளுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. குன்றின்மேல் பார்த்தால் செடி கொடிகளெல்லாம் புளகிதமாயிருந்தன. பிரியமான புஷ்பங்கள் வெகு தூரம்வரையில் தம் சுகந்தத்தைப் பரவச்செய்து கொண்டிருந்தன. பாலிகையின் உள்ளத்தில் பார்த்தால் எங்கும் சூனியம்—அந்தகாரமாயிருந்தது! அவள் நீர் ததும்பிய கண்களுடன் பகவான் பரசுராமரை நோக்கினாள். அவருடைய முகத்தில் சாந்தியும் கருணையும் விளையாடிக்கொண்டிருந்தன.

அவள் பகவான் பரசுராமருக்கு வந்தனமளித்து:—"பகவானே! தியாகத்தின் உண்மையான அர்த்தம் இப்பொழுது எனக்கு விளங்கியது!" என்றாள்.

('மனோரஞ்சன்' சஞ்சிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது)

எங்கள் தீர்த்த யாத்திரை.

(ஸ்ரீமான் V. நடராஜன்)

பல தேசங்களுக்குச் சென்று ஆங்காங்கு உள்ள இயற்கை விசேஷங்களையும் மனிதர்கள் பாடுபட்டுக் கட்டியுள்ள பல உன்னத கோவில்கள், அரண்மனைகள் முதலியவைகளையும் பார்ப்பதாலும் பலஜனங்களின் ஆசார அனுஷ்டானங்களை அறிந்து கொள்வதாலும் நமது அறிவு பொதுவாக விருத்தியாகிறது என்பது யாவரும் அறிந்துள்ள விஷயம். இதன் பொருட்டே வாலிபர்கள் தம் பாடசாலைக் கல்வி முடிந்த பிறகு சில காலம் வெளியூர்களுக்குப் பிரயாணம்செய்து வந்தால்தான் அவர்கள் கல்வி பூர்த்தியடைந்ததாகக் கருதலாம் என்று மேனாட்டு ஜனங்கள் கருதுகிறார்கள். கல்லூரிகளில் பயிலும்போதே வாலிபர்களை ஆசிரியர்கள் வெளியூர்களுக்கு அழைத்துச் செல்வதும் உண்டு. நமது தேசத்திலும் முற்காலங்களில் ஒரு பிரம்மசாரியானவன் குருவினிடம் பயின்ற பிறகு தேச யாத்திரைசெய்வது வழக்கமாயிருந்ததாம். இக்காலத்தில் பிராமணர்கள் விவாக காலத்தில் மணப்பிள்ளை யாத்திரைக் கோலம் பூண்டுபோவதுபோல அபிநயம் செய்வது வழக்கம். அவ்விதம் யாத்திரையாகச் செல்லும் ஒரு பிரம்மசாரியை சந்தித்துப் பெண்ணின் பிதா அவனைத் தன் பெண்ணுக்குக் கணவனாகும்படி கேட்பதான ஒரு சம்பிரதாயமாக இக்காலத்தில் அனுஷ்டித்து வருகிறார்கள்.

பொதுவாக நமது ஜனங்களுக்குத் தீர்த்த யாத்திரை செய்யவேண்டும் என்ற அவா அதிகம் உண்டு. ஒவ்வொருவனும் பல க்ஷேத்திரங்களை தரிசித்து திவ்விய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து தான் புனிதனாகவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனே. இந்த எண்ணம் தலைமுறை தலைமுறையாக நமது ஜனங்களின் ரத்தத்தில் ஊறி வருகிறது. காசி ராமேச்வரம் சென்று வரவேண்டும் என்று ஒவ்வொருவனும் இஷ்டப்படுகிறான். காசிக்கும் ராமேச்வரத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது பாருங்கள்! இவ்வளவு தூரமுள்ள இவ்விரண்டு க்ஷேத்திரங்களையும் நாம் பொதுவாக ஒன்று சேர்த்து வழக்கமாகச் சொல்லி வருகிறோம். இதிலிருந்தே நமது தேச ஒற்றுமை விளங்கும் என்று ஒருவர் ஒரு சமயம் உபந்நியசித்தார்!

முற்காலங்களில் தீர்த்த யாத்திரைசெய்வது மிகவும் கஷ்டம். வசதியான சாலைகள் இருந்த போதிலும் வண்டிப் பிரயாணம் செய்வது அதிக நாட் செல்லும். மேலும் வழியில் திருடர் பயம் அதிகம் உண்டு. இக்காலத்திலோ ரயில் பாதைகள் இருப்பதால் நாம் பிரயாணம் செய்வது சுலபம். முன்போல் திருடர் பயம் இல்லை எனினும் இப்போதும் பிரயாணிகள் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். எல்லா முக்கிய க்ஷேத்திரங்களுக்கும் ரயில் மார்க்கமாகச் செல்லலாம். நாங்கள் சென்னையிலிருந்து புறப்பட்டு பம்பாய் வழியாக, டில்லி, காசி, கல்கத்தா முதலிய பட்டணங்களுக்குச் சென்றோம். வழியில் முக்கிய க்ஷேத்திரங்களைத் தரிசித்து திவ்விய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தோம். இந்தப் பிரயாணத்தைப் பற்றி விபரமாக எழுதுவோம்.

நாங்கள் மேயீ 2உ இரவு 9--மணிக்கு சென்னைப்பட்டணத்தில் ரயில் ஏறினோம். நேராக பம்பாய் செல்லும் மெயில் வண்டியில் பிரயாணம் செய்தோம். இரவு எல்லாம் வேகமாக ரயில் சென்று கொண்டிருந்தது. இருள் சூழ்ந்தமையால் சுற்றுப் பிரதேசத்தைப் பற்றி அறிய முடியவில்லை. மறுநாட் காலை குத்தி

ஸ்டேஷன் சேர்ந்தோம். அங்கு ஸ்டேஷனில் இருந்த குழாயில் ஜலம் எடுத்துப் பல் விளக்கி முகம் கழுவிக் காலைச் சிற்றுண்டி வாங்கி சாப்பிட்டோம். தமிழ் அறிந்த ஒருவன் பலகாரங்கள் விற்றதனால் எங்களுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை. பிறகு ரயில் ஏறிப் பகல் 12-மணி வரையில் பிரயாணம் செய்தோம். இந்தப் பிரதேசம் இந்தியாவில் 'தக்காணம்' எனப்படும். கடற் கரையிலிருந்து வெகு தூரம் இருப்பதால் இது உள்நாடு. சூரியன் உதயமாகி சற்று நேரத்திற்கெல்லாம் அவன் உஷ்ணம் தாங்க முடியவில்லை. நல்ல கோடை காலமாதலின் வெப்பம் அதிகம். அந்தப் பிரதேசம் கடல் மட்டத்திற்கு உயர்ந்த தேசமாயினும் அந்த உயர்ந்த பிரதேசம் ஒரே விதமாக வியாபித்துப் பல மைல்கள் விஸ்தாரமாயிருப்பதால் இவ்விடத்திற்கு மேஜைபூமி (Table-land) என்று வர்ணித்துச் சொல்வோம். ஜலக் கஷ்டம் வெகுவாக இருக்கும். உஷ்ணமோ 120° டிகிரிவரையில் கோடைகாலத்தில் ஏறும். ஆனால் குளிர் காலத்தில் அதிகக் குளிரும் இருக்கும். அங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோர் ஒரு கெட்டியான கறுப்புக் கம்பளியைப் போர்த்துக்கொண்டிருந்தனர். இவ்வளவு உஷ்ணமாயிருந்தும் அவர்கள் கம்பளி போர்த்திருந்தது வெகு ஆச்சரியம். அவர்கள் வீடுகள் சாய்வான கூரைகொண்டு கீத்து அல்லது ஓடுகள் போட்டவையாக இல்லை. திறந்த மச்சு வீடுகள் எனலாம். அதாவது சுவற்றின்மேல் கழிகளைப் பரப்பி மேலே மண்ணைக்கொண்டு தரை சமனாக தளவரிசை செய்யப்பெற்றிருக்கும். இதனால் வெப்பமும் குளிரும் அதிகமாகத் தாக்காது. தென்னாட்டில் இருப்பதுபோல பல மாடி வீடுகளும் கோபுரங்களும் அதிகமாகத் தென்படவில்லை. மேலும் சுற்றிலும் செடிக பூமி ஒரே தரிசு நிலமாகத் தென்பட்டதேயன்றி பசுமையான தோட்டங்களும் வயல்களும் தென்படவில்லை. ஜலக்கஷ்டம் தாங்க முடியாமல் ஜனங்கள் தவிக்கும்போது பசுமையான பயிர்கள் எவ்வாறு இருக்கும்? பிரயாணத்தில் வழியில் பார்த்த ஸ்டேஷன்கள் எல்லாம் "சுருவு" என்று முடியப்பெற்றிருந்தன. சுருவு என்றால் தெலுங்கில் ஏரி என்று பொருள் என அறிந்தோம். விஜயநகர மன்னர்கள் அரசாட்சி செய்த காலத்தில் அவர்கள் உத்திரவின்மேல் சிற்றரசர்கள் ஜனங்கள் உபயோகத்திற்காக ஆங்காங்கு ஏரிகள் கட்டுவித்தனர். இப்போது அந்த ஊருக்கே அவ்வரசன் வெட்டுவித்த ஏரியூர் எனப் பெயர் வழங்குகிறது.

நாங்கள் பகல் 12-மணி சுமாருக்கு துங்கபத்ரா என்னும் ஊரில் இறங்கினோம். ரயில் வண்டியினின்றும் ஸ்டேஷன் கட்டிடத்திற்குச் செல்வதற்குள் எங்கள் கால்கள் சூரிய வெப்பத்தில் கொப்புளித்துப் போயின. அதிருஷ்டவசமாக சமீபத்திலேயே சத்திரம் இருந்ததால் அங்கு தங்கினோம். கால் மைல் தூரத்தில் துங்கபத்ரா நதி ஓடுகிறது. வெயிற் காலத்தில் ஜலம் ஒரு ஓரமாகக் கொஞ்சம் அரித்தோடிக் கொண்டிருந்தது. ரயில் பாலத்தினருகில் இஞ்சின் வைத்து ஜலம் குழாயில் கொண்டு வருகிறார்கள். நதி ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, சத்திரத்தில் சமயல்செய்து போஜனம் செய்தோம். இந்நதி கிருஷ்ணா நதியுடன் போய்க்கலக்கிறது. இந்த நதி நிஜாம் ராஜ்யத்திற்கும் சென்னை மாகாணத்திற்கும் இந்த இடத்தில் எல்லையாக இருக்கிறது. இந்த ஊருக்குச் சற்று மேற்காக இந்நதியின் தென் கரையில் வித்யாரண்ய ஸ்வாமிகள் ஸ்தாபித்த பெரிய பட்டணமாகிய விஜயநகரம் இருந்தது. ஆனால் இப்போது அப்பட்டணத்தில் இடிந்த கோபுரங்களும் பாழடைந்த அரண்மனைகளுந்தானுள. இந்த விஜயநகர ராஜாக்கள் சுமார் 1500-வருஷம் தென்னிந்தியா முழுதும் அரசாட்சி செய்திருந்தனர். சேர,

சோழ, பாண்டிய ராஜ்யங்களும், ராஷ்டிர, பல்லவ, சாளுக்ய ராஜ்யங்களும் விஜயநகர ராஜ்யத்தில் அடங்கியிருந்தன.

நாங்கள் இறங்கியிருந்த ஊருக்கு ஐந்து மைல்களுக்கு அப்பால் நதிக்கரையிலேயே ஒரு ஆசிரமம் இருப்பதாகவும் ஒரு மகாயோகியார் அங்கு வசிப்பதாகவும் சொன்னார்கள். பலர் அவரை தரிசித்து வருவது வழக்கமாம். சில வியாதிஸ்தர்கள்கூட அவ்விடம்சென்று அங்கே ஒரு குடிசையில் சில நாட்கள் வசித்துக்கொண்டு அவரை தரிசித்து வந்ததனால் வியாதி நீங்கி குணமடைந்தார்களாம். வெயில் கொடுமையொன்று தவிர மற்றப்படி அந்தப் பிரதேசம் ரமணியமாக இருந்தது என வேண்டும். தூரத்தில் சிறு சிறு குன்றுகள் காணப்பட்டன. ஆங்காங்கு சில மரங்கள் இருந்தன. சோளம், கம்பு, வரகு பயிரிடுவதுண்டாம். சாதாரண ஜனங்கள் அரிசிச்சோறு சாப்பிடுவதில்லை.

அன்று மாலை 4½-மணிக்கு ஒரு லோகல் ரயில் வண்டி ஏறி இரண்டு ஸ்டேஷன்களுக்கு அப்பால் உள்ள ரெய்ச்சூர் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து குருதவாடி ஜங்ஷனில் இறங்கி பண்டாபுரம் போவதாக எங்கள் ஏற்பாடு. பண்டாபுரத்தில் கிருஷ்ண பகவானுக்கு பாண்டுரங்கன் எனப்பெயர். புண்டலீகன் என்பவன் தன் பெற்றோர்களுக்கு சிச்ருஷைசெய்து கொண்டிருந்த சமயம் கிருஷ்ண பகவான் வந்தனராம். புண்டலீகன் அங்கிருந்த ஒரு செங்கல்லை எடுத்துப்போட்டு அதில் அவரை சில காலம் தாமதித்திருக்கும்படி சொல்லிவிட்டுத் தான் பெற்றோர் பூஜைசெய்து கொண்டிருந்தானும். பிறகு பகவானை அவ்வாறே பக்தர்களுக்குக் காட்சி கொடுக்கும்படி வேண்டிக் கொள்ள, இன்றும் பண்டாபுரத்தில் பகவான் அவ்வாறே எழுந்தருளியிருக்கிறார். கோவிலின் சமீபம் துங்கபத்ரா நதியின் ஒரு உபநதியாகிய பீமா என்னும் நதி பிறைச்சந்திரன்போல வளைந்திருப்பதால் அங்கு அதற்குச் சந்திர பாக நதி எனப்பெயர். பக்த விஜயத்தில் வர்ணிக்கப்பட்ட பல விஷ்ணு பக்தர்களும் பண்டாபுர க்ஷேத்திரத்தை வெகுவாகக் கொண்டாடியிருக்கின்றனர். பல பக்தர்கள் பண்டாபுரத்திலேயே வசித்திருந்தனர். இப்போதும் கோவிலில் பகவந்நாம சங்கீர்த்தனம் எப்போதும் நடந்துகொண்டேயிருக்குமாம். ஸ்திரீ புருஷர்கள் வித்தியாசமின்றி சங்கீதத்துடன் நிருத்தனம் செய்வார்களாம். பகவானை ஆலிங்கனம்செய்து மகிழ்வது வழக்கம். இவ்வளவு பெருமை வாய்ந்த பண்டாபுரத்திற்கு நாங்கள் செல்ல முடியாதிருந்தது பற்றி எங்களுக்கு சற்று மனத்தாங்கல்தான். நாங்கள் செல்லும் ரயில் மறுநாள் பகல் 12-மணிக்குத் தான் பண்டாபுரம் செல்லும். வெயிற் கொடுமையினால் இன்றைய ஒரு நாள் அனுபவமே எங்களுக்கு சரீர அசௌக்யம் உண்டாக்கிற்று. முக்கியமாக எங்கள் பெரிய தாயார் அவர்களுக்குக் கடுமையான தலை நோயும் ஜுரமும் கண்டது ஆகலால் பண்டாபுரம் செல்வதை நிறுத்திவிட்டு நேராகப் பூனா செல்வதாகத் தீர்மானித்தோம்.

ரெய்ச்சூர் ஸ்டேஷனில் இரவு 12-மணி வரையில் தங்கியிருந்தோம். இந்த ஊர் துங்கபத்ராவிற்கும் கிருஷ்ணாவிற்கும் மத்தியில் உள்ள முக்கோணமான பிரதேசத்தில் உள்ளது. குல்பர்கா சுல்தானுக்கும் விஜய நகர ராஜாக்களுக்கும் இந்த ஊரைப்பற்றிதான் அடிக்கடி சச்சரவு உண்டாயிற்று. இத்தேசம் வெகு நாள் முகமதிய ராஜ்யத்தில்தான் சேர்ந்திருந்தது. சமீபத்திலுள்ள முட்கல் என்னும் கிராமத்தில் ஒரு அழகான குடியானவப் பெண் இருப்பதாகக் கேள்வியுற்ற விஜய நகர அரசன் அவளைக் கைப்பற்றுவதற்காக இத்

தேசத்தின் மீது படையெடுத்தான். பிறகு கிருஷ்ண தேவராயர் காலத்தில் ரெய்ச்சூர் கோட்டை விஜய நகர ராஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இப்போதும் இவ்வூர் ஒரு எல்லை ஸ்தலமாகவே இருக்கிறது. நிஜாம் ராஜ்யத்தில் தற்போது உள்ளது. M.S.M ரயில்வே கம்பெனியின் கடைசி ஸ்டேஷனாக இருக்கிறது. ரெய்ச்சூருக்கு அப்பால் ரயில்வே G. I. P. கம்பெனியாரைச் சேர்ந்தது. ஆயினும் இவர்களுக்குள் ஒற்றுமைப்பட்ட ஏற்பாடு இருப்பதால் பிரயாணிகள் நேரடியாக டிக்கட்டுகள் வாங்கவும், சாமான் அனுப்பவும் வசதியாக இருக்கிறது. நாங்கள் இரவு ரயிலேறி மறுநாள் பிற்பகல் 3-மணிக்கு பூனா பட்டணம்வந்து சேர்ந்தோம். வழியில் பித்தளைப் பாத்திரங்களுக்குப் பேர்போன ஷோலாப்பூர் என்னும் ஊரைத்தாண்டிச் சென்றோம். பகல் இரண்டு மணிக்குத்தான் பூனா போகிறதாகையால் பகல் வேளை ஆகாரம் ரயில் வண்டியிலேயே செய்யவேண்டியதாயிற்று. பூரி, அவல், தயிர் இவைகளை வாங்கி போஜனம் செய்தோம்.

பகல் 2-மணிக்குப் பூனா சேர்ந்தோம். எங்கள் உறவினர் ரயிலடிக்கு வந்திருந்தமையால் சௌகரியமாக வீடு சேர்ந்து ஸ்நானம்செய்து போஜனம் செய்து அன்று இளைப்பாறியிருந்தோம். அவ்வூரில் குதிரை வண்டிகளுக்கு 'டோங்கா'எனப்பெயர். முன்னும்பின்னுமாகப் பிரயாணிகள் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு உட்காரும்படி சௌகரியமாக இருக்கும். நாங்கள் இறங்கியிருந்த இடம் பட்டணத்திற்கு அப்பால் உள்ள எரயாடா என்னும் ஊர். இவ்விடம் பெரிய ராஜதானி ஜயில் இருக்கிறது. இவ்விடம் தான் மகாத்மா காந்தியடிகள் சிறைவாசம் செய்திருந்திருந்தார். பட்டணம் முழுதும் மின்சாரம் சப்ளை செய்வதற்கான தலைமை இயந்திரசாலை இவ்விடம் உண்டு. இவ்விடத்திற்கும் பட்டணத்திற்கும் இடையே மூசா என்னும் நதி ஓடுகிறது. இங்கு படகுப் பந்தயங்கள் நடக்கும். இதற்கும் அப்பால் குதிரைப் பந்தயங்கள் நடக்கும் மைதானம் இருக்கிறது. பட்டணத்திற்குள் தெருக்கள் நெருக்கமாகவும் வீடுகள் மிகவும் சிறியவையாகவுமிருந்தன. மகாராஷ்டிர பீஷ்வாக்கள் பூனா நகரில் 150-வருஷங்களுக்கு முன் அரசாட்சி செய்திருந்தனர். அதற்கு முன் சிவாஜி மகாராஜா மகாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்து பூனாவை ராஜதானியாக்கினர். பட்டணத்தில் ஒருபுறம் இருக்கும் கோட்டையைப்போய்ப் பார்த்தோம். தற்காலம் உள்ளது மிகச்சிறியது எனவேண்டும். ஒரு புறம் இடிந்து விட்டது என்று சொன்னார்கள். பிறகு சேவாசதன சங்கத்திய பள்ளிக்கூடத்தையும் அச்சபையில் செய்யப்படும் வேலையையும் பார்த்தோம். இந்திய ஊழிய சங்கத்தின் ஸ்ரீமான் G. K. தேவதார் என்பவர் அச்சங்கத்திய விஷயங்களை எல்லாம் எடுத்துரைத்தார். அனாதைப் பெண்கள் பலர் படிப்பு கற்றுக்கொள்வதும் தையல் வேலை, குல்லாய் பின்னுதல், முதலிய வேலைகளும் செய்வதுமாக பழக்கப்படுகிறார்கள். அன்றைய தினம் அச்சபையை ஸ்தாபித்தவரான ஸ்ரீமதி ரமாபாய் ரானடே அம்மாளின் சிரார்த்த தினம். அதற்காக ஒரு சபை கூட்டி அந்த அம்மாள் செய்த கைங்கரியத்தைப் பற்றி சிலாகித்துப் பலர் பேசினார்கள். கொஞ்சநேரம் அவ்விடம் இருந்துவிட்டு, நாங்கள் கடைத்தெருவைப் பார்த்துக்கொண்டு ஊருக்கு வெளியே மலைமீது இருக்கும் பார்வதி கோவிலை தரிசித்துவிட்டுத் திரும்பினோம்.

மறுநாள் பம்பாய்க்குப் புறப்பட்டோம். பூனாவிலிருந்து பம்பாய் செல்லும் ரயில் பாதை மேற்குத் தொடர்ச்சி மலைகளைத் தாண்டிச் செல்வதால் வழியில் பல குகைகளும் மலைமீது ரயில் செல்வதும் வெகு அழகாக இருக்குமென்று நாங்கள் பகல் வண்டியில் சென்

றோம். இயற்கையாக ஏற்பட்ட பல கஷ்டங்களையும் எவ்வளவு சமார்த்தியமாக மனிதர்கள் ஜயித்து ரயில் பாதை போட்டிருக்கிறார்கள்! மலையின் ஓரமாக வளைந்து வளைந்து ரயில் பாதை சென்றது. ஒரு புறம் செங்குத்தான மலைகளும் இன்னொரு புறம் கிடுகிடு பாதாளமான பள்ளமும் மனதைத் திடுக்கிடும்படி செய்தது. ஓரோர் இடத்தில் பாதை பயங்கரமாக இருக்கும். ஜூலை மாதம் வடமேற்கு மான்சூன் காற்று அடிக்கும்போது ஏராளமான மழை பொழியும். பெரும்புயல் அடிக்கும். அச்சமயம் ஓரோர் சமயம் ரயில் பாதை அபாயமான நிலைமையில் இருக்கும். அநேக இடங்களில் மலையைக் குடைந்து குகை வழியாக ரயில் பாதை சென்றது. பாறைகள் ஒன்றின்மீது ஒன்று குவிந்திருக்கும் ஆச்சரியக் காட்சியை வர்ணித்தல் அரிது. போர்காட் என்னும் இடத்தில் ரயில் வண்டி திரும்பி மறுபடியும் கீழிறங்கி குகை வழியாக மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அப்பால் சென்றது. கல்யாண் என்னுமிடத்தில் பெரிய பாலம் வழியாக ரயில் பாதை சென்றது, பம்பாய் பட்டணம் தீவாக இருப்பதால், இடையில் உள்ள குறுகிய கடல்மீது பாலம் கட்டி ரயில் போட்டிருக்கிறார்கள். அன்று மாலை 5-மணிக்கு நாங்கள் பம்பாய்போய்ச் சேர்ந்தோம்.

(தொடரும்)

பர்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் அத்தியாயம்.

மனோரமை.

மனோரமைக்கும் பிரதிபைக்கும் மிக ஆழ்ந்த நட்பு உண்டாய் விட்டது. முதலாவது, அவர்கள் இருவரும் ஒத்த வயதினர்; இரண்டாவது, இருவரும் நன்கு கற்றிந்தவர், நற்சுபாவமுடையவர்; அப்படியிருக்க அவ்விருவருக்குள்ளும் நட்பு ஏன் உண்டாகாது? இருவருக்கும் மனோபாவம் கூடக்குறைய ஒரே விதமாயிருந்தது. ஆகவே அவ்விருவருக்கும் மனம் விட்டு ஒருவரோடொருவர் தம் உள்ளக்கிடக்கைகளைச் சொல்லிக்கொள்வதும் வெவ்வேறு விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்வதுமாயிருந்தார்கள். ஒருவரோடொருவர் இவ்வாறு உரையாடலால் இருவருக்கும் பரமாநந்தம் உண்டாயிற்று. பிரதிபையின் நேர்மையையும், தூய்மையையும், அறத்தினிடத்தே அன்புடைமையையும், முக மலர்ச்சியையும், வீட்டு வேலைத் திறமையையும், சிற்ப கலாபிமானத்தையும், சங்கீதப் பிரேமையையும் பார்த்து மனோரமை அவளுடைய தெய்வத்தன்மை பொருந்திய ஒழுக்கத்தை மெய்ம்மறந்து வியக்கலாயினாள். இராஜ குமாரன் பூபேந்திர நாதனுக்கும் பிரதிபைக்கும் விவாக நிச்சயமாயிருக்கிறதென்று மனோரமைக்குத் தெரியும். ஏனெனில் இராஜ குமாரன் எந்தக் கிராமத்தில் வசித்தானோ அந்தக் கிராமத்திலேயே அவளுடைய மாமியாரகமும் இருந்தது. இராஜ குமாரனுக்கும் அவளுடைய புருஷன் நரேசசந்திரனுக்கும் சிநேகமாயிருந்தபடியால், இராஜ குமாரனுடைய சரிதையும் அவளுக்குத் தெரியாமலில்லை. தன் புருஷனிடத்திலிருந்து இராஜ குமாரனுடைய சரித்திரத்தைக்

கேட்டு அவள் அதிக துக்கமடைந்து, சில சில சமயங்களில், "உங்களுடைய இராஜ குமாரன் எங்கள் பிரதிபையின் காலடிகளைத் தொடக் கூடத் தக்கவனல்ல," என்று சொல்லுவள்.

மனோரமை தன் இன்னுயிர்த் தோழியாகிய பிரதிபையின் பிற்கால வாழ்க்கை சுகமாயிருக்கவேண்டி ஆண்டவனை நோக்கி இடைவிடாமல் பிரார்த்தித்தவளாயிருந்தும், இராஜ குமாரனுடைய கூடா வொழுக்கத்தைப் பற்றி அவள் ஒருகாலும் தன் தோழியின் எதிரில் பேசினதில்லை. இதைக்கேட்டால் தன் தோழியின் நெஞ்சம் உடைந்து போமென்று அவள் அஞ்சினாள். சரள சித்தமுடைய அப்பாவிதை இராஜ குமாரனையே தன் பதியெனக் கருதியிருந்தாள். ஒரு வேளை எக்காரணத்தாலாவது அவள் உள்ளத்தில் வருத்தம் உண்டானால், அவள் தன்னுடைய இந்த நேர்மையான நம்பிக்கையினால் அந்த வருத்தத்தைக் களிப்பாக மாற்றிக்கொள்ளும் திறமை பெற்றிருந்தாள்.

ஆனால் மனோரமையின் சிந்தை ஒருகாலும் ஒழிந்தபாடில்லை. அவள் சமயம் வாய்க்கும் போது தன் பதியுடன் இவ்வாறு கூறுவள்—"தங்களுக்கு இராஜ குமாரனோடு சிநேகம் ஏற்பட்டிருக்கும்போது பிரதிபையைச் சீக்கிரம் கலியாணம் பண்ணிக்கொள்ளும்படி அவரைத் தாங்கள் வற்புறுத்தலாகாதா? அவர்களுக்குக் கலியாணமாக விட்டால், பிரதிபையே நன்னெறியில்கொண்டு செலுத்துவள் என்பதிலும், இருவருடைய பிற்கால வாழ்க்கையும் சுகமாய் நடக்குமென்பதிலும் எனக்கு விசுவாசமுண்டு. ஆனால் விவாகம் விரைவில் நடக்காமல் தாமதித்தால் இராஜ குமாரன் கைக்கடங்காமற்போய், அப்புறம் என்ன அனர்த்தம் விளையுமோ தெரியாது" நரேச சந்திரன் தன் பத்தினி கூறும் இவ்வார்த்தைகளையெல்லாம் கவனமாய்க் கேட்பதுண்டாயினும் மறுமொழி ஒன்றும் சொல்லமாட்டான். இப்படி கேட்டுக் கேட்டு ஒரு நாள் அவன் கூறினான்—"நீ சொல்வதையெல்லாம் கேட்டு நான் அதிகமாய் யோசனை பண்ணிப்பார்த்தேன். நானே நேரில் பூபேந்திரனுக்கு இதைப்பற்றிக் கடிதம் எழுதினால் ஒரு பயனும் உண்டாகாது. விவாகத்தை சீக்கிரம் முடிக்க வேணுமானால், சுசீல குமாரனே கடிதம் எழுதவேணும். நாளைக்கே இதைப்பற்றி சுசீல குமாரனுடன் சொல்வேன். பிறகு, நானும் இராஜகுமாரனைப் பார்க்கப்போகிறபாவனையில் அவன் வீட்டுக்குப்போய், உசிதமாய்த் தோன்றுகிறதைச் செய்ய யத்தனிக்கிறேன். பாவம், பூபேந்திரன் சில துர்மார்க்கர்களின் கையில் பொம்மைபோல் அகப்பட்டுக்கொண்டு தன் அழிவைத் தேடிக்கொண்டிருக்கிறான். நான் அங்கேபோய் எல்லோருடைய தன்மையையும் குறிப்பையும் மதியையும் கதியையும் நிதானித்து மெத்த சாவதானமாய் முயற்சி செய்ய வேணும். இராஜகுமாரனுடைய திவான் மகா துஷ்டனென்றும் சுய காரியப் புலியென்றும் நீ கேள்விப்பட்டிருப்பாய். ஆகையாலும் அவ்விடத்திய சகல நோக்கு நிலவரங்களையும் கண்டறிந்து கொள்ளாமல் எவ்வித உபாயம் செய்வதும் ஆபத்தாகும். எப்படியாவது சீக்கிரத்தில் நான் ஊருக்குப்போகிறதென்று நிச்சயித்திருக்கிறேன். அகத்துக்குப் போயும் ரொம்ப நாளாச்சுது. பி. எல் பரீக்ஷைக்கும் இந்த வருஷம் போகவேணும். இதையெல்லாம் உத்தேசித்து கொஞ்ச நாளைக்கு உன்னைப் பிரிந்திருப்பது கெடுதியாகாது. என்ன? சரிதானே நான் சொல்லுகிறது."

பிந்திய வாக்கியத்தைக் கேட்டு மனோரமை ரோஷத்தினால் சற்று நேரம் சும்மா இருந்தாள். பிறகு கோபசூசகமான குரலில் கூறினாள்—"நீங்கள் என்னிடத்திலேயே இருக்கவேண்டுமென்று யார் சொன்னது? உங்களுக்கு இஷ்டமான இடத்துக்கு மகாராஜனாய்ப் போகிறது தானே! உங்களை யார் தடுக்கிறது!"

இதற்கு மறுமொழியாக நரேச சந்திரன் புன்னகை செய்து கூறினான்—"உனக்கென்ன இவ்வளவு கோபம்? உன்னுடைய தோழியின் நன்மைக்காகவே சில நாள் உன்னை விட்டுப் போயிருக்க விரும்புகிறேனென்பது உனக்குத் தெரிய வில்லையா? இந்தக் கலியாணத்தை முடித்து வைக்கும் புரோகித காரியத்தை நான் நன்றாய்ச் செய்ய வல்லவனாயிருக்கிறேனா இல்லையா என்பதைப் பார்க்கலாமே."

மனோரமையின் ரோஷம் அடங்கிவிட்டது. இரண்டு மூன்று நாள் கழித்து நரேச சந்திரன் தன் சொந்த ஊருக்குப் புறப்பட்டுப்போனான்.

அங்கே இராஜகுமாரனுடைய உண்மை நிலையை அறிந்து நரேச சந்திரன் சிந்தா சாகரத்தில் முழுகினான். அவன் பிரதிதினமும் துஷ்ட திவான்ஜியின் சதியாலோசனை, இராஜகுமாரனது மூடத்தனம், பிரதிபை விஷயத்தில் இராஜகுமாரனது பாட்டியம்மையின் துர் அபிப்பிராயம், புதிய கன்னிகையின் வரவழைப்பு, இராஜகுமாரன் கன்னிகையைக் கண்டது முதலிய எல்லாச் செய்திகளையும் இரகசியக் கடிதங்கள் வாயிலாக சுசீல குமாரனுக்கும் மனோரமைக்கும் அனுப்பலானான், ஆனால் இந்தச் செய்திகளில் ஓர் எழுத்தையாவது ஒருவருக்கும் தெரிவிக்கக் கூடாதென்று அவன் ஆணையிட்டு மனோரமைக்கு எழுதினான். இச்செய்திகளை அறிந்து சுசீல குமாரன் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. ஆனால் அவன் தன் மனக்கவலையை எவருக்கும் சொல்லவில்லை. புருஷன் கடிதத்தைப் படித்து மனோரமைக்கு நெஞ்சு படபடத்தது. ஆனால் அவள் தன் விசனத்தை மிக்க கஷ்டத்துடன் அடக்கிக்கொண்டு, பிரதிபையினிடம் எப்பொழுதும் போலவே வந்து பேசிவிட்டுப் போவாள். தன் வீட்டுக்குத் திரும்பி வந்ததும், தோழியின் நிலைமையை நினைத்துத் தலைப்பினால் முகத்தை மூடிக்கொண்டு அழுவாள்.

பிரதிபைக்கு இவை யெல்லாம் கொஞ்சமும் தெரியாது. அவள் இதுவரையில் எப்படி நேர்மையோடும் சந்தோஷசித்தத்தோடும்வீட்டு வேலைகளைச் செய்து வந்தாளோ அப்படியே இப்போதும் செய்து வருகிறாள். பிரதிதினமும் அக்கம் பக்கத்துப் பெண்டுகளுடன் எப்படி இனிய புன்னகையுடன் பேசி வந்தாளோ அப்படியே இப்போதும் பேசிவருவதும், மாணவிகைகளுக்கும் யுவதிகளுக்கும் முன்போலவே தையல் பின்னல் முதலியவை கற்றுக்கொடுப்பதுமாயிருக்கிறாள். அவளுடைய நிர்மலமான இருதயாகாசத்தில் ஒரு மேகமாயினும் சஞ்சரிக்கவில்லை; மேகம் இல்லாதபோது காற்று மழை அடிப்பதற்கும் இடி விழுவதற்கும் கூட இடமில்லை யல்லவா? ஆநந்தமயமாய் விளங்கும் பிரதிபை தன் ஆநந்தத்திலேயே ஆழ்ந்து, தன் விசுவாசத்திலேயே விசுவாசங்கொண்டு, தன் மாதுர்யத்திலேயே மாதுர்யமயமாய் மக்னமாயிருக்கிறாள். ஆ தெய்வமே, நீ இந்த சாதுவாகிய பெண்ணின் தலையில் என்ன எழுதியிருக்கிறாய்?

மூன்றும் அத்தியாயம்.

நிருபமை.

பிரதிபை நிருபமையினிடம் தன் சொந்த சகோதரிக்குச் சமானமாய் அன்பு பாராட்டுகிறாள். நிருபமை தன் பெயருக்கேற்றபடி உள்ளபடியே "தனக்குவமையில்லாதவளாய் விளங்குகிறாள். அவள் பிறந்தபோது, அவளுடைய அன்னையும் பிதாவும் அவளுடைய ஒப்பற்ற அழகைக் கண்டு இவளுக்கு 'நிருபமா' என்ற பெயர் வைக்கவேண்டுமென்று நிச்சயித்தார்கள். அப்படியே அவளுக்கு நிருபமை

207608

என்று பெயரிடப்பட்டது. அவள் மெல்லிய மேனிவாய்ந்த பூம்பாவை. அவளுடைய கை, கால், தோள், விரல், மேலுதடு, மூக்கு, நெற்றி, புருவம், கண், காது, முதலிய ஒவ்வொரு அங்கமும் கொழுகொழுன அழகாய்த் திகழ்கின்றன. அவ்வெல்லா அங்கங்களிலும் ஓர் அலௌகிகமான லாவண்யம் விளையாடுவது போல் இருக்கிறது. அவளைத் திடீரென்று பார்த்தால், அவளுடைய சரீரம் இரத்த மாம்சங்களால் அமைந்ததல்லவென்று தோன்றும். அவளுடைய கால் விரல்கள் உருண்டு திரண்டு செண்பகத்தளிர்போல் காட்சிக் கினிமையாயிருந்தன; சின்னஞ்சிறிய கீழுதடு பழுத்த கொவ்வைக் கனிபோல் உள்ளங்கவர் வனப்புடன் திகழ்கிறது; பற்கள் முத்துக்களைப் போல் மிளிர்கின்றன. அவளுடைய முகமண்டலம் எப்பொழுதும் பிரசன்னமாய் விளங்குகிறது. அவளுடைய நடை காற்றைப்போல் லேசாயும் நிச்சந்தமாயும் இருக்கிறது. அவள் போகுமிடமெங்கும் தேஜோமயமாய்த் திகழச் செய்கிறாள்.

இந்த நிருபமையே பிரதிபைக்குத் தோழியாயிருப்பவள். அவள் பாடசாலைக்குப் போய்ப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பிரதிபையினிடம் அத்தி பூத்ததுபோல் வந்து போவது வழக்கம். ஆனால் இப்பொழுது அவள் வளர்ந்து விவாகத்துக்கேற்றவளாய் விட்டிருக்கிறாள்; ஆகவே அவளுடைய தாய் தந்தையர் அவளை பள்ளிக்கூடத்துக்குப் போகவொட்டுவதில்லை. அவள் இப்பொழுது வீட்டிலேயே இருக்கிறாள்; ஆனால் நாளின் நெடும் பொழுதைப் பிரதிபையின் வீட்டிலேயே கழிக்கிறாள். பிரதிபையின் வீட்டுக்கு வந்துபோவதை அவளுடைய மாதாபிதாக்களும் தடுப்பதில்லை. மனோரமைக்கு இதில் அளவு கடந்த சந்தோஷம். பிரதிபையைப்போல் நிருபமையும் அதிகாலையில் எழுந்து ஸ்நாநம் செய்யப் பழகியிருக்கிறாள். ஸ்நாநம் செய்ததும் அவள் பிரதிபையினிடம் போகிறாள். பிரதிபை சுசீல குமாரனுக்குத் தேநீர் முதலியவை தயார் செய்யும்பொழுது, அவளுக்கு அக்காரியத்தில் ஒத்தாசை பண்ணுகிறாள். முதலில் அவள் தேநீர் முதலியவற்றை எடுத்துக்கொண்டு போய் சுசீல குமாரனுடைய மேஜையின்மேல் வைத்துவிட்டு வருவாள்; இப்பொழுதோ அவள் கொஞ்ச நாளாக, என்ன காரணத்தாலோ தெரியவில்லை, சுசீல குமாரனுக் கெதிரில் செல்ல இஷ்டப்படுவதில்லை. ஆகையால் இப்பொழுது பிரதிபையே தன் தமையனுக்கு தே முதலியவற்றைக் கொண்டுபோய்த் தருகிறாள். பிரதிபை ஒரு நாள் சிரித்துக்கொண்டே சுசீல குமாரனிடம், "அண்ணா, நிருபமை இப்போ உனக்கெதிரே ஏன் வருகிறதில்லை?" என்று கேட்க, அதைக் கேட்டு சுசீல குமாரன் நகை முகத்துடன் நிருபமையை அழைத்து, "நிரு, இப்படிவா, நீ ஏன் எனக்கு முன்னே வர இஷ்டப்படுகிறதில்லை?" என்று வினவினான். நிருபமை தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தாள். சுசீலன் கூப்பிட்டதைக் கேட்டவுடனே பிரதிபையண்டை ஓடிப்போய் விட்டாள். பிரதிபையும் ஒவ்வொருசமயம் நிருபமையை நோக்கி, "நிரு, வாஸ்தவமாய்ச் சொல்லு, நீ ஏன் இப்போ அண்ணாவுக் கெதிரே போகிறதில்லை?" என்று கேட்பதுண்டு. இந்தக் கேள்வியைச் செவியுற்றவுடனே நிருபமை தலை குனிந்து கொள்வள்; லஜ்ஜையினால் அவளுடைய தாடை சிவந்து போம். சுசீல குமாரன் விஷயமாய் எப்போதாவது பேச்சு நடந்தால், அவள் அப்போதே தலை குனிந்த வண்ணமாய், ஒன்றும் பேசாமலிருப்பாள். பிரதிபை மகாபுத்திசாலி. ஒரு நாள் அவளுடைய மனதில் திடீரென்று ஓர் எண்ணம் எழுந்தது. அவ்வெண்ணத்தை அந்த சமயம் அவள் ஒருவருக்கும் வெளிப்படுத்தவில்லை; ஆனால் அதைப்பற்றி நினைக்க

நினைக்க, அவளுடைய உள்ளம் மேன்மேலும் ஆனந்தத்தால் பூரிக்கலாயிற்று. அதன் மேல் அவள் ஒரு நாள் ஏகாந்தத்தில் மனோரமையை நோக்கி—"சகி, நிருபமைக்கு இன்னும் ஏன் கலியாணம் பண்ணாமல் இருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, மனோரமை, "அப்பா நிருவிக்காக வரன் தேடிக்கொண்டிருக்கிறார்; ஆனால் தகுந்த வரன் இன்னும் கிடைக்கவில்லை" என்றாள். அதன்மேல் பிரபை மிருதுவான குரலில், "சகி, என் தமையன் உங்கள் ஒருவருக்கும் பிடிக்கவில்லையோ?" என்று கேட்டாள். மனோரமை சிறிது நேரம் வியப்புற்ற கண்களால் பிரபையின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டுப் பிறகு, "சகி, நீ என்ன சொல்லுகிறாய், என் புத்தியில் ஒன்றும் படவில்லை" என்று சொல்ல, பிரதிபை சிரித்துக் கொண்டு, "புத்தியில் படவில்லையா? என் தமையனுக்கு நிருவைக் கலியாணம் பண்ணிக் கொடுக்க உனக்கு இஷ்டமா இல்லையா என்று கேட்கிறேன்" என்றாள். மனோரமை இன்னும் ஆச்சரியமடைந்து, "உன் தமையனுக்கா? சகி, நிருவுக்கும் அவ்வளவு பாக்கியமுண்டா?" என, பிரதிபை, "பாக்கியமுண்டோ இல்லையோ, அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்; இப்போ உங்களுக்கெல்லாம் இது இஷ்டமா சொல்லு," என்று கேட்டாள். மனோரமை கூறினாள்.—"எனக்கு இஷ்டமே. எனக்குத் தெரிந்தமட்டிலும் அம்மாவும் அப்பாவும் இந்த சம்பந்தத்துக்கு சம்மதிக்கவே செய்வார்கள். ஆனால், இந்த சமயம் சுசீலபாபு கலியாணம் பண்ணிக்கொள்வாரா? உனக்குக் கலியாணம் ஆனாலொழிய அவர் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டாரென்று நான் நினைக்கிறேன்."

இதைக் கேட்டதும் பிரதிபை சற்றுத் திடுக்கிட்டுத் தயங்கினாள். பிறகு நகைத்துக்கொண்டே சொன்னாள்.—"என் கலியாணமா? அது வெகு நாளுக்கு முந்தியே ஆய்விட்டதே. என் கலியாணத்தில் இப்போ என்ன பாக்கி இருக்கிறது? இராஜ குமாரன் என்னை இங்கிருந்து எப்போ அழைத்துக்கொண்டு போகிறாரோ, அப்பவே நான் புறப்பட்டுப்போய் விடுவேன்."

இதைக் கேட்டதும் மனோரமையின் நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ளவும், அவளுடைய கண்களில் நீர்ததும்பியது. ஆனால் அவள் அப்பொழுதே தன்னை அடக்கிக் கொண்டு, "அப்படியானால் சரி. ஆனபோதிலும் ஒருநாளைக்கு நீ இராஜ குமாரன் கையைப் பிடித்துக்கொண்டு நாலு பக்கமும் ஏழு தடவை சுற்றி வரவேணுமே."

பிரதிபை நகைத்துக்கொண்டு கூறினாள்—"சகி, ஏழு தடவையாய்ப் போவானேன்? நான் அவரை லக்ஷம் தடவை வேண்டுமானாலும் சுற்றிவரத் தயாராயிருக்கிறேன். நான் அப்படி சுற்றுவது ஒன்றுக்கும் உதவாமற்போய் விடுமோ? அதைப் பற்றி இப்போ பேசுவானேன். பிரயோஜனமுள்ள எதைப் பற்றியாவது பேசு, நான் சொல்வதைக் கேள். இப்போ கொஞ்ச நாளாக என்னுடைய மனசு என்ன காரணமோ தெரியவில்லை நிலை கொள்ளாமல் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது. இனி இந்த வீட்டில் ரொம்ப நாள் தங்கியிருக்கமாட்டேனென்று அடிக்கடி என் உள்ளத்தில் தோன்றிக்கொண்டிருக்கிறது. அண்ணாவைத் தனியே விட்டு விட்டு நான் எங்கேயாவது போக வேண்டி வருமோ என்னவோ. இதை நினைக்க எனக்கு அழுகை வருகிறது. (என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே பிரபையின் கண்களில் நீர்ததும்பிற்று) என் அண்ணாவை யார் கையில் ஒப்பித்துவிட்டுப் போவேன் என்பதைப் பற்றியே சதா யோசித்துக்கொண்டிருக்கிறேன். என் அண்ணாவுக்கு யார் பணிவிடை செய்வார்கள், யார் அவரைப் பார்த்துக்கொள்

வார்கள். அவருடைய வீட்டுக்காரியங்களை யார் சமாளிப்பார்கள் என்ற இவ்விஷயங்களைப் பற்றியே எனக்கு இரவும் பகலும் சிந்தையாயிருக்கிறது. அன்றைய தினம் நிருபமையைப் பார்த்ததும், நிரு அண்ணாவுக்குப் பெண்டாட்டியாய் வருவளானால் நான் நிச்சயமாய் நிச்சிந்தையாயிருப்பேன் என்று திடீரென்று என் மனதில் தோற்றியது. நிருவுக்கு நான் எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். அண்ணா எந்த சமயத்தில் என்ன சாப்பிடுகிறது, அவருக்கு என்ன வேணும்—இதெல்லாம் நிருவுக்குத் தெரியும். மேலும் நிருவைப் போன்ற பெண்டாட்டி கிடைப்பதுண்டே—இது அண்ணாவுக்கு அதிருஷ்டமென்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட பெண் அகப்படுவது லேசா? இப்படிப்பட்ட பெண் ஆயிரத்தில் ஒன்று கூட தேடி எடுக்கமுடியாது. அவளை என் தங்கையென்றே நான் எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் உன்னிடத்தில் எவ்வளவு அன்பு பாராட்டுகிறேனோ, அதைக் காட்டிலும் அதிகமாக நிருவினிடம் அன்பு பாராட்டவேண்டுமென்று எனக்கு ஆசையாயிருக்கிறது. நான் அவளுக்கு மேஜோடு பின்னவும், தையல் வேலை செய்யவும், மிகவும் நன்றாய் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுத்திருக்கிறேன். அவளுக்கும் பியானோ வாசிக்கவும் தெரியும் வீட்டு வேலைகளெல்லாம் நன்றாய்ச் செய்யத் தெரியும். மநோரமா, நீயே சொல்லேன். அண்ணாவுக்கு இப்படிப்பட்ட பெண்டாட்டி வேறே எங்கே கிடைக்கும்? அவளுடைய ரூபத்தைப் பற்றியோ கேட்க வேண்டியதில்லை. நிரு சாக்ஷாத் லக்ஷ்மியென்றே நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட ரூபவதியும் குணவதியும் உத்தமியும் ஆநந்த மய சுந்தரியுமான கன்னிகை வேறெங்கே கிடைப்பள்?" இவ்வாறு பேசப் பேசப் பிரதிபையின் கண்களினின்று ஆநந்த பாஷ்பம் பெருகலாயிற்று.

மநோரமையும் பிரதிபையின் வாயிலிருந்து தன் தங்கையின் புகழ்ச்சியைக்கேட்டு ஆநந்தக் கண்ணீர் பெருக்கலானாள். சற்று நேரம் பொறுத்து, "உன் தமையனிடத்தில் நிருவின் விஷயத்தைப் பற்றி ஏதாவது சொல்லியிருக்கின்றயா?" என்று கேட்டாள்.

பிரதிபை சொன்னாள்—"இல்லை, அண்ணாவிடம் இதுவரையில் நான் ஒன்றும் பேசவில்லை. முதன் முதல் உன்னிடத்தில் தான் இதைப் பிரஸ்தாபித்தேன். உனக்கு சம்மதமானால் அப்புறம் அண்ணாவிடம் சொல்லுகிறேன்."

இப்பால் சுசீல குமாரன் மன நிலை எப்படி இருக்கிறதென்று மநோரமைக்கு அவளுடைய புருஷனுடைய கடிதங்களிலிருந்து ஒருவாறு தெரிந்திருந்தது; ஆகையால் இந்த சமயம் அவனிடம் அவன் கலியாணத்தைப் பற்றி பிரஸ்தாபிப்பது அநுசிதமாயிருக்குமென அவள் கருதி பிரதிபையினிடம் இவ்வாறு கூறினாள்—"சகி, இந்த சமயம் உன் தமையனிடம் நிருவின் விஷயமாய் ஒன்றும் பேச வேண்டாம். நான் முதலில் இதை என் தாயாருக்கும் தகப்பனுருக்கும் சொல்லி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளுகிறேன். அப்புறம் நான் உன்னிடம் சொல்லுகிறேன். அப்போ உன் அண்ணாவிடம் பேசலாம். இப்பவே அவர் காதில் இதைப் போடுவது சரியில்லை யென்று தோன்றுகிறது."

பிரதிபை சரளபாவத்தோடு சகியின் கருத்தை உணர்ந்து, "சரி, அப்படியே செய்வோம்" என்று சொல்லி விட்டாள்.

(தொடரும்)

சிந்தாமணிச் சிறப்பு வெண்பா.

தேவ கோட்டை ஸ்ரீமான் கு. பெ. வீராசாமி செட்டியார் இயற்றியது.

(581-ம் பக்கத் தொடர்ச்சி)

குணமாவ ரில்லிற் குறிப்பாய வாழ்க்கை
மணமாவ ரென்று மகிழ்வர்—கணமேனும்
நீங்காத வன்பை நிறைக்குஞ்சிந் தாமணியைத்
தாங்கா தவரிலையே தான். (11)
தானந் தவமுயற்சி தக்கோ ரினிதோம்பு
மோன முழுது மொழியுமே—வானனிதம்
பெய்மாரி யன்னதெனப் பேசுசிந் தாமணிதான்
பெய்மாரி யாவுலகை மேவும். (12)
மேவு மவாருக்கு மேன்மை பலவருளும்
பூவுலகிற் சிவகலைப் போற்றுதமிழ்—நாவுதருஞ்
சொற்சுவையுங் கொண்டு துலங்குசிந் தாமணியும்
நற்சுவையா யெங்கும் நயந்து. (13)
யனுகி நல்லார் நகைமுகமு மின்சொற்
பயனுகி ஞாலம் பணிப்ப—வயனார்தம்
நாமகளைச் சிந்தாத நன்மணியை நற்புவியோர்
தாமகல வெண்ணுவாரோ தான். (14)
தானுகத் தங்கடலை வனெனவே
மேனாள் விளையகற்றி மேவிடுமின்—ஊனுறும்
ஆக்கை யழியுமென வலறுஞ்சிந் தாமணியை
நோக்கா தவரார் நுவல். (15)
நுவலும் பெருஞ்செல்வ நுட்ப மதியார்க்
கவலுமென நூல்கள் கழற—அவலதனை
யுண்டபெரு ஞான வோராழிக் கண்ணனருட்
கொண்டசிந் தாமணியின் கூர். (16)
கூர்மருப்பும் நால்வாயுங் கொண்ட தனிப்புத்தேள்
சீர்பெருப்பை யாருந் தெரியவே—பேர்பெருக்குஞ்
சிந்தாமணிநாமச் செம்மல் திருவருளைப்
பிந்தாமணிப்பெருமை பேசு. (17)
பேசு முயிருடலிற் பெட்பா யிருப்பதுபோல்
மாசு இறிதமிலா மாண்பதனை—ஆசுகவி
கொண்டேத்துகின்ற குறைதவிர்சிந் தாமணியைக்
கண்டேத்த வேண்டுங் கனிந்து. (18)
கனிவாக நெஞ்சின் கவலையற நீக்கு
முனிவாறிச் சாந்த முனைக்கும்—இனிதாகி
யெப்பா லவர் தமக்கும் யேற்ற சிகாமணியா
மூப்பாலை யொக்கு முறை. (19)
முறையோ வெனவலைழக்கு மொய்குழலார் தங்கள்
மறையோ வெனவுழைக்கு மாண்பும்—அறை கூவி
புல்லொழுக்கம் போக்கும் புதியசிந் தாமணியி
னல்லொழுக்கம் காண்கை நலம். (20)

(தொடரும்)

நிராசை அல்லது நீங்காத் துயரம்.

சகோதரி வி. பாலம்மாள்

(காபி ரைட்.)

(51-ம் பக்கத் தொடர்ச்சி)

5-வது அதிகாரம்.

தங்கம் என்றைக்கும் ஒரே விதமாகப் பிறந்த வீட்டில் தனக்குச் செல்வாக்கு நடந்துவருமென்றெண்ணி யிருந்தாள். கணவன் நேரில் கூறிய புத்திமதிகளில் ஒரு சிறிதும் இவள் மனதில் புகவில்லை. தன் தாய் சொல்வதெல்லாம் தனது நன்மைக்கென்பதே இவளின் திடமான அபிப்பிராயம். உலக நிலை யறியாத இப்பேதைப் பெண் பெட்டியிலுள்ள நகைகளையும் பீரோக்களில் அடுக்கி வைத்திருக்கும் உயர்ந்த சேலைகளையும் கண்டு தனக்குச் சமானமாக பிறந்த வீட்டில் செல்வாக்குள்ள பெண்கள் வேறில்லை என உடல் பூரித்தாள். கிராம வாசமென்றால் ஒரு சிறைச்சாலை போன்றதென்றும் சமையல் முதலிய குடும்பக் காரியங்கள் என்றால் அபாயகரமான அநாகரிக வாழ்க்கையென்றும் இவள் தாய் போதித்து வந்து விட்டமையால் பிறந்த வீட்டில் கைகால் அசையாது உண்டு விட்டு உறங்குவதும் வேடிக்கை விநோதங்களைக் கண்டு களிப்பதும் குடும்ப விசாரமின்றி யிருப்பதும் சுவர்க்கபோகமென எண்ணி எண்ணி மனங் களித்தாள். ஒவ்வொரு சமயத்தில் தன் கணவன் கோபித்துச் சென்றதும் இனி அவன் இங்கு வாராமலிருந்துவிட்டால் என்ன செய்கிறதென்றும் நினைத்து இவள் மன வருத்தமுறுவண்ணம் ஞானம் தன் மகளுக்கு சமயோசிதமாக தைரியங் கூறி வந்தாள். 'சாக்கடைத் தண்ணீருக்குப் போக்கிடமில்லை' யென்றும் 'உன் புருஷன் என்றைக்கொரு நாள் தான் செய்தது குற்றமென்றறிந்து மாமனாரை மன்னிப்புக்கேட்டுக்கொண்டு இவ்வீட்டோடு விழுந்துகிடப்பான்' என்றும், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பொறுமானமுள்ள நகை நட்டுக்களையும் இட்டு தரையில் நடக்கவிடாமல் செல்வமாயும் வளர்த்த பெண்ணை குக்கிராமத்திற்கனுப்பி அடுப்பங்கரையிலடைத்து வீட்டுவேலை செய்யச் சொல்ல பெற்ற தாய்க்கு மனம் ஒப்புமா' என்றும் ஞானம் தன் மகளுக்குக் கூறி வந்தாள். இத்துடன் புருஷ வசியத்திற்கான பல ஜப தபங்களும் மந்திரங்களும் உபதேசிக்கச் செய்தும் புருஷ வசீகரண ரட்சைகளை அடிக்கடி மந்திரவாதிகளைக்கொண்டு தயாரிக்கச்செய்து மகள் கழுத்தில் கட்டி வந்தாள். ஆரம்பத்திலேயே மருமகனுக்கு வசியத்திற்கான ஔஷதப்பிரயோகம் செய்யாமலிருந்து விட்டது பிசகென்று ஞானம் அடிக்கடி மனம் வருந்தியபோதிலும் பெண் கழுத்தில் மாலையாகப் போட்டிருக்கும் ரட்சைகள் அவள் கணவனை வலுவில் தானாகவே ஓடிவரச் செய்யுமென்று உறுதியாய் நம்பி இருந்தாள்.

நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைப்பது மனித வாழ்க்கையில் சகஜமாயிருக்கின்றதை நாம் கண்ணாரக் காண்கிறோம். தங்கம் நினைத்திருந்ததற்கு முற்றும் மாறுதலாகப் பல சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. எதிர் பாரா வண்ணம் இவள் தாய் ஞானம் காலஞ்சென்றாள். தந்தை மறு விவாகம் புரிந்து கொண்டார். பருவ வயதடைந்தக் கட்டழகியை மணக்கப் பெற்ற அனந்தராமனுக்குத் தமது புதிய மனைவியைச் சிங்காரித்து அழகு பார்ப்பதற்கே பொழுது போதாமலிருந்தது. தங்கத்தின் வைபவங்கள் எல்லாம் படிப்படியாக ஓடி ஒளிந்தன. சிற்றன்னையின் தாய் தந்தையரும் வீட்டோடு வந்து விட்டதுடன் வீட்டின் சர்வாதிகாரங்களும் அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப்பட்டு விட்டன. அனந்தராமன் மகளையும் பேரப்பிள்ளையையும் நாள் தவறாது கடலோரம் அழைத்துச் செல்வதை நிறுத்தி விட்டுத் தமது இளம் மனைவியுடன் உற்சாகமாய் உலாவச் செல்லலானார்.

இத்துடன் தங்கத்தின் கஷ்டம் நின்று விடவில்லை. இவள் ஏதேனும் ஆபரணங்களணிந்தாலும் நல்ல சேலை கட்டினாலும் சிற்றன்னைக்கும் அவள் தாய்க்கும் மனம் பொறாது. புருஷனைப் பிரிந்து பிறந்த வீட்டிலிருக்கும் பெண்களுக்குப் பூவும் உடைமையும் ஊட்டமும் உற்சாகமும் வேண்டியிருக்குமோ வென்று ஜாடையாய் பேசிக்கொள்வதை தங்கம் கவனித்து வந்தாள். நாளடைவில் தங்கம் தன் தந்தையிடம் நேரில் தனக்குத் தேவையானவற்றைக்கேட்கக் கூடாதென்றும் சிற்றன்னை மூலமாகவே கேட்க வேண்டுமென்றும் ஏற்பட்டது. சிற்றன்னைக்கு உரிய குற்றேவல்புரிவதற்கு தங்கம்பழக்கப்பட்டாள். பிறந்த வீட்டு ஆசை ஒழிந்துஇனி கணவன் வீட்டிற்கே சென்று விடுவதென்று தங்கம் தனக்குள் தீர்மானித்துப் பலகடிதங்கள் கணவனுக்கெழுதினாள். பதிலொன்றுமே கிடைக்கவில்லை.

முடிவில் தங்கத்தின் கண்ணீரைக் கண்டு சகிக்கமாட்டாது அவள் தமையனாகிய கேசவன் கடலூர்சென்று விசாரித்ததில் சங்கரன் ஊர்விட்டுச்சென்று ஒரு வருஷத்திற்குமேலாகிற்றென்றும் சொத்துக்களைத் தன் மகன் மைனர் நீங்கியதும் அனுபவிக்கும்படி எழுதி வைத்திருப்பதாயும் அவன் காசிக்குச் செல்வதாக ரயிலேறிய தினத்தில் காவேரியாற்றின் வெள்ளப்பெருக்கால் ரயில் வண்டிக்கு விபத்து ஏற்பட்டதாயும் அன்றிலிருந்து அவனைப் பற்றிய தகவலொன்றுங் கிடைக்கவில்லை என்றும் தெரிந்து கொண்டான். சொத்துக்களுக்கு கார்டியனாக சங்கரனின் சிறிய தகப்பனார் ஏற்பட்டிருப்பதாயறிந்து அவரைக் கண்டு பேசினான். அவன் தங்கையைக் கலியாணம் செய்து கொண்டதாலேயே சங்கரன் குடும்பம் இவ்வாறு அலங்கோலமாயிற்றென்று அவர் வருந்துவதைக் கண்டு சகியாது கேசவன் சென்னைக்குத் திரும்பி வந்து தன் தங்கையிடமும் தந்தையிடமும் உள்ள விஷயங்களை எடுத்துரைத்தான். இச்செய்தி கேட்டதும் தங்கத்தின் தந்தை சற்றும்மனக்கலக்கமடையாது "அவன் கெட்டான் முட்டாள். தொலையட்டும்கழுதை. என் பெண்ணுக்கு அவன்தானே சோறு போட்டுக் காப்பாற்றினான். என்றும்போல் தங்கம் இவ்விடமே இருந்து கொண்டிருக்கட்டுமே. இதற்கென்ன கவலை" என்று ஒரே பேச்சில் முடித்துவிட்டு அன்று மாலை மதன விலாச சபையார் ஆடும் தாராசசாங்க நாடகத்திற்கு மனைவி சுந்தரியை ஒரு புறத்திலும் மாமியார் கல்யாணியை மறு புறத்திலுமாக மோட்டார் காரில் உட்கார வைத்துக்கொண்டு வேகமாய் வெளியில் சென்று விட்டார். இது கண்டு தங்கத்தின் மனம் பதறிற்று. தன் கணவன் ரயில் வண்டி விபத்தில் இறந்துவிட்டதாகவே நிச்சயித்தாள். இனி என்ன செய்வதென்ற கவலையும் தன்னாலேயே கணவன் மன வெருப்புற்று காசிக்குச் செல்ல எண்ணி நடு வழியில் விபத்திற்குட்பட்டு உயிரிழந்தானென்ற துக்கமுமுண்டாயிற்று.

'நான் அனாதையாய் விட்டேனே' என்று வாய் விட்டலறினாள். தன் ஜன்மம் அடியோடு வீணாகி விட்டதே என்று துக்கித்தாள். தங்கத்தின் மனவேதனையும் வசனமும் கண்டோர் மனதைக் கலக்கச் செய்தன. தங்கம் இனி விதவையாய் விட்டாள் என்றும் நிச்சயிக்கவும் முடியாமலிருந்தது, அன்று ஏற்பட்ட ரயில்

விபத்தில் சங்கரன் அகப்பட்டுக்கொண்டிருப்பானோ வென்ற சந்தேகமல்லாது வேறில்லை. தங்கத்தின் துக்கத்தை சமாதானப்படுத்தி தேறுதல் சொல்லக் கூடிய மனிதர் ஒருவருமில்லை. சிற்றன்னைத் தனது வயது சென்ற கணவனை வசப்படுத்தி உள்ள ஆஸ்திகளைத் தன் பெயரால் எழுதி வைத்துக்கொள்ளவேண்டுமென்பதிலேயே கண்ணாகவிருந்தாள். 'அன்றே அவனுடன்சென்று குடித்தனம் செய்யாது இப்போது துக்கப்படுபவன்போல் மாமாலம் செய்கிறாயே. நிறைந்த வீட்டில் ஒரு பெண் இவ்வாறு மூலையில் படுத்து அழுதுகொண்டிருந்தால் இவ்வீடு விளங்குவதெப்படி? உள்ள நகைகளையுமிட்டு உயர்ந்தசேலை கட்டித்தருக்கிக்கொண்டு கொண்டவனை ஓட்டித்துரத்தியாயிற்றே. இன்னமும் என்ன செய்ய வேண்டியது பாக்கியிருக்கிறது. இனியாவது வீட்டு வேலைகள்செய்து அடக்க வணக்கத்துடன் பொழுது போக்குவதைவிட்டு நீலித்தனம் செய்கிறாயே" என்று கல்யாணி கடுகடுத்துக் கூறலானாள். இவ்வார்த்தைகளைக் கேட்கும்போதெல்லாம் இருதயத்தில் ஆயிரம் ஊசியெடுத்துக் குற்றுவதுபோல விருந்தமையால் தங்கம் மனந்துடித்தாள். உயிரை மாய்த்துக்கொண்டு விடலாமாவென்று நினைக்கும்போது தனது குழந்தை அனாதையாய் விடுவானே என்ற எண்ணத்தால் பின்தங்குவாள். இவ்வாறு தங்கத்தின் நிலைமை முற்றிலும் வேறுபட்டு தாய் இறந்து தந்தையால் தனக்கேற்பட்டிருந்த செல்வாக்கும் இருந்தவிடம் தெரியாது ஓடி ஒளித்தமையால் ஆற்றுவார் தேற்றுவாரற்று தாமரைத் தண்ணீராய்த் தத்தளித்தாள்.

6-வது அதிகாரம்.

லாஹோரில் கோட்டைக்கு வெளியே உள்ள அகன்ற வீதிகளையும் அழகிய கட்டடங்களையும்காண்போர் அது தெய்வலோகமோ வென்று அதிசயிக்கத் தக்கனவாயிருக்கு மென்பது மிகைப்படுத்திக் கூறும் சொல் அல்ல. இத்தகைய அழகிய மாளிகையின் ஒன்றின்மேல் மாடியில் சுமார் முப்பது வயதுள்ள ஆடவனொருவன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தான். அவ்வறை மிகப் பரிசுத்தமாக இருந்ததுடன் அங்குள்ள சாமான்களும் மனதிற்கு உற்சாக மூட்டும் வண்ணம் செம்மையாய் வைக்கப்பட்டிருந்தன. அறையின் நடுவே சுவற்றில் கிழக்கு முகமாக மாட்டப்பட்டிருந்த லக்ஷ்மி தேவியின் படமானது பாற்கடலின் நின்று மெழுந்த சாக்ஷாத் லக்ஷ்மியைப் போலவே புன்னகை புரிந்த முகமும் கருணைக் கடலென மதிக்கும் இனிய பார்வையும் கொண்டு விளங்கியது. அறையின் நடுவில் இருக்கும் சலவைக்கல் மேஜையின் மீது அன்று புதிதாகக் கட்டி ஜலத்துள் வைக்கப்பட்டிருந்த புஷ்பச் செண்டின் நறுமணம் கம்மென வீசிற்று. கண்ணாடிக் கதவின் மூலமாகத் தன்னுள் அடக்கி யிருக்கும் திருக்குறள், தாயுமானவர் பாடல், குமரேசர் சதகம், கம்பராமாயணம் இவைகளின் பெயரை வெளியிட்டுக்கொண்டு உயர்ந்த பீரோ ஒன்று மற்றோர் பக்கத்தில் நின்றது. தரையில் விரித்திருக்கும் இரத்தின கம்பளத்தின்மீது சிறிய கைராட்டினமொன்று கதிர்முனையில் சுற்றப்பட்டிருக்கும் நூலுடன் வைக்கப்பட்டிருந்தது. இருபத்தி ஐந்து வயதுள்ள மங்கை யொருத்தி கையிலுள்ள வீணையை சுருதிகூட்டி சியாமளா தண்டகத்தை ராகமாலிகையில் பாடிக்கொண்டிருந்தாள். ஏழு வயதுள்ள சிறுமி ஒருத்தி 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பாடம் படிக்க ஆரம்பித்தாள். இதற்கிடையே வேலையாளொருவன் அன்று வந்த தபால்களைத் தனது எஜ

மானிடம் கொடுத்துச் சென்றான். மைதிலி என்று விலாசமிட்ட கடிதத்தை கேசவன் வீணை வாசித்துக்கொண்டு இருக்கும் தனது மனைவி இடம் அளித்தான். கடிதமென்றதும் கையிலிருக்கும் வீணையைக் கீழே வைத்துவிட்டு அக்கடிதத்தைப் பிரித்து மைதிலி மனதிற்குள் படிக்கலானாள். பல பக்கங்களடங்கிய அக்கடிதம் படித்து முடிக்க அரைமணி நேரம் சென்றது. மைதிலி அக்கடிதத்தைப் படிக்கும்போதே தன்னை யறியாது கண்ணீரை ஆறாய்ப் பெருக்கிக்கொண்டு இருந்தாள். இதனால் ஏற்படும் தேம்பலுடையவும் பெருமூச்சினுடையவும் சத்தம் கேட்டு கேசவன் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான். 'மைதிலீ! என்ன இது? ஏன் அழுகிறாய்? கடிதத்திலுள்ள விஷயம் என்ன? ஊரில் அனைவரும் க்ஷேமம் தானே. நீ இவ்வாறு ஒரு பொழுதும் கண்ணீர் விட்டதை நான் கண்டதில்லையே. விஷயமென்ன? உடனே சொல்' என்று அன்புடன் வினவினான். 'என்னென்று சொல்வேன். என் நாவெழவில்லையே. நமது தங்கம் எழுதியிருக்கிறாள். இதைப் படித்துப்பாருங்கள்' என்று மைதிலி அக்கடிதத்தைக் கணவனிடம் அளித்தாள்.

என் பிரியமுள்ள மன்னி!

தானாக விலைவித்துக்கொண்ட விதியை நானாகவே அனுபவித்துத் தீர்க்கவேண்டுமேயன்றி இதைப் பிறரிடம் சொல்லிக் கொள்ளுவதில் பயனென்ன விளையப்போகிறது. மன்னீ! பெண்கள் கடமை யறிந்து குடும்ப நிர்வாகம் புரிந்து கணவனுடன்கூட கண்ணும் இமையும் போல் ஒற்றுமையுடன் தனது வாழ்நாளை சந்தோஷமயமாகக் கழித்துக் கொண்டிருக்கும் உன்னிடம் எனது ஈன ஸ்திதியைத் தெரிவித்து உன் மனதை வருத்தச் செய்ய நான் இதுகாறும் துணியாதிருந்தேன். எதற்கும் ஓர் எல்லையுண்டல்லவா? நான் எவ்வளவு நாட்கள்தான் மனதிலடக்கித் தத்தளிப்பேன். நான் படுந்துன்பத்திற்குக் காரணம் நானே ஆயினும் எந்நிலைமையை இனியும்வெளியிடாது இருப்பதில் இன்னமும் சில புதிய ஆபத்துக்கள் ஏற்படக்கூடியதா யிருப்பதால் எனது சங்கட நிலைமையை உன்னிடம் அறிவித்தல் அவசியமாய் விட்டது பற்றி இக்கடித மெழுதலானேன். என் தலைவிதியை யுணர்ந்து அதற்கேற்றவாறு காலங்கழிக்க நான் நினைத்தாலும் என்னைப் பிடித்தாட்டும் சனிக்கு அது சம்மதமில்லை போலும். சிற்றன்னையின் அட்டகாசமும் தந்தையின் மன மாறுதலும் எனது நிலைமையும் நீ யறியாததன்று. சின்னாட்களாக ஒரு வாலிபன் நம் வீட்டில் தங்கிவருகிறான். சின்னம்மாள் அவனை தனக்கு ஒன்றுவிட்ட அத்தை மகன் என்று உறவு பேசிக்கொள்ளுகிறாள். சகல அதிகாரமும் பெட்டியின் சாவியும் அவனிடமே இருக்கின்றன. அவனே நம் வீட்டில் சர்வாதிகாரியாக விளங்குகிறான். அவனுடைய அதிகப்பிரசங்கித்தனமும் அனுவசிய சம்பாஷணைகளும் ஜாடைச் சொற்களும் அசட்டுச் சிரிப்பும் என்னால் சகிக்கக்கூடியதா யில்லை. நான் பிறந்த வீட்டிலிருந்தால் என் கணவன் தானாகவே என்னைத் தேடி வந்து விடுவான் என்றும், வீட்டுவேலை செய்யவேண்டிய கஷ்டமின்றி என்றும் சந்தோஷமாக இருக்கலாமென்றும் நான் எண்ணி என் தலையில் நானே மண்ணள்ளிப்போட்டுக் கொண்டேன். ஆனாலும் இன்னம் எவ்விதத்துன்பத்திற்கு நான் ஆளாகவேண்டி நேரிடினும் பெண்களுக் கணிகலனாயும் எனக்கு ஓரே மூலதனமாயுமுள்ள கற்பிற்குக் கனவிலும் பங்கம் நேரிடச் சகியேன். இன்னம் சில நாள் இவ்விடமிருப்பின் அதற்கும் எதிர் பாராத வழியில் பங்கம் நேரிட்டுவிடும் போலிருக்கிறது. இது விஷயம் பற்றி தந்தையிடம் ஒரு சமயம் நான் பிரஸ்தா

பித்திரில் "சிற்றன்னை மீதுள்ளதுவேஷத்தால் அவள் அத்தானை தூஷிக்காதே" என்று என்னை யதட்டிவிட்டார். குழந்தை பாலகோபாலன் தக்கபோஷணையின்றி தோலும் எலும்புமாயிருக்கிறான். அவன் படிப்பைப்பற்றி கவனம் செலுத்துவாருமில்லாமலிருக்கிறது. கொண்ட கணவனுக்கும் அவனை யீன்றெடுத்த தாய்க்கும் தொண்டு செய்து புனிதப்படுத்திக் கொள்ள மாட்டாத இச்சடலம் இப்பொழுது அடிமைக் கடிமையாக மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்து பெரிதும் நொந்துவிட்டது. என் தாய் பெண்ணாகப் பிறந்தவெனக்கு ஏற்றதான போதனைகளைச் செய்யாததால் நான் படுந்துன்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அண்ணாவுக்கு நேரில் கடிதமெழுத எனக்கு வெட்கமாகவிருக்கிறது. என்னைக்கூடிய சீக்கிரம் அழைத்துவரும்படி அண்ணாவிடம் சொல்லு. இக்கடிதம் ஒருவருக்கும் தெரியாமல் ரகசியத்தில் எழுதியிருக்கிறேன். இதற்கு பதில் ஒன்றும் எழுதக்கூடாது. எனது துரதிருஷ்டங் காரணமாகவும், புத்திக் குறைவினாலும், நற்போதனை செய்வாரின்றியும் உலகில் பெண்கள் இருக்கவேண்டிய சுகசௌக்கியங்களையெல்லாமிழந்து, கண்ணில் கண்டவர் காணாவிடத்தில் அவதூறு பேசி பழிக்க இவைகளை எண்ணி எண்ணி மனம் புண்பட்டு ஆற்றுவார் தேற்றுவார் அற்று அந்தாப் பரதேசியைப் போல் அல்லும் பகலும் அழுதழுது என் காலத்தைக் கழித்து வருகின்றேன். இவ்விதம் இன்னம் எவ்வளவு நாள் உயிர்த்திருந்து துன்பப்படவேண்டுமோ வென்பதை நினைக்க நினைக்க என் மனம் பதைபதைக்கின்றது. இவ்வளவு சங்கட நிலைமையிலும் என் கணவன் உயிருடன் க்ஷேமமாயிருப்பதாயும் அவரது திருமுகத்தை என்றேனுங் கண்டு களிக்கக் கூடிய நற்காலம் கிடைக்கும் என்றும் என் மனதில் ஏதோ ஒரு தோற்றம் அடிக்கடி உண்டாகின்றது.

குழந்தை பாலகோபாலனைப் பார்ப்பவர்கள் ஐந்தச்சபாலனையும் தந்தையைப் போலவே இருக்கிறான் என்று சொல்லும்போது எனக்குண்டாகும் மனவுணர்ச்சி இத்தகையதென்று எடுத்துரைக்கவியலாததாயிருக்கின்றது. இனி அதிகமெழுத சாவகாசமில்லை. புண்ணியமும் கண்ணியமும் மங்களகரமும் மனச் சாந்தியும் ஒற்றுமையும் பற்றுதலும் சந்தோஷமும் சௌக்கியமும் பேரும் பெருமையும் உயர்வும் உற்சாகமும் அபிமானமும் ஆதரவும் அன்பும் ஆனந்தமும் அமையப்பெற்ற உன் வாழ்க்கையில் உன் கிருகத்தில் புனிதமான உனது நிழலில் இப்பாதகிக்குச் சிறிதளவு இடமளித்து ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். அண்ணாவுக்கு என் நமஸ்காரம் சொல்லவும்.

இப்படிக்கு-உன் பிரியமுள்ள,
தங்கம்மாள்.

இவ்வாறு எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்ததும் கேசவன் துக்கந்தாங்காது மாலைமாலையாகக் கண்ணீர் துதிர்த்து தேம்பித்தேம்பி அழலானான். 'நான் சென்ற முறை சென்னை சென்றிருந்த சமயம் அவளை என்னுடன் புறப்பட்டு வரும்படி கூப்பிட்டேன். வரமாட்டேனென்றான். ஐயோ! நான் அவளைப்பார்த்து வந்து மூன்று வருஷங்களாய்விட்டன. தந்தை மீதுள்ள மன வெறுப்பால் என் தங்கையையும் நான் மறந்துவிட்டேன். என் உடன்பிறந்தவளின் மனவருத்தத்தையும் கஷ்ட நிலைமையையும் கேட்டு என் மனம் தவிதவிக்கின்றதே. நான் அவளுக்கு ஆறுதலளிக்கவும் மனக் கவலையை நீக்கவும் உபயோகமற்றவனாய் விட்டேனே. அன்றே அவளை அவள் புருஷன் அழைத்துச் செல்ல விரும்பிய காலத்தில் அவனுடன் அனுப்பி யிருந்தால் சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பாளன்றோ. பெண்ணி

னிடம் வைக்கக்கூடிய அன்பும், காட்டும் சலுகையும் போதிக்கக்கூடிய விஷயங்களும், கற்றுக் கொடுக்கவேண்டிய காரியங்களும் இன்னவைகள் என்று என் தாய் அறியாதுபோனதினால்தானே தங்கம் இவ்வாறு கண்ணீருங் கம்பலையுமாய்க் காலங்கழிக்க நேர்ந்து விட்டிருக்கிறது. சங்கரன் குடும்பமழிந்து அவன் இருப்பதும் இல்லாததும் நிச்சயமற்றுப்போனதற்கு நாம்தானே காரணமாக ஏற்பட்டுவிட்டோம். இந்தப் பழி நம்மைச் சாராது விடுமோ' என்று பலவாறு கேசவன் பிரலாபித்தான். மைதிலி சமயோசிதமான சொற்களால் கணவனை சமாதானப்படுத்தினாள். முடிவில் மறுதினமே கேசவன் சென்னைக்குச் சென்று தங்கை தங்கம்மாளையும் அவள் பிள்ளை பாலகோபாலனையும் அழைத்து வருவதாகத் தீர்மானித்தான். உடன்பிறந்தாள் அன்பைப் பற்றி விரித்துரைத்தல் எவ்விதம் சாத்தியப்படும்.

மானிட வாழ்க்கையின் இன்பம்.

(ஸ்ரீமதி கஜலக்ஷ்மி அம்மாள்)

சகோதர, சகோதரிகளே,

நாம் வாழ்க்கையை சதா காலமும் ஒரே விதமாக சந்தோஷத்தை அநுசரித்து நடத்த வேண்டும். அப்படியில்லையேல் நமது வாழ்க்கைக்கு சந்தோஷம் ஏற்படாது. ஆகையால் நாம் நமது வாழ் நாட்களை கவலைக்குள்ளாக்கி, இப்பெறுதற்கரிய மானிடப் பிறவியை வீணாக்காமல் அளவில்லாத சந்தோஷம் வந்த காலத்திலாவது, சகிக்கொணாத் துன்பம் வந்துற்ற காலத்திலாவது அமைதியாய் ஒரே மனதுடன் இருக்கத்தெண்டிக்கவேண்டும். சிலர் சந்தோஷத்தை உண்டாக்கக் கூடிய ஓர் விஷயங்களில் அடங்கா மகிழ்ச்சி கொண்டும், ஏதும் ஓர் அற்ப துன்பம் வந்துற்ற காலத்தில் பெரிதும் கவலைக்குள்ளானவர்களைப்போலும் தோற்றுகின்றார்கள். இவ்விதமாக நாம் ஓர் அற்ப துன்பங்களுக்கும் மனதில் கவலை யென்னும் பயிரை நாட்டினோமானால், அது எங்களின் இன்பமான வாழ்க்கையை துன்ப மயமாக்கி விடும். சிறு துன்பங்களுக்கெல்லாம் நம் மனதைச் செலவிட்டோமானால் ஓர் பெரும் கவலை வந்துற்ற காலத்தில் நம்மால் அக்கவலையை சகிக்கமுடியாதுபோய் விடும். சில சமயங்களில் அக்கொடிய விஷத்தைத் தாங்கமுடியாது தற்கொலை செய்யவும் எண்ணம் வரும். எத்தனையோ பேர்கள் அக்கொடிய விஷத்திற்கு இரையாகியுமிருக்கிறார்கள்.

பேராசையினாலும் பலர் கவலைக்குள்ளாகுகின்றனர். ஈசன் நமக்குக் கொடுத்ததேபோதுமென்று திருப்தியாயிருக்கவேண்டும். 'கடவுள் நமக்கு நல்ல செல்வத்தைக் கொடுக்கவில்லையே; அயலிலுள்ளோர் பெரும் பணம் சம்பாதித்துக் கொண்டு மச்சு வீடுகளும், மாட மாளிகைகளும் கட்டிக்கொண்டு இன்பமான வாழ்க்கையிலிருக்கிறார்களே. நாம் அவ்விதம்இன்ப வாழ்க்கை அநுபவிக்க கொடுத்து வைக்கவில்லையே' என்று இவ்விதமான வீண் கவலைகள் கொள்ளக்கூடாது. "செல்வத்திற் சிறந்தது தெய்வத் திருவருள்." செல்வம் நிலையாமையும் திருவருள் அழியாமையையுங் கண்டோர் இம்மொழியைச் சீராட்டுவர். செல்வத்தின் வெறுப்பும், திருவருளில் விருப்புங்கொள்வோர்கட்குக் கவலையிராது. ஓர் பெருஞ் செல்வனுடைய வாழ்க்கையிலும், அன்றுழைத்து அன்றேவாயிலிடும் ஓர் ஏழையினுடைய வாழ்க்கையே இன்பமுள்ளதாயிருக்கிறது. நிலையற்ற இவ்வுல

இல், நிலையற்ற செல்வத்தை நாடாமல் நல்வினையிருந்தால் அது தானே நம்மைச் சேருமென்று எண்ணி குருட்டு தைரியத்துடனிருக்க வேண்டாம். "திரைகடலோடியுந் திரவியந் தேடு" என்றார் ஔவைப்பிராட்டியாரும். பணமில்லாதுபோனால் நம்மால் இவ்வுலகிலிருந்து ஜீவிக்கவும் முடியாது. பிறர் சொத்தை அபகரியாமலிருக்கவும் அதில் இச்சைப்படாதிருக்கவும் பொறாமை கொள்ளாதிருக்கவும் பிரயாசைப்படவேண்டும். இஷ்டப்பட்டால் எல்லாரும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தலாம். இக்கவலைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், எல்லாம் அற்ப விஷயங்களுக்காகவே பிரமாதமாக கவலைப்படுவதாகத் தெரியும். ஒரு மனிதனிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறதென்பதும் நாம் எவ்வளவு பணஞ் சம்பாதிக்க முடியுமென்பதும் ஓர் கணக்கல்ல. இன்று செல்வந்தர்களாயிருப்போர் நாளை ஒன்றிற்கும் கதியற்றவர்களாய் இரந்துண்ணுந் தருவாயில் வரவுங் கூடும். இன்று தரித்திர திசையையுடைய ஓர் ஏழை நாளை சிம்மாசனத்திலிருந்து அரசாளவுங் கூடும்.

செல்வம் நீர்மேற் குமிழி போன்றது. அது போலவே நமது வாழ்க்கையும். அவ்வண்ணமே நமக்கு வரும் இன்ப துன்பங்களும். ஆகையால் நாம் கவலை யென்னும் களை இளமையிலேயே களைந்து வந்தோமானால், நமது வாழ்க்கை சந்தோஷகரமாயும் இன்பமயமாகவுமிருக்கும். இல்லையேல் கவலை யென்னும் கொடிய நாகிற் கிரையாக, நமது இன்ப வாழ்க்கையைப் பறிகொடுத்தவர்களாவோம்.

முதலில் நாம் பண ஆசை, வீண் பெருமை, கர்வம், பொறாமை என்னுந் துர்க்குணங்களை அறவே ஒழிக்கவேண்டும். ஒருவரின்மேல் தீர விசாரித்தறியாமல் ஓர் விஷயத்தை முன்னிட்டு சந்தேகித்து வீண் துவேஷங் கொள்ளக் கூடாது. பிறரின் குணங்களை யறியாது அவர்களுக்குத் துன்பம் விளைவிக்கிறோம். அவர்கள் ஓர் குற்றமும் செய்யாதவர்களாயிருந்திருந்தால் அவர்களின் மனம் எவ்விதம் வேதனைப் படும். ஆதலால் நாம் பிறரின் மனதை நன்றாக அறிந்து நடக்கவேண்டும். நல்ல மனமுடையவர்களும் இருப்பார்கள். துர்க்குணமுடையோர்களும் அநேகர் இருப்பார்கள். நல்ல சிநேகிதர்களைத் தேடுவது பிரயாசையே. ஆங்கிலத்திலும் ஓர் பழமொழியுண்டு. (Faithful friends are hard to find) நாம் நற்குணம் வாய்ந்த உண்மைச் சிநேகிதர்களுடன் தான் சிநேகிதங் கொண்டிருக்கவேண்டும். துர்க்குணமுடையோர்களுடன் சிநேகிதங் கொண்டோமானால் நமக்குப் பின்னால் துன்பம் வந்து எப்போ இவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளுவேனென்று கார்த்தவண்ணமாயிருக்கும். துன்மார்க்கமுடையோர்களுடைய சகவாசத்தைக் காட்டிலும் ஏகாந்தம் நமது இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது, கவலையற்றது. "சீரியரென்னலுந் தீயரென்னலும் சேரும் இனத்தியல்பினால் சேர்ந்த நாமமே." ஒருவனைச் சீரியனென்றும், தீயனென்றும் சொல்லுவது அன்னாருடைய முக்கியமான செயற்கைச் சகவாசத்தினைக் கொண்டதேயாகும். நல்ல குணமுடையோர்களுடன் சகவாசஞ்செய்பவர்கள் சன்மார்க்கத்தை யடைகின்றார்கள். துன்மார்க்கர்களுடன் சிநேகமுடையவர்களாயிருப்பவர்கள் துன்மார்க்கமுடையோராகின்றார்கள். "அற்ப சகவாசம் பிராண சங்கடம்." அவர்களால் சன்மார்க்கமுடைய ஒருவரின் தயவை நாம் சம்பாதித்தால், அன்னாரின் இருதயம் நமக்குச் சொந்தமாகி விடுகின்றது. நம்முடன் சிநேகமாக இருப்பவர்களுக்கும் நம்முடைய சகவாசத்தில் ஆனந்தம் இருக்கிறதென்று அவர்கள் உணர்ந்து கொள்ளும்படியாக நாம் நடக்க

வேண்டும். ஆபத்து வந்துற்ற காலத்தில் நம்மைப் பத்திரமாகக் காப்பாற்றி நம்மை விட்டுப் பிரியாமல் கூட இருந்து கண் விழித்துப் பாடுபடுவோர் நமக்கு எந்த சமயத்திலும் விலைமதிக்க முடியாத துணைவர்களாகவும், நமது உயிருக்கொரு சஞ்சீவியாகவுமிருப்பர். பொறாமை, கர்வமுடைய சொற்கள் இவை எத்தகைய அன்பையும் உடைத்தெறிந்து, எப்போதும் கெடுதி பண்ணக்கூடியது. அதன் காரணமாக ஒரு அருமையான சிநேகிதனையோ ஒரு உறவினனையோ இழந்து விடவும் நேரிடும். குளிர்ந்த மறுமொழியானது பிறருடைய கோபத்தைத் தணிப்பதற்கு இன்றியமையாத கருவியாகும். உற்சாகத்துடனிருப்போர்களை எப்போதும் நம்பலாம். அவர்கள் எவ்வித கஷ்டங்கள் நேரிட்டபோதும் கடவுள் எக்காலத்திலாவது தம்மை நல்ல நிலைமையில் இருத்துவாரென்ற நம்பிக்கையுடன் அக்கஷ்டங்களை யெல்லாம் எதிர்த்துப் போராடி தைரியத்தைக் கைவிடாது முக மலர்ச்சியுடனிருப்பார்கள். சிறு துன்பங்களுக்கெல்லாம் கவலைப்பட்டுக்கொண்டு இருப்போர்களை அக்கவலையே தின்றுவிடும். அவர்களின் உள்ளத்தில் நல்ல குணம், நல்ல நினைவு இல்லாமல் மறைந்து விடுகிறது. உற்சாக குணம் அழிந்து போகிறது. நமது மனம் சென்ற வழியே அறிவையும் செலுத்தக் கூடாது. மனமானது நல்வழி, தீயவழி இவ்விரண்டிடத்தும் சக்கரம்போல் சுழன்றுகொண்டிருக்கும். நாம் மனம்போனவாறு நடந்து கொண்டிருந்தோமானால், அது கட்டுக்கடங்காது நம்மை மீறிவிடும். நாம் பகவத் சந்நிதியில் இருந்து கடவுளைத் துதித்தவாறிருந்த போதிலும் நமது கட்டுக் கடங்காத மனமோ பலவழிகளிலும் சென்று கொண்டிருக்கும். அதன் இஷ்டப்படி நடந்தோமானால் நமக்குச் சத்துரு அதுவே; அதை அடக்கி ஆளுவோமானால் நமக்குப் பரமமித்துருவும் அதுவே.

அத்துஷ்ட மனம் போனபோக்கெல்லாம் போய் நமது சந்தோஷமான வாழ்க்கையைக் கவலைக் குள்ளாக்காமல் அகில லோகங்களையும் ரக்ஷிக்கும் சர்வ ஜீவதயாபரனின் திவ்விய திருவடிகளிலே மனதைச் செலுத்தி நமது வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாய் நடத்தப் பெருங் கருணைக் கடலாகிய எம்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

சுபமஸ்து.

அக்டோபர் மாதத்துப் பரீக்ஷை.

(ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள்)

சமுத்திரக்கரையோரமாய் மணலிற் சாய்ந்த வண்ணம் ராமசந்திரன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருந்தான். அவன் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே முதலில் ஒன்றிரண்டாய்த் தோன்றிய நட்சத்திரங்கள் பிறகு கூட்டம் கூட்டமாய்த் தென்படலாயின. அவன் வாழ்நாளின் இனிய நோக்கங்கள் குன்றி மங்கியதுபோல், ஆகாயமும் சிறிது சிறிதாக இருளடையத் தொடங்கிற்று: தான் பி. ஏ. பரீக்ஷையில் தவறிய செய்தி அன்று மாலைதான் ராமசந்திரனுக்குத் தெரியும். தன்னையும் தன் பிற்காலத்தையும் பற்றி நினைத்து உள்ளுக்குள்ளேயே களிப்பெய்தி அவன் கட்டியிருந்த ஆகாயக் கோட்டை முழுதும் இச்செய்தியால் ஒரு நிமிஷ நேரத்தில் சிதறுண்டு போயிற்று. கணவனை யிழந்த கைம்பெண்ணான அவன் தாய்க்கு அவனையும் அவன் சிறிய தங்கையையும் தவிர வேறு குழந்தைகளில்லை. மேலும், இப்பொழுது கொஞ்ச காலமாக அவனொருவனே அவள் ஜீவிய கால

சந்தோஷத்திற்கு முற்றிலும் இருப்பிடமானான். ஏனெனில், விஜய லக்ஷ்மி யென்று தங்கள் அத்தையின் பெயரையிட்டு, வீட்டில் அவர்கள் அன்புடனும் அருமையுடனும் விஜயாவென்று அழைத்து வந்த அவன் தங்கை தன் பெயருக்கேற்ப அதிர்ஷ்டவதியாயிருப்பாளென்று அவள் குழந்தைப் பருவமுதல் அவர்கள் எண்ணியிருந்ததற்கு முற்றும் மாறாக ஆனதே அதற்குக் காரணம். அவளுடைய அழகைக்கண்டு ஆசைப்பட்டுப் பெரும் பணம் படைத்த மிராசுதாரர் ஒருவர் தன் மகனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொண்டபொழுது, அவள் பெற்றோர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையேயில்லை. ஆனால், அந்தோ! விதியை விலக்க யாரால் முடியும்? அவளுக்குப் பதினாறு வயது நிறைவதற்குள் கணவன் இறந்துபோக, பாலியக் கைம்பெண்ணாய் விஜயா தந்தை வீடுவந்து சேர்ந்தாள்.

ராமசந்திரன் தந்தை சொற்ப சம்பளத்தில் ஸப் ரிஜிஸ்டார் உத்தியோகத்திலிருந்தவர் தான். ஆயினும், பொய் புனைசுருட்டு ஏதுமின்றி நல்வழியில் பாடுபட்டுச் சிறிது ஆஸ்தி சேகரித்து வைத்துவிட்டு இறந்தமையால், அப்பணத்தைக்கொண்டு அவன் தன் காலேஜ் படிப்பை அதிக சிரமமன்னியில் விருத்தி செய்துகொண்டு வந்தான். அவனது தாயும் குடித்தன முறை தெரிந்தவள், புத்திசாலி. ஆகவே, இவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் இச்சிறிதளவு பாக்கியமாவது தனக்குத் தங்கிற்றே என்று ஒருவாறு மனம் தேறி, அவன் படிப்பின் நிமித்தம் கிராமத்தில் தன் சொந்த வீட்டைவிட்டுச் சென்னையில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் வந்து வசிக்கலானாள். ராமசந்திரன் இதுவரையில் ஒரு பரீக்ஷையிலாயினும் தவறாது தேறிக்கொண்டு வந்ததே அவள் மனதிற்குச் சிறிது தைரியத்தையும் நம்பிக்கையையும் அளித்தது தற்பொழுதோ?

இனி தனது காலேஜ் சிநேகிதர்கள் முகத்தில் எப்படி விழிப்பது? மானம் போய்விடுமே என்று ராமசந்திரன் தனக்குள்ளேயே யோசித்து மனம் புழுங்கினான். பரீக்ஷையில் அவனுடன் சென்று தேறிய பையன்கள் யாவரும் அவனைவிட புத்தியில் மேம்பட்டவர்களா? எவ்வளவோ பெயர்கள் தன் யோக்கியதையின் பாதி கூடப்பெறாதவர்கள் என்று அவன் தானே கூறிக்கொண்டான். இச்சங்கதி அவன் தாய்க்கு எட்டினால் அவள் மனதிற்கு எவ்வாறு இருக்கும்? நல்வழியில் சம்பாதித்த சொத்தானதினால்தான் ஈசுவர கிருபையில் அவன் இதுவரையும் ஒன்றிலும் தவறாமல் படித்து வருகிறானென அவள் கண்களில் நீருடன் எப்பொழுதாவது சொல்லும்பொழுது அவனும் கேட்டிருக்கிறானன்றோ! அன்று நேர்ந்த அவமானத்தைப் பற்றி நினைக்க நினைக்க அவன் மனது புண்ணாயிற்று. பரீக்ஷைக்குச் சென்றிருந்த பையன்கள் பெயர்கள் யாவற்றையும் எழுதி ஒட்டப்பட்டிருந்த பலகையில் சாயந்திரம் தன்னைப் பின்னும் அவமானப்படுத்துவதற்கென்றேபோல், தன் பெயர் ஒரு எழுத்துக் கூட வெளித்தெரியாதபடி நன்றாய் மசியினால் அடிக்கப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதுபோல் அவனுக்குத் தோன்றி தேகம் குன்றியது. இப்பொழுதுதான் முதன் முதல் பரீக்ஷையில் தவறியவனாகையால், அவன் மனம் விண்டு அதைத் தாங்கச் சக்தியற்றவனாய் தெரிந்தவர்கள் ஒருவரும் பார்த்துப் பேசுவதற்கு முன்னமே கடற் கரையை யடைந்தான். கரையோரமாய் அலைகள் மோதுமிடத்து, ஒரு படகிற்குச் சமீபமாக அவனுக்கு மறைவான விடம் அகப்பட்டது. பொழுது சாய்ந்து அஸ்தமன

வேளை சமீபித்தும், அவன் ஏக்கம் பிடித்த மனதுடன் கருங்கடலை நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தான். அலைகளால் அலைக்கப்பட்டுச் சமுத்திரத்தில் தத்தளிக்கும் ஒரு சிறு படகு தன் கதியைப் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்துகொள்ள முடியுமோ, அதற்குமேல் அதிகமாய்த் தன் நிலைமையைப் பற்றி ராமசந்திரனும் எண்ணமற்றவனாய் உட்கார்ந்திருந்திருக்கும்பொழுது, துரதிர்ஷ்டவசமாக, அவனுக்கு அறிமுகமான பையனொருவன் அவன் சாய்ந்திருக்கும் மறைவிடத்தை தூரத்திலிருந்து பார்த்து "என்ன? நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டு வந்தான். இப்பையன் சமீபத்தில் நடந்த ஆனர்ஸ் பி.ஏ. (Honours B. A.) பரீக்ஷையில் முதன்மையாகத் தேறியவர்களிலொருவன். "ராமேசுவரம் போனாலும் சனீச்வரன் விடவில்லை" என்பதுபோல அவன் தனிமையைக் கலைக்க அங்கும் ஓர் தடை ஏற்பட்டது. வேறு வழியில்லாமல் ராமசந்திரன் அவனைக் கண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

நீலகண்டனென்னும் பெயர் கொண்ட அப்பையன் சிரித்த முகத்துடன் பக்கத்தில் உட்காருவதைக் காண அவனாற் பொறுக்க முடியவில்லை. கிட்ட நெருங்கியதும், முகத்தைப் பார்த்து "என்ன! உனக்கு உடம்பு சரியாயில்லையா?" என்று நீலகண்டன் சந்தேகப் பார்வையுடன் வினவ, "ஆம்" என்று ராமசந்திரன் வேகமாய்ப் பதிற் சொன்னாலும், அன்று சமாசாரத்தை அறியாதவர் எவரும் அவன் முகக் குறியிலிருந்தே ஏதோ நடந்திருக்கிறதென்று நன்றாயறிந்து கொள்ளக் கூடும்.

"அதிருக்கட்டும். நீ எப்படி பரீக்ஷையில் தவறினாயென்று நினைக்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இவ்வருஷம் எவ்வளவோ பையன்கள் தேறியிருக்கிறார்களே" என்று கேட்டுவிட்டுப் பின்னும் விடாமல், "நான் எப்படித் தெரியுமா? இவ்வருஷத்து (Politics Medal and Economics Prize) இரண்டும் என்னுடையதுதான். ஆனால் Politics Medalக்குத் திருச்சியில் ஒரு பையனென்னுடன் கூட பங்கிற்கு இருப்பதாய்க் கேள்வி. அதெல்லாம் பட்டணத்துப் பையனொருவனே எல்லா பரிசுகளையும் அடித்துக்கொண்டு போவதாவென்று அவர்கள் வேண்டுமென்று செய்த வேலையாய்த்தானிருக்கும். "பாலிடிக்ஸ்" பேபரில் நான் அவ்வளவு நன்றாய் எழுதியிருந்தேன். "ரிகார்டு மார்க்" தான் எனக்கு நியாயமாய் கிடைத்திருக்கவேண்டியது" என்று இவ்விதம் அவன் நிற்காமல் தன்னைப் புகழ்ந்து கூறிக்கொள்ளும்பொழுது ராமசந்திரனுக்குக் காதில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருந்தது. அவனுக்குக் கிட்டாமலிருந்த கௌரவமெல்லாம் நீலகண்டனுக்கு அவனுடைய நல்ல திர்ஷ்டத்தினால் வாய்ந்திருந்தது. ஆனால் அதிக சந்தோஷத்தில், தன் நிதானம் தவறாமல் நடந்து கொள்ளும்விதம் அவனுக்குத் தெரியவில்லை. ஆகா! கொடிய வெப்பத் தீயானது பூமியினின்றும் கிளம்பி எவ்விதம் யாவற்றையும் உலர்த்தி வறச்செய்து விடுகின்றதோ, அவ்விதமே விரும்பிய காரியம் கைகூடும்போது மனிதர்களும்எவ்வளவு தயை தாட்சணியமற்றவர்களாய் விடுகிறார்கள்!

ராமசந்திரன் ஏதோ ஞாபகத்துடனிருப்பதாகத் தோன்றவே, நீலகண்டனெழுந்து, "நான் போகிறேன். அடுத்த தடவை நிச்சயம் 'பாஸ்' பண்ணி விடுவாய்" என்று கூறிவிட்டு யாரோ அவனைக் கைதட்டிக் கூப்பிட அப்பக்கம் விரைந்துசென்றான். இன்னும் யாராவது தேடிவந்து விடுவார்களோ வென்ற பயத்தில் ராமசந்திரன் நீலகண்டன் செல்லும் பக்கமே பார்க்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு மினு மினுப் பூச்சி

கள் போன்ற நட்சத்திரங்களைத் தவிர வேறு வெளிச்சமில்லாமல் அங்கெங்கும் கும்மிருட்டாகி விடவே, அவனெழுந்து மெதுவாய்த் தளர்ந்த நடையுடன் தன் வீடு நோக்கிச் சென்றான். வாயற்படியில் அவன் தாயார் பார்வதி அம்மாள் அவன் வருகையை எதிர் நோக்கி ஆவலாய் நின்றுகொண்டிருந்தாள். பல கவலைகள் அவனுள்ளத்தை வருத்த இச்சமயத்தன்னுடன் யாராவது அனுதாபப்படமாட்டார்களாவென்று யோசித்துக்கொண்டே படியேறும்பொழுது பார்வதி அம்மாளும் மிகவும் கவலை தேங்கிய முகத்துடன் நிற்பதைக் கண்டான். ஒருவேளை எதிராத்து சீனு முன்னதாகவே அவளுக்குச் சங்கதியறிவித்திருப்பானோவென்று நினைப்பதற்குள் பார்வதி அம்மாள் "ராமு! வீதியில் வரும் ஒவ்வொருவரையும் நீதானோவென்று பார்த்துக்கொண்டு நான் எவ்வளவு நாழிகையாய் நின்றுகொண்டிருக்கிறேன்! இன்னும் பொழுதிருக்கிறது. அப்படி அகாலமாகி விடவில்லையே. யாராவது பெரிய டாக்டர் ஒருவரை அழைத்து வாயேன். இன்று விஜயாவின் உடம்பு மாதிரியைப் பார்த்தால் எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது" என்றாள்.

"திடீரென்று பயப்படும்படி என்ன?" என்று ராமசந்திரன் கேட்டான்.

"பயப்படும்படி என்னவா? உனக்குத் தெரியவில்லையா? அவள் அடிக்கடி இருமுவதைப் பார்த்தால் கோபாலன் கூறியது உண்மையாய் விடும் போலிருக்கிறது."

"ஓகோ! வியாதியை முன்னதாகவே கண்டறிந்து சொல்லும்படி கோபாலன் அவ்வளவு பெரிய வைத்தியனாகி விட்டானா? புதிதாய் டாக்டர் பரீக்ஷை பாஸ் பண்ணிவிட்டு வருகிறவர்களெல்லோரும் இப்படித் தான்! ஊரில் எதைப் பெரிய வியாதியென்று சொல்லுகிறார்களோ அதையே யாவருக்கும் கூறுவது வழக்கம். அம்மா! நீ வீண் கவலைப்படாதே. அப்படிப்பயப்படும்படியாதொன்றும் இராது" என்று ராமசந்திரன் அலட்சியக் குரலில் கூறிவிட்டு உட்செல்ல அவன்பின் சென்ற பார்வதி அம்மாள் விளக்கு வெளிச்சம் அவன் முகத்தில் பட்டதும் அது களைகுன்றியிருப்பதைக் காணவே அவன் பரீக்ஷையைப் பற்றிக் கவலை கொள்ள ஆரம்பித்தாள். "ரிஸல்டு" வெளியாகும் நாள் கிட்டிவிட்டதென்று தெரியும். என்றும்போல் அவன் பரீக்ஷையில் பாஸ் பண்ணி விடுவானென்ற நம்பிக்கையில் அவள் இதுவரை அதிகக் கவலைப்படவில்லை. மனதைச் சற்று தைரியப்படுத்திக்கொண்டு "என்ன ராமு! உன் முகம் வாட்டமடைந்து இருக்கிறதே, பரீக்ஷை சமாச்சாரம் ஏதாவது தெரிந்ததா? ஏன்? ஐயோ தெய்வமே! தவறிப்போய் விட்டதா என்ன?" என்று கேட்டு விட்டு பார்வதி அம்மாள் அவனை வெறித்து நோக்கிக் கொண்டு நிற்க, "ஆமாம், என் துரதிர்ஷ்டம்; என்ன செய்கிறது" என்று ராமசந்திரன் தலை குனிந்துகொண்டு சொன்னான்.

அவன் தாய் அத்துடன் விடாமல் "ஏன்? எப்படித் தவறிற்று? நீ தான் நன்றாய்ப் படித்தாயே. அவர்கள் வேண்டுமென்று அப்படிச் செய்திருக்கவேண்டுமே யொழிய அது ஒரு நாளும் இருக்காது. நீ பள்ளிக்கூடம் சேர்ந்து வாசிக்கத் தொடங்கியது முதல் இதுவரையில் ஒன்றிலாவது தவறினதுமில்லை. சரியாய்த் தெரிந்துகொண்டு வந்தாயா?" என்று கேட்டாள்.

"இனிமேல் தெரிந்து கொள்ளுவதென்ன? நான் என் கண்ணாலேயே பார்த்துவிட்டு வந்தாயிற்று" எனறான் ராமசந்திரன்.

"நீ வெகு சாதாரணமாய்ச் சொல்லுகிறாயே. இதற்குத்தானா நெற்றி வேர்வை நிலத்தில் விழ

உன் தகப்பனார் சம்பாதித்த சொத்து செலவழிந்தது?" என்று பார்வதி அம்மாள் வெறுப்புடன் கூறுவதைக்கேட்டு ராமசந்திரனால் மௌனமாயிருக்க முடியவில்லை. எவ்வளவோ நிதானமுள்ளவர்களும் தம்மைப் பற்றிப் பிறர் சொல்லக்கேட்கப் பொறுமையையிழப்பது சகஜமாயிருக்கும்பொழுது இருபது வயது கூட ஆகாத பையனைப் பற்றிக்கேட்கவேண்டுமா? அளவுக்கு மிஞ்சித் தன்மேற் கொண்டிருக்கும் அபிமானத்தாலேயே தன் தாயார் அவ்விதம் பேசுகிறாளென்றறிந்தும் ராமசந்திரன் மனம் பொறுக்காதவனாய், "இந்தத் தடவை தவறிப்போய் விட்டால் என்ன முழுகிப்போய் விட்டது! அடுத்த தடவை முதல் வகுப்பில் பாஸ் பண்ணி விடுகிறேன்" என்று அலட்சியமாய்ப் பதிற் சொன்னான்.

அவன் தாய் அதைக் கவனியாது "எதிராத்து சீனு கூட பாஸ் பண்ணியிருக்கும்பொழுது நீ தவறிப்போகவேண்டுமா? அவனுக்கு இந்த வருஷம் கலியாணம் கூட ஆய்விடும். அவன் தகப்பனார் அவன் பரீக்ஷை பாஸ் பண்ணுவதற்காகத்தான் காத்திருந்தார். அவர்களுக்கெல்லாம் நல்ல அதிர்ஷ்டமிருக்கிறது. ஐயோ! இந்த அவமானத்தை என்னால் தாங்க முடியவில்லையே" என்று பின்னும் கூற, ஏற்கெனவே தன்னை இகழ்ந்து கொண்டிருந்தாளாகையால், மேன்மேலும் கேட்க முடியாமல் ராமசந்திரன் "ஆமாம். எதிராத்து சீனு பாஸ் பண்ணினால், அவன் என்னைப்போல்தான் இருக்கிறானோ அதற்கு? அவனுக்கு அப்பா இருக்கிறார். இப்படிக் குடும்பக் கவலையும் விசாரமும் அவனுக்கேது? விஜயாவைப்போல் எவ்வளவோ கவலைகள் ஏற்பட்டிருக்கின்றன. விஜயா புக்காத்திலிருந்து இங்கு வந்தபொழுதே எனக்குத் தெரியும் இப்படியெல்லாம் வருமென்று. அதுவும் தவிர யாராவது உங்களை இங்கு பார்க்க வந்துவிட்டால்போதும்; நீங்கள் போடும் இரைச்சலில் படிப்பில் கொஞ்சம் கூட கவனம் செலுத்த முடிவதில்லை. இப்படிப் பட்ட தொந்திரவுடன் எந்தப் பையன்தான் பரீக்ஷைக்குச் சென்று பாஸ் பண்ணி முடியும்?" என்றான்.

இவ்விதம் சிறிதும் யோசனையில்லாமல் தன் தங்கையைப்பற்றி வெறுப்பாய் அவன் பேசும் வழக்கமில்லை. இப்பொழுது அவனறியாமலே அவ்வார்த்தைகள் வெளிவந்து விட்டன. ஏற்கெனவே நொந்து கிடக்கும் இருதயத்திற்கு வேறென்னவேண்டும்? அதுவும் ராமு வாயிலிருந்தே இவ்வார்த்தைகளைக் கேட்பதென்றால்? பார்வதி அம்மாள் கண்களினின்றும் கண்ணீர் பெருக ஆரம்பித்தது. இச்சமயத்தில் அறைக்குள்ளிருந்தும் மெதுவாய் விம்மி அழும் சத்தம் காதிற்பட, ராமசந்திரனுக்குத் தான் பேசியது பிசகு என்று பட்டாலும், அதற்காக மறுபடியும் தழைந்து கூற இஷ்டமில்லாதவனாய் ஒரு நாற்காலியில் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்து கொண்டான். இவர்கள் இரைந்து பேசியது உள்ளே படுத்திருந்த விஜயாவின் காதுகளிலும் விழுந்தமையால், அவளெழுந்து கதவோரமாய் வந்து நின்று அவர்கள் பேசியது முழுமையும் கேட்டாள். மிக்க நுட்ப மனதுடையவர்களுக்குப் பிறர் கவனமில்லாமல் கூறும் சொற்கள் எவ்வண்ணம் இருதயத்தைப் புண்படுத்துமென்று யார் கூற முடியும்? அச்சமயம் ஒருஅன்பான வார்த்தை அந்நொந்து கிடக்கும் உள்ளத்திற்கு எவ்வளவோ ஆறுதலை யளிக்குமன்றோ!

இரவு மணி ஒன்பதுக்கு மேலாயிற்று; கோடை மழை பெய்யும் என்பதற்கடையாளமாக அன்றுபகலெல்லாம் வெய்யிலின் தாபமும் சற்று அதிகமாகவே யிருந்தது. இச்சமயத்தில் ஒரு மழைக் காற்று விர்ரென்று உள்ளே அடித்து விளக்கை அணைக்க, இடை இடையே

பளீர் பளீரென்று மின்னும் மின்னலைத் தவிர அங்கெங்கும் ஒரே இருட்டாகி விட்டது. ஆனால் இதொன்றையும் சிறிதும் கவனியாது அம்மூவரும் அவ்விருட்டில் மௌனமாய் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் இருதயத்திலெழுந்த எண்ணங்களை நாம் இங்கு விவரிக்கவும் வேண்டுமோ! தான் சற்றும் யோசனையின்றி கூறிய மொழிகளைப் பற்றி ராமசந்திரன் பச்சாத்தாபப்பட, பார்வதி அம்மாளும் தான் அவனுக்குக் கோபம் வரும்படி பேசியது பிசகே யென்று வருத்தம் கொண்டாள். விஜயாவோ! இவையாவற்றிற்கும் தான்தான் காரணமோ வென்ற எண்ணமெழ, மெய் சோர்ந்து உள்ளம் பதறி நின்றாள்.

இரண்டு மூன்று மாதங்கள் சென்றன. பார்வதி அம்மாள் தன் குமாரியின் உடம்பைப் பற்றி முன்னினும் அதிகமாய்க் கவலைகொள்ள முகக் களைகுன்றி தேகம் நாளுக்கு நாள் மெலியத்தொடங்கிற்று. எழுந்து நடமாட முற்றிலும் இயலாதவளாய்ப் படுத்த படுக்கையாயிருந்த அவளுக்கு அவர்களுக்கு நிரம்பப் பழக்கமுள்ள கோபாலன்தான் சிகிச்சை செய்து வந்தான். டாக்டர் தொழிலுக்குப் புதியவனாயினும், கோபாலன் சிலரைப்போல் தனக்கு மேற்பட்டவர்கள் கூறும் மொழிகளைக் கேட்டு அதன்படி நடக்க இசையாமலிருக்கவில்லை. மேலும், சுபாவத்தில் இளகிய மனதுடையவனாய், அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தவனாயுமிருந்ததால், கவலையுடன் அவளுடம்பைக் கவனித்ததில் அவளுடைய வியாதி க்ஷயமென்பதைக் கண்டுகொண்டான். கணவனை யிழந்த கவலையே அவளுடைய தேக சௌக்கியத்திற்குப் பெருந் தீங்காய் முடியுமென்ற பயம் அவனுக்கு ஏற்கெனவேயுண்டு. வியாதி பெரிதாகையால் அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைப் பற்றி அவன் ராமசந்திரனிடம் இரண்டு மூன்று தரம் எடுத்துக் கூறியும், அக்டோபர் மாதத்தில் மறுபடி நடக்கப்போகும் பரீக்ஷையில் தான் முதலாய் "பாஸ்" பண்ணவேண்டுமென்று மிகவும் ஊக்கத்தோடு படிக்கின்றபடியால், அது முடிந்ததும் பார்த்துக்கொள்ளலாமென்று அவன் அலட்சியமாய்ப் பதிற் கூறிவிடவே கோபாலன் மௌனமாயிருக்கும்படியாயிற்று. ஊர் மாற்றுவதினாலேயே பல பெயர்கள் வேறு மருந்துகளொன்றும் இல்லாமல் இவ் வியாதியினின்றும் குணமடைந்து விடுகிறார்களென்று அவன் கூறக்கேட்டு பார்வதி அம்மாள் விஜயாவும் அப்படியே சௌக்கியமடையமாட்டாளாவென்று நம்பிக்கைகொண்டு சற்று மனம் தேறினாள். அவள் கொண்டிருந்த அளவு கடந்த அபிமானமானது கெடுதியாயொன்றும் நேராதென்றே அவளை ஒவ்வொரு சமயம் முற்றிலும் நம்பச் செய்தது.

ராமசந்திரன் மிகவும் ஊக்கத்துடன் படிப்பதைக் கண்டு ஆநந்தமடைவதற்குப் பதிலாய், பரீக்ஷை ஏன் இப்பொழுது வரவேண்டுமென்று கூட அவள் கவலைகொள்ளத் தொடங்கினாள். ஒவ்வொரு சமயங்களில் அவனுக்குப் பரீக்ஷை தவறியதல்லவா இவ்விதம் ஊர் மாற்ற முடியாமல் அவ்விடத்திலேயே தங்கும்படியாக நேரிட்டதென்று தெய்வத்தை நொந்து கொண்டாள். கிராமத்தில் தங்கள் சொந்த வீட்டிற்சென்று இருந்தாலும் விஜயாவின் உடம்பு சிறிது குணமடையக் கூடுமன்றோ!

ஒருநாள் சாயந்திரம் அவள் விஜயாவிடம் ராமசந்திரனைப் பற்றிப் பேசும்பொழுது "ராமு ரொம்ப ஊக்கமாய்த்தான் படிக்கிறான். உனக்கு மருந்துகொடுப்பதைப் பற்றியாவது நான் கேட்பதற்குப் பதிற் சொல்லுவதைத் தவிர பாக்கி நேரங்களில் அவன் பேசுவது கூட இல்லை. உங்கப்பாவுக்கிருந்த உழைப்பு முயற்சியெல்லாம் அவனுக்குமிருக்கிறது.

அவர் தன் வேலையில் வஞ்சனையின்றி உழைத்ததாக எல்லோரும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்" என்று கூறுவதற்குள் கண்களில் பெருகிய நீரைப்புடவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டு "போன நாட்களெல்லாம் போகட்டும். ஈசுவரா! என் குழந்தைக்கு ஒன்றும் வாராமல் நீ தான் காப்பாற்றவேண்டும்" என்று சொல்ல விஜயாவின் தலையைத் தன் மார்பில் வைத்தணைத்துக்கொண்டாள். அவள் இப்படிச் செய்ததும் உள்ளே அடக்கி யிருந்த துக்கம் பொங்கியெழ, விஜயாவின் கண்களிலிருந்து கண்ணீர் மாலையாய்ப் பெருகிற்று.

"என்னம்மா! நீ அழாதே. அப்புறம் அதிகமாக இருமத் தொடங்கும். உன்னுடன் நான் அடிக்கடி பேசலாகாதென்றுகூட கோபாலன் சொல்லுகிறான். நீ அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே" என்று தாயார் அன்பாய்க் கூறி சாந்தப்படுத்த, அவள் பின்னும் அதிகமாய அழத்தொடங்கினாள். ராமசந்திரன் தன் படிப்பிற் கொண்டிருந்த ஊக்கத்தில் அவளை முற்றும் மறந்திருந்தது விஜயாவுக்குப் பெரிய துக்கமாயிருந்தது.

"அவன் அப்படிப் படிக்கும் பட்சத்தில் நிச்சயம் எல்லாருக்கும் முதலில் பரீக்ஷையில் தேறி விடுவான். ஆனால் அதைப் பார்த்துச் சந்தோஷப்பட நான் உயிருடன் இருப்பேனோ என்னவோ" என்று கூறி மீண்டும் அடக்கமாட்டாமல் அவள் தேம்பித் தேம்பி அழுததும், அக்காரணமாய் அவளுக்கு அதிகம் இரும ஆரம்பித்து முடிவில் இருமலுடன் சிறிது இரத்தமும் விழுந்தது. பார்வதி அம்மாள் அதைக் கண்டு நடுநடுங்கிப்போய் பக்கத்தறையில் வாசித்துக்கொண்டிருந்த ராமசந்திரனைக் கூப்பிட ஓடினாள். "அப்பா! என்ன தொந்திரவு!" என்று வைதுகொண்டே அவனெழுந்து வர, அவள் கீழே சிந்தியிருந்த இரத்தத்தைக் காட்டி "இதைப் பார். நீ வேறு ஒரு டாக்டரையும் கூப்பிட்டுப் பார்க்க மாட்டேனென்றாயே. கோபாலன் விஷயத்தில் எனக்கிருந்த நம்பிக்கைபோய் விட்டது" என, ராமசந்திரன் ஒன்றும் பேசாமல் மௌனமாய் நின்றான். 'பரீக்ஷை கிட்டியிருக்கும் சமயத்தில் படிப்பிற்குத் தடையாய் அங்குமிங்கும் அலைய நேரிட்டால் என்ன செய்வது? இருமலுடன் விழுந்த இரத்தத்தினால் ஒரு பாதகமும் ஏற்படாது. அவள் அதிகமாய் அழுததினால் தொண்டை புண்ணாகி ஏதாவது கொஞ்சம் வந்திருக்கும்' என்று இவ்விதம் அவன் மனதைத் தேற்றிக்கொண்டு "அம்மா! இதற்கெல்லாம் நீதான் காரணம். நீ தான் அவளை எப்பொழுதும் அழச்செய்கிறாய்."

விஜயா! வீணாய் வேண்டாதவற்றிற்கெல்லாம் மனதை வருத்திக்கொள்ளாதே" என்று கூறி விட்டு மறுபடியும் படிக்கச் சென்றான்.

"அம்மா! நான் அழுததின் காரணம் அவனைப் பற்றித் தானென நீயேன் ராமுவிடம் சொல்லமாட்டேனென்கிறாய்? அவன் தினம் என் சமீபம் வந்துட்கார்ந்து சற்று பேசிச் சென்றாலே என் உடம்பு சௌக்கியமாய்விடும். அவன் கலியாணம் நடக்கும் வரையிலாவது நான் உயிருடனிருப்பேனா? அம்மா! ஜாதகம் பார்த்தாயிற்றா? நான் இறப்பதற்குள் கலியாணம் முடிந்து விட்டால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். ராமுவை இங்கு கூப்பிடு. பெண்ணைப்பற்றி அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானென்பதைக் கேட்போம்' என்று அவள் சொல்ல, பார்வதி அம்மாள் தன் குமாரன் மேல் சிறிது கோபத்துடன் அவன் அறைக்குள் நுழைந்தாள். அங்கு அவன் தன்னைச் சுற்றிலும் புஸ்தகங்களை அடுக்கிக் கொண்டு வேறு நினைவில்லாமல் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தும், அவன் இருப்

பினும் தன் உள்ளத்திலிருந்ததை அவனுக்கறிவித்துவிடக் கருதி தன்னை தைரியப்படுத்திக்கொண்டு "ராமு! நீ உன்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறாயேயொழிய விஜயாவைப் பற்றிய நினைவு உனக்குச் சிறிதுமில்லை. உன் உடன்பிறந்த சகோதரியை பற்றிக் கவலை கொள்ளக் கூட உனக்குப் பிறர் சொல்ல வேண்டுமா? நீ அடிக்கடி வந்து தன்னை விசாரித்துப் பேசிப் போகவேண்டுமென்று அவள் நிரம்ப ஆசைப்படுகிறாள். இது உனக்காகத் தெரிய வேண்டாமோ" என, ராமசந்திரன் புஸ்தகத்தினின்றும் தன் கண்களை எடுக்காமலே 'அம்மா! இதைச் சொல்லத்தானா நீ இங்கு வந்தாய்! நன்றாயிருக்கிறது. நான் என்னவோவென்றெண்ணினேன். உனக்கு மேல் விஜயாவுக்கும் ஒன்றும் தெரியவில்லை. நான் இப்படி வீண் பொழுது போக்கிக் கொண்டிருந்தால் எப்படி முதலில் பாஸ் பண்ணுவது? எல்லாரும் என்னை அப்புறம் பரிகசிக்க மாட்டார்களா? போ, என்னை இப்பொழுது தொந்திரவு செய்யாதே" என்றதும் பார்வதி அம்மாள் அவனுடன் வாதாடுவதிற் பிரயோஜனமில்லையென்று கண்டு அவ்விடம் விட்டுச்சென்றான். ராமசந்திரனுக்குத் தன் படிப்பைத் தவிர வேறொன்றும் காதிற் படவில்லை. அதுவும் நீலகண்டன் அவனை மறுபடியும் சந்தித்துப் பேசியபோது "நீ முதல் வகுப்பில் தேறவேண்டுமென்று நிரம்ப சிரமப்பட்டுப் படிக்கிறாயென்று கேள்விப்பட்டேன். ஏன் வீண் தொந்திரவு? தவறாமல் தேறினாலே போதாதா?" என்று பரிகாசமாய்க் கூறியது அவன் ஏற்கெனவே கொண்டிருந்த உறுதியைப் பின்னும் பலமாக்க, அவன் தன் சுபாவத்தை முற்றும் மறந்தவனானான்.

விஜயாவின் வியாதி நாளுக்கு நாள் முற்றி வருவதை டாக்டராகிய கோபாலன் ஒருவனே அறிந்து கவலைப்பட்டான். அதன் முடிவும் வெகு சமீபம் நெருங்கி விட்டதென்று அவனுக்கு நன்றாய் விளங்கிவிட்டது. பரீக்ஷை முடிந்தும் "ரிஸல்டை" தெரிந்து கொள்ள ராமசந்திரன் ஆவலாய்க் காத்துக்கொண்டிருந்தான். "உண்மையில் யோக்கியதை யில்லாமல் நான் ஏதோ பிதற்றுவதாக எல்லாப் பையன்களும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ தவறால் பாஸ் பண்ணி விட்டதற்காக அவர்களுக்கு இவ்வளவு கர்வம் தலைக்கேறி யிருக்கிறது. இருக்கட்டும் பார்ப்போம்" என்று அவன் தன் பரீக்ஷையின் நினைவாகவே பேசுவதைக் கேட்க, கோபாலன் வருத்தமடைந்து பார்வதி அம்மாளிடம் "ராமுவை இவ்விடமிருந்து கிளப்ப என்னால் முடியவில்லை. ஆனால் இனிமேல் அப்படிச் செய்வதினால் விசேஷ குண மேற்படுமென்றும் சொல்லமுடியாது. இடம் மாற்றும் சிரமத்தைத் தாங்குவதற்கே விஜயாவின் உடம்பில் பலமில்லையென்று பயப்படுகிறேன். நீங்கள் அதிகமாய்க் கவலைப்பட வேண்டாம். நாம் என்ன செய்வது? எல்லாம் ஈசன் செயல்" என்று கூறிவிட்டு விஜயா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தான். அவள் சரீரத்தில் இப்பொழுது எலும்பு மட்டும்தானிருந்தது. உள் நுழைந்தவன் வழக்கம் போலல்லாமல் அவள் சுவாசம் சற்று நின்று நின்று வருவதைக் கவனித்து யோசனையுடன் சமீபம்சென்று குனிந்து பார்த்தான். உள்ளில் அடிச்சத்தம் கேட்டதும் விஜயா ஆவலாய்க் கண்களைத் திறந்து பார்த்தாள். கோபாலன் தன்னை நோக்கிக்கொண்டு நிற்பதைப் பார்த்து 'நீங்களா? நான் ராமுவோவென்றெண்ணினேன். ஆனால் இனிமேல் என்னைப் பற்றி ஒருவர் எதற்காகக் கவலைபட வேண்டும்? நீங்கள் கூட என்னைக் கைவிட்டு விட்டதுபோல் தோன்றுகிறது" என்று அவள் சிரமமும் துக்கமும் தேங்கிய தீனக்குரலில் கூற, "இல்லை, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இவ்விடத்தை விட்டு மாற்றுவதற்குக் கூட"— என்று அவன் வேகமாய்க் கூறுவதற்குள்,

"இனி வேறு இடம் எனக்கு ஸ்மசானம்தான்" என்று அவள் சற்று புன்னகை தோன்றிய பார்வையுடன் கூறினாளேயாயினும் அவளை மேலே சொல்ல வொட்டாமல் துக்கம் தொண்டையை யடைத்தது. கறுத்து அகன்று பளபளவென்றிருந்த அவள் கண்கள் தம் பிரகாசத்தை யிழந்து அவள் வாழ்நாள் குறுகிவிட்டதென்பதைநன்றாயறிவித்தன. மெதுவாய் அவைகளில் கண்ணீர் நிரம்பி அவள் கன்னங்களின் வழியாய் வழிந்தோடிற்று. டாக்டராயிருந்தும் கோபாலனுக்கு இதைப் பார்த்துச் சகிக்க முடியவில்லை. சரேலென்று தன் கைச்சவுக்கத்தால் வழிந்தோடிய கண்ணீரை அவன் துடைக்க யத்தனிக்க, "என்கடைசி காலத்தில் ராமுவைக்காட்டிலும் நீங்களே எவ்வளவோ அன்பாயிருக்கிறீர்கள்" என்று அவனை நோக்கி மலர்ந்த பார்வையுடன் கூறிவிட்டு இன்னுமேதோ சொல்ல நினைக்குமுன், அவள் முகம் திடீரென்று வேறுபட, தலை பக்கமாய் அவள் தலையணையிற் சாய்ந்தது.

இச்சமயத்தில் ராமசந்திரன் வெளியிலிருந்து "பார்த்தாயா அம்மா? நான் சொன்னபடியே எனக்கு "பஸ்டு கிளாஸ்" கிடைத்து விட்டது!" என்று சந்தோஷத்துடன் உரத்த குரலில் கூவிக்கொண்டே உள் நுழைந்தான். கோபாலன் அவனை கவனிக்கவில்லை. விஜயாவின் கையைப்பிடித்துப் பார்த்துக்கொண்டு நின்றான். ராமசந்திரன் படுக்கையின் சமீபம் சென்று "ஏன், விஜயா தூங்குகிறாளா? தெய்வாதீனம்! நான் இறைந்ததில் விழித்துக் கொள்ளவில்லையே. என் பரீக்ஷை சமாசாரம் உங்களுக்குத் தெரியுமோ? நான் சிரமப்பட்டதின் பயனைப்பெற்று விட்டேன்" என, கோபாலன் கலங்கிய கண்களுடன் "முதலில் நமது கவனக்குறைவினால் விளைந்த பலனைப் பார்" என்று கூறி ஒரு நாற்காலியில் பொத்தென உட்கார்ந்து முகத்தை மூடிக்கொண்டான். ராமசந்திரன் குரலைக்கேட்டு அப்பொழுதுதான் உள் நுழைந்த பார்வதி அம்மாள் இவ்வார்த்தைகள் காதிற்பட்டதும் படுக்கையண்டைஓடினாள். ராமசந்திரன் ஒன்றும் தோன்றாமல் விஜயாவைக் குனிந்து பார்த்தான். அவள் இவ்வுலகைவிட்டு அகன்றுவிட்டாளென இப்பொழுது நன்றாய் விளங்கவே, "ஐயோ அம்மா! விஜயா போய் விட்டாள்" என்று அலறிக்கொண்டு அவள் தேகத்தின்மேல் விழ, பார்வதி அம்மாளும் தன் நினைவற்று படுக்கைமேல் விழுந்து விட்டாள். இதன் மத்தியில் விஜயாவின் முகம் இனி ஒருவருடைய அன்பும் தனக்கு அவசியமில்லையென்பதுபோல் சற்று புன்சிரிப்புத் தவழ தூங்குவது போன்று காணப்பட்டது.

பூர்வீக காலத்திலும் தற்காலத்திலுமுள்ள இந்திய ஸ்திரீகள்.

By The Hon. Sir. C. V. KUMARASAMI SASTRI, KT.,

"ஒன்றேதான் அழியாதது" என்ற தமது அழகிய புஸ்தகத்தில் Fielding Hall என்பவர் "உலகத்தை உண்டாக்கினதும், அதை ஆளுகிறதும் மூன்று விதமான அன்பே. ஒரு புருஷனையும் ஒரு ஸ்திரீயையும் ஒரே தேகம் ஒரே ஆவிபோல் கட்டுப் படுத்தும் அன்பு ஒன்று. பிரிவுபட்ட ஜனங்களை ஒன்று சேர்த்து ஒரே (Nation) தேசத்தாராகச் செய்யும் அன்பு இரண்டாவது. உலகத்தையே கடவுளுக்கு அர்ப்பணம் பண்ணும் அன்பு மூன்றாவது.

ஒவ்வொன்றும் அழியக் கூடாதவையே. நாம் இந்த முன்றில் ஒரு அன்பையாவது வெளிக் காட்டாவிடில் நமது வாழ்க்கை வீணே. நம்முடைய மதக்கொள்கைகளும் இவைகளையே சிறப்பிக்கின்றன. இவைகள் ஒன்றும் அழியாதவை என்பதுதான் நமது நம்பிக்கை" என்று சொல்லுகிறார். ஒவ்வொருவருடைய ஆயுளிலும் தேசங்களின் சரித்திரங்களிலும் இவ்வகை நோக்கத்தின் பலம் கணக்கிலடங்காததாயிருக்கிறது. இக்கருத்தை ஒருவன் அறியாவிட்டால் ஒரு ஜன சமூகத்தை சரியாகத் தெரிந்து கொள்வது முடியாது. நமது நாட்டில் ஸ்திரீ சமூகத்தார் என்ன நிலைமையிலிருக்கிறார்கள், இவர்கள் முன்னோர்கள் எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பவைகளைப் பற்றி பற்பல சரித்திர ஆசிரியர்களும், ராஜீயவிவாதிகளும் யோசித்துக்கொண்டேயிருக்கிறார்கள். இதைப் பற்றி எழுதப்படும் புஸ்தகங்களும் நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகின்றன. ஆகையால் நாம் Claresse Bader's "இந்தியாவில் பூர்வீக காலத்திலிருந்த ஸ்திரீகள்" (Published by Kegan Paul Trench Trubner & Co., Ltd., London) என்ற புஸ்தகத்தையும் Margaret M.Urquhart's "வங்காளத்திலுள்ள ஸ்திரீகள்" (Published by the Association Press, Y.M.C.A., Calcutta) என்ற புஸ்தகத்தையும் ஆதரிக்கிறோம். இந்தியாவில் பூர்வீக காலத்திலோ அல்லது தற்சமயத்திலோ உள்ள ஸ்திரீ சமூகத்தின் குணாதிசயங்களைப் பற்றி சரிவரத்தெரிந்து கொள்வதற்கு இன்றியமையாததான பச்சாதாபமும், ஒவ்வொரு ஸ்திரீயின் மனதில் கொதித்துக்கொண்டிருக்கும் ரகசியத்தை அறியும் சக்தியும் இந்தப் புஸ்தகங்களில் ததும்பிக்கிடக்கின்றன. இந்திய சரித்திரத்தை மேலோடு படிக்கும் ஒருவன் மத விஷயத்திலோ, ஜன சமூகத்திலோ ஏற்பட்ட யுத்தங்கள், வெற்றிகள், கிளர்ச்சி முதலியவைகள் ஏற்பட்டும், சமூக முறையிலும் அல்லது அரசியல் முறையிலும் கொஞ்சமேனும் மாறுதல் அடையாமல் ஓரே விதமாகத் தானிருந்துகொண்டு வந்திருக்கிறது என்று நினைப்பான். இது முற்றிலும் தவறு. நூற்றாண்டு நூற்றாண்டுகளாக நாம் கவனித்து வந்தால் சமூக விஷயத்திலும், இராஜீய விஷயத்திலும் முற்போக்கை அடைந்து கொண்டே வருவது நன்கு விளங்கும். (Traditions) பழக்கவழக்கங்கள் இல்லாத உலகமும், மாறுதல் இல்லாத வாழ்க்கையும் இருக்க முடியாது. பல ஞானிகள், யோகிகள், கவிகள் இருந்த இந்நாட்டில் வெவ்வேறு நோக்கங்களைக் கைக்கொண்ட புருஷர்களையும் ஸ்திரீகளையும் காண்கிறோம். மதத்திலும் தத்வஞானத்திலும் சிறந்த கார்கி, மயித்ரேயி முதற்கொண்டு, கற்பு, சாமர்த்தியம், நாணம், பக்தி, பொறுமை, அர்ப்பணம், இன்னும் இந்தியாவில் புகழக் கூடிய சிறந்த நற்குணங்களில் கீர்த்தி பெற்ற சீதை, சாவித்திரி, தமயந்தி, துரோபதை முதலிய ஸ்திரீகள் வரை நாம் காண்கிறோம்.

"இந்தியாவில் பூர்வீக காலத்திலிருந்த ஸ்திரீகள்" என்னும் புஸ்தகத்திலிருந்து வேதம், புராணம், ராமாயணம், மகா பாரதம் முதலியவைகளில் தோன்றுகிற ஸ்திரீகள் எவ்விதம் ஜன சமூகத்திலும் மத விஷயங்களிலும் நடந்து கொண்டார்கள் என்று தெரிந்து கொள்கிறோம். அப்புஸ்தகத்தின் நோக்கத்தை முன்னுரையில் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்:– "மகள், தாயார், விதந்து முதலிய ஸ்திரீகளின் சில நிலைமைகளை வேதங்கள் உண்டான நாள் முதற்கொண்டு ஆரம்ப நிலைமைகளை ஆராய்ச்சி செய்து, வர வர எப்படி விருத்தியடைந்து வந்தது என்பதை புகழ்களிலிருந்தும் பாட்டுகளிலிருந்தும் கண்டு பிடிக்க முயல்கிறோம். அவர்கள் அனுசரித்து வந்த பழக்க வழக்கங்களை மட்டும் கவனியாது, தேசத்திற்கே சேர்ந்த அவர்களுடைய குணங்களிலிருந்து நமக்கு எட்டியிருக்கும் (Legends) கதைகளிலும், புராணங்களிலும், காவியங்களிலும், மாளவ அரசாங்கத்தில் நடந்த (Heroic Period) மேம்பாட்டடைந்த காலத்திலிருந்தும் இதர நாடகம் கதைகளிலிருந்தும் என்ன என்ன விதம் நடந்து கொண்டிருந்திருக்கிறார்களென்பதை கவனிப்போம்."

மேற் கூறிய புஸ்தகத்தின் ஆரம்ப அத்தியாயங்களில் வேதங்களில் சொல்லிய பலவித ஸ்திரீ (Types) வகுப்புகளைப்பற்றி சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதி ஆரியர்களின் ஜன சமூகத்தின்கண் மிக உன்னத நிலைமையையே அடைந்திருந்தார்களென்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. இயற்கையிலேயே சாந்தமுள்ளதும் மிகவும் உபகாரமுள்ளதுமான சக்திகளைப் பெண் தேவதைகளாகக் கருதி, அவைகளைப் பூஜித்தார்கள். பிறந்த வீடுகளிலும் சரி, கணவனுடைய வீடுகளிலும் சரி, தகுந்த அன்புடன் காக்கப் பெற்றார்கள். கலியாண மந்திரங்களில் புருஷன் தனது மனைவியை மிக அன்புடன் வரவேற்று அவளுடைய சுய இச்சைக்குத் தகுந்தபடி போகாமல் குடும்பத்தில் சந்தோஷம், சௌக்கியம் என்ற மழையையே மன மார்ந்து பொழியும்படி கேட்டுக்கொள்கிறான்.

பின்னும் புருஷன் என்ன சொல்லுகிறான். "தேவதைகளுக்கே சமானமானவளாயும், மிகவும் அழகு வாய்ந்து, இரக்கம் கொண்ட மனதையும் உடையவளே! வருவாய்! என்னை மயக்கும்படியான பார்வையுடையவளாயும் தன் புருஷனிடத்தில் நல்லொழுக்கத்துடனும் ஜீவஜந்துக்களிடத்தில் பட்சமும், கீர்த்தி பெறக் கூடிய சந்ததிகளையும் உற்பத்தி பண்ணக் கூடியவளே! வருவாய்!! நம்முடைய இல்லத்தில் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவாகச் சந்தோஷம் ஏற்படட்டும். ஏ! பெருமை பொருந்திய இந்திரனே! அவளை அதிர்ஷ்டசாலியாகச் செய்வாய். ஒரு அழகிய குடித்தனத்தை அடையட்டும். பத்துக் குழந்தைகளை பெறட்டும். அவனே பதினோராவது குழந்தையாயிருக்கட்டும். உன்னுடைய மாமனார், மாமியார்களை ஆதரித்து நீயே ஆண்டு கொண்டிருப்பாய். நாத்தனார்கள் மைத்துனர்களை ஆதரித்து நீயே ஆண்டு கொண்டிருப்பாய்!!"

கஷ்டங்களை நீக்கும்படியான ஸ்திரீகளினுடைய தன்மையைப் பற்றி வேதங்களிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு புகழில் என்ன எழுதியிருக்கிறது, "கடவுளையே ஒப்புக்கொள்ளாது தர்மங்களைச் செய்யாத ஒரு மனிதனை விட, ஒரு ஸ்திரீ திடச் சித்தமுள்ளவளாயும் நல்லவளாயுமிருக்கிறாள். பீடிக்கப்பட்டவர்கள், ஏழைகள், பசியால் தவிக்கிறவர்களை வெகு சீக்கிரத்தில அறியும் சக்தியுடைய ஸ்திரீ தேவதை உருவாகவே யிருக்கிறாள். (ருக்வேதம் 5. 6, 67.) அந்தப் பெரிய நீதி குருவாகிய மனு ஸ்திரீகளையே ஒரு உன்னதமான உச்சியில் ஏற்றிவைத்து "வீட்டிற்கே ரத்னமாயும், ஒரு ஜோதியாயும் பெருந்தன்மையையும், கீர்த்தியையும் அடையத் தகுந்தவர்கள்" என்று சொல்லி "ஒரு புருஷனுக்கும் ஒரு மனைவிக்குமுள்ள (Fidelity) அன்பு சாகும் பரியந்தம் இருக்கட்டும். இதுதான் மிகவும் முக்கியம்" என்று முடிக்கின்றார்.

இப்புஸ்தகமெழுதிய Claresse Bader 'ஸ்திரீகள் தாமாகவே தமது ஆத்மாவைக்கடவுளிடம் செலுத்தவும் தங்களது கடமைகளை தியானத்தால் பலப்படுத்திக்கொள்ளவும் (Penance) தவத்தின் மூலியமாகத் தங்களை சுத்திசெய்து கொள்ள கடவுளை வேண்டவும் அதிகாரமேயில்லையென்று நீதிமானாகிய மனு ஒப்புக்கொள்ளவில்லையென்பது தவறு. தனது புருஷனிடம் அடங்கி, அவனை ஒரு தெய்வமாகக் கருத

திருக்கிறாள். வங்காளிகள் பொதுவாக மிகு விவகாரங்களில் ஈடுபட்டவர்கள். இதர மாகாணங்களுக்கு முன்னமேயே அங்கு ஐரோப்பியர்கள் குடிகொண்டதால் அவர்களுடைய சகவாசமும், பழக்க வழக்கங்களும் நன்றாய்ப் பரவி, வங்காள தேசத்து ஸ்திரீகள் மற்ற மாகாணத்து சகோதரிகளைக் காட்டிலும் விருத்தியடைந்து வந்தார்கள். இச்சமயத்தில் ஒரு பக்கத்தில் வைதிக ஜனங்களுக்கும் மற்றொரு பக்கத்தில் புதுக்கோட்பாடுகளையும், புது நாகரிகத்தையும் கைப்பற்றி பரம பக்ஷமாயிருந்து வந்தவர்களுக்கும் ஏற்பட்ட மனோ சம்மதத்தையும், உறவையும் பற்றி கவனிக்கத் தகுந்தது. இது மிகவும் முக்கியமான விஷயம். மாமியார்களாலேயே ஆளப்பட்டு வெளியே கூட வராத கோஷா ஸ்திரீகள் ஒரு பக்கம். காலத்திற்குத் தகுந்தபடி மாறி, புது நாகரிகத்தை அனுசரித்து வந்த சிலர் மற்றொரு பக்கம். இவ்விருவருக்குள் எவ்வளவு வித்தியாசங்கள் இருந்திருக்கவேண்டும்? சில வேளைகளில் மனதைப் பதற செய்கின்றன. இந்தப் புஸ்தகத்தில் வைதிகக் கட்சியிலுள்ள பெண்களின் வாழ்க்கைகளையும் அவர்களின் நடையுடைபாவனைகளைப் பற்றியும் விவரித்திருக்கிற அழகை வாசித்துப் பார்க்கும்பொழுது, இவ்விதப் பெருமைகள் திடீரென்று மாறமுடியாதென்றும் நாளடைவே தகுந்த காரணத்தால் எவ்வளவுக்கெவ்வளவு மாறுதல் அவசியமோ அவ்விதமே மாறி வருமென்றும் தோன்றுகிறது.

இவ்விரண்டு புஸ்தகங்களும், வாசிக்க உற்சாகமாயும், உபயோகமுள்ளதாயும் காணப்பட்டாலும் அதிக யோசனைக்குமிடம் தருகிறது. குடும்ப விஷயங்களிலும், ஸ்திரீ புருஷர்களின் சம்பந்தங்களிலும் ஸ்திரீகள் எப்படி எப்படி நடந்து கொள்ள சீர்திருத்தங்களைக் கொண்டு வருகிறார்களோ அதற்குத் தகுந்தபடிதான், கூட்டுறவு, அரசியல விஷயங்களில இவர்கள் இனி முற்போக்கு அடைய முடியும். ஐரோப்பியர்களுடன் நூற்றுண்டுக் கணக்காகப் பழகி புது நாகரிகம் மேன்மேலும் விருத்தியடையும் இந்நாளில பண்டைய காலத்து நாகரிகம் மாறுதலடையத் தேவையில்லையென்பது சாத்தியமன்று. ஆகையால் ஓரே வழி என்ன? பண்டைய காலத்திலேற்பட்ட நல்லதுகளைக் கைநழுவ விடாமற் பிடித்துக்கொண்டு, புதிதாக வரும் சீர்திருத்தத்தைச் சேர்த்து, தேவையில்லாதவைகளைத் தள்ளவேண்டியது. எனது நண்பர் ஒருவர் "சீதை, ராவணனிடம் கஷ்டப்பட்ட காலத்தில் ராமருக்குக் காத்திருக்காதபடி, அவனோடு தானே எதிர்த்துக் கொஞ்சம் புருஷன்போல் சண்டை செய்திருந்தால் இந்த இந்திய தேசத்து ஸ்திரீகளின் கதி நன்றாயிருந்திருக்கும்" என்று சொன்னார். இது குறும்புத்தனமுள்ள அபிப்பிராயம். இந்த அபிப்பிராயத்தில் கொஞ்சம் உண்மையிருந்தபோதிலும் ஆரிய ஸ்திரீ சமூகத்திலுள்ள பெருமைகளெல்லாம் ஒன்று சேர்ந்து அவதரித்த சீதா தேவி அவ்விதம் செய்திருக்க முடியுமா? ஐரோப்பியர்களின் மேல்நாட்டு நோக்கங்களும் நமது பாரத நாட்டின் நோக்கங்களும் ஒன்று கொன்று எதிர்த்துக்கொண்டிருக்கும்பொழுது பரம்பரையாக வணங்கப்பட்ட இவ்வித இரகசியங்களை அதிகாரத்தில் ஆசைகொண்டு புது உணர்ச்சியின் பதத்தால் உதைத்துத் தள்ளி விடுவது என்பது கண்ணீரை பெருக்கக் கூடியது. இந்தியாவில் பூர்விக கால முதற்கொண்டு கைக்கொண்டு வரும் நோக்கங்களையே திருப்பிக்கொண்டு வந்து நம் நாடு முழுவதையும் பாவசெய்யவேண்டுமென்று நினைக்கிறவர்களெல்லோரும் இந்த இரண்டு புஸ்தகங்களையும் படித்து [illegible] வேண்டியது இன்றியமையாதது. அடிக்கடி நமது ஸ்திரீகளின் முற்போக்கையும், புதிய சீர்திருத்தங்களைப்பற்றியும் நான் நினைக்கும் பொழுதெல்லாம் அடியிற் கண்ட அடிகள் ஞாபகத்திற்கு வருகின்றன:—

Girl of the future feared of all,
Chasing the far-flung fashions line,
What awful things may yet appal,
Hung on your human forms divine,
Girl of the past stay with us yet,
Lest we forget—lest we forget.

எவ்விதப் புதிய மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் அவைகள் ஒவ்வொன்றும் பாரத நாட்டின் ஸ்திரீகளினுடைய கீர்த்தியையும் பெருமையையும் விளக்கி, பரம்பரை பரம்பரையாய் நழுவவிடாது வந்த பழய நோக்கங்களின் கருத்துகளை மாத்திரம் "வித்துகளாக" கொண்டிருக்கவேண்டுமென்று பிரார்த்திப்போம்.

(சென்ற ஆகஸ்டு மாதத்து "இந்தியன் ரெவியூ"விலிருந்து ஸ்ரீமான் P. S. ராமகிருஷ்ணனால் மொழி பெயர்க்கப்பட்டது.)

ஒரு சம்பாஷணை.

(ஸ்ரீமதி செ. ராஜம்மாள்)

மீனாக்ஷி:—அடி! அம்புஜம்! நீபடித்துக் கொண்டிருக்கும் புத்தகம் என்ன?

அம்புஜம்:—இதுவா? இது தி. மா. பொன்னுசாமி பிள்ளை எழுதிய நாவல். "கமலாக்ஷி" என்று பெயர்.

மீனாக்ஷி:—நானும் இதைப் படித்திருக்கிறேன். நல்ல அருமையான கதை. நான் முந்தியெல்லாம் நாவல் வாசித்த வண்ணமிருப்பேன். இப்போது என கணவர் நாவல் படிக்கக் கூடாதென்று சொல்லி விட்டார். அவர் கட்டளைக்காக நான் நாவல்கள் படிப்பதை நிறுத்தியிருக்கிறேன். ஆயினும் எனக்கென்னமோ அவைகளைப் படிப்பதில் பிரியமே.

அம்புஜம்.—சிலர் நாவல் வாசிப்பது கூடாதென்றுதான் சொல்லுகிறார்கள். இது அறியாமையே. சிலகெட்டபெண்களை ஆதாரமாக்கிப் பெண் சமூகமே கெட்டதென்று சிலர் வாதித்துத் தமது குருட்டபிப்பிராயத்தையே பிறரும் ஒப்புக்கொள்ள வேண்டுமெனப் பிடிவாதம் செய்வதுபோல் நாவல் என்றால் அதை வாசிக்கக் கூடாதென்றே சிலர் நினைக்கிறார்கள். இக்கமலாக்ஷி என்ற நாவலில் எத்தனையோ அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இக்கதையில் வரும் மனோன்மணி என்னும் பெண்ணின் பொறுமையைப் பற்றி நம் சகோதரிகள் கட்டாயம் வாசித்தறிய வேண்டுமே. நாவல் வாசிப்பது எங்ஙனம் கூடாதென்று நீ உன் கணவனைக்கேட்க வில்லையா?

மீனா.—பெண்கள் நாடகம் பார்ப்பது எப்படிக் கூடாதோ அப்படியே நாவல் வாசிப்பதும் கூடாதென்கிறார்.

அம்.—நாடகம் என்பது நம் முன்னோரால் மிகவும் கொண்டாடப்பட்டு வந்த கலைகளில் ஒன்று உண்மையை உள்ளபடிஎடுத்துரைக்கும சக்தி நாடகத்திற்கே உண்டு. அரிச்சந்திரனுடைய சத்தியத்தின் வெற்றியையும் சாவித்திரி, சீதை, தமயந்தி முதலியோரின் கற்பின் மேன்மையையும் நம்போன்றோர் அறிந்துய்வதற்கென்றே நாடகம் நடிக்கப்படுவது முற்கால வழக்கம். தற்கால நாகரிகத்திடையே நம் முன்னோரால் குறைக்கப்பட்டிருந்த விஷயத்தைப் பெருக்கியும் விரிவாயுரைக்கப்பட்டதைக் குறுக்கியும் நடிக்கப்படும் சில நாடகங்கள் ஆபாசக்களஞ்சியமாகவும் கெட்ட நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாகவும் ஆசானாகவும் இருப்பது பற்றி நாடகம் என்ற கலையையே அடியோடு மறுத்தல் போல நாவல் எல்லாவற்றையும் வெறுத்தல் பொருத்தமானதல்ல. நாவல் நமது சகோதர சகோதரிகளுக்கு உயர்ந்த அறிவையும் புத்தி நுட்பத்தையம் அளிக்கவல்லதென்பது எனது அபிப்பிராயம்.

மீனா.—அதோ பார், ராஜம்மாளும் வருகிறாள். அவள் மெத்தப்படித்தவளாயிற்றே. இது பற்றி அவளைக் கேட்போம்.

ராஜ—அம்புஜம், மீனாக்ஷி, நீங்களிருவரும் பேசிக் கொண்டிருப்பதை நான் ஜன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். வெகுநேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே என்ன விஷயம்?

அம்—வேறொன்று மில்லை. மீனாக்ஷியின் கணவன் நாவல் வாசிக்கக்கூடாதென்று சொல்லுகிறாராம். அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். உன் அபிப்பிராயமென்ன? சொல், கேட்போம்.

ராஜ.—இவ்வளவுதானே இதனாலென்ன! அவர் சொல்வதிலும் உண்மையில்லாமலில்லை. வாசிக்கக் கூடாத நாவல்கள் ஏராளமாக இருக்கின்றன.

மீனா.—என் கணவன் நாடகம் பார்ப்பதும் கூடாதென்கிறார். இது பற்றி என்ன நினைக்கிறாய்?

ராஜ.—நான் சொல்ல வந்ததை முடிப்பதற்குள் நீ வேறு கேள்வி கேட்டு விட்டாயே. சற்று பொறு. நாவல் பல பெண்கள் கையி

லெடுக்கவும் தகாத நிலையிலிருப்பினும் உயர்தர நாவல்களும் இல்லாமலில்லை. நல்லறிவைப்புகட்டக் கூடிய நாவல்களும் இருக்கின்றன. இதைக் கவனியாது நாவல் என்றால் எல்லாவற்றையும் தள்ளுதல் சரியல்ல. நம்மில் பெண்கள் படிக்கக் கூடாதென்று சொல்லவில்லையா. அதுபோல இதுவும் ஒரு சொல்.

மீனா:—ஆமாம். தங்கத்தின் மாமியார் அவளைப் படிக்க விடுவதில்லையாம். எப்போதாவது புத்தகத்தைக் கண்டால் கண்டு விட்டால் "இதென்னடீ வழக்கம். ஆண் பிள்ளையன்றோ புத்தகம் படிப்பான். குடும்பக் காரியங்களை கவனிக்கும் பெண்களுக்குப் புத்தகமேதற்கு"? என்று அதட்டுவாளாம்.

ராஜ:—நாடகம் பார்க்கச் செல்லுவதும் கூடாதென்று மறுக்கத் தற்காலம் இடமில்லாமற் போகவில்லை. பெண்கள் வெளியிற் செல்லுங்கால் எவ்வளவு அலங்காரத்தைக் குறைத்துக் கொள்ளுகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு சிலாக்கியம். இதன்றி கலர் சேலை மஸ்லின் ரவிக்கை முகத்தில் பவுடர் பரிமள வாசனை தலையில் ஒரு கட்டுப் பூ இவ்வளவுடன் வெளியிற் செல்வதற்கென்றே சிங்காரித்துக்கொண்டு செல்லும வழக்கத்தை நம் பெண்கள் அறவே ஒழித்தல் கண்ணியமன்றோ. இந்த வேஷத்துடன் இவர்கள் நாடகம் பார்க்கவும் செல்வார்களாயின் அங்கு நிறைந்துள்ள சில ஆடவர்களுக்கு இவர்களைப் பார்ப்பதா அல்லது நாடகத்தை கவனிப்பதா என்றே விளங்குவதில்லை. இவைகளெல்லாம் ஆடவர் கண்களில் படுவதால் நாடகம் பார்ப்பதே பிசகு என்று சிலர் சொல்லி விடுகிறார்கள். வீட்டிலிருக்கும்போது இஷ்டம்போல் அலங்கரித்துக்கொண்டுவெளியிற் செல்லும்போது அமைதியாயுடுத்துச் சென்றால் இத்தகைய சொல் ஏற்படாதென்பது நிச்சயம். நாங்கள் எல்லோரும் வெளியிற் போகாமலும் நாடகம் பாராமலுமா இருக்கிறோம். பார்க்கக் கூடிய நாடகங்களும் படிக்கக் கூடிய நாவல்களும் செல்லக் கூடிய பொதுக்கூட்டங்களும் இன்னவை என்பதை உணராவிட்டால் கஷ்டமே.

அம்:—நாவல் வாசிப்பது நன்மையா தீமையா என்பதைப் பற்றி நம் சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எழுதிக்கேட்போமா?

ராஜ:—அவர் நாவல் படிப்பது கூடாதென்று கூறமாட்டார். அவ்விதமாயின் அவரே பல நாவல்களை எழுத முன் வருவாரா? சிந்தாமணியைக் கையிலெடுத்தால் சகோதரி வி. பாலம்மாள் எழுதிய கதை இருக்கிறதாவென்று முதன் முதல் அட்டவணையைக் கவனித்து, பிறகுதான் மற்றவைகளைப் படிப்பது என் வழக்கம்.

மீனா:—பாலம்மாள் எழுதியுள்ள நாவல்களின் பெயர் என்ன?

ராஜ:—திலகவதி, உண்மைக் காதல், தேவகத்தன் இம்மூன்றும் புத்தக ரூபமாயிருக்கின்றன. சிந்தாமணியில் பத்மநாபன், தீக்ஷிதரின் கோபம் இன்னம் பல கதைகளை எழுதியுள்ளார். புருஷோத்தமன் அல்லது புன்சிரிப்பு என்ற நாவலையும் கலாவதி அல்லது காலத்தின் கொடுமை என்றதையும் இதுவரை ஆயிரம் முறை படித்திருக்கிறேன். இன்னம் ஒரு முறை படிக்கவேண்டுமென்றே எனக்குத் தோன்றுகிறது.

அம்:—நான் படித்த புத்தகங்களில் இக்கதைகளில்லையே! என்ன செய்வது?

ராஜ:—நீ இன்றே சிந்தாமணிக்கு ஒரு சந்தாதாராகச் சேர். பழைய பிரதிகளெல்லாம் வரவழித்துப்படி. சிந்தாமணியைப் படித்துக் காட்டியதிலிருந்து தங்கத்தின் மாமியாரும் இப்போது சிந்தாமணியை வரவழைத்து மருமகளைப் படிக்கச்சொல்லி கேட்கிறாள். திலகவதி என்ற நாவல் அவளுக்கு மனப்பாடமாயிருக்கிறது.

மீனா:—நானும் சிந்தாமணியைப்பற்றி என் கணவரிடம் சொல்லுகிறேன்.

ராஜ:—நாம் இப்போது பேசிக்கொண்ட விஷயங்களை அப்படியே சிந்தாமணியில் பிரசுரிக்கும்படி அனுப்புவதுடன் பாலம்மாள் எழுதிய நாவல்களையும் உங்களுக்கனுப்பும்படி எழுதுகிறேன்.

சுபம்!

உ

சிவமயம்.

ஸ்ரீமுருகன் றுணை.

சிந்தாமணியின் மதிப்புரை.

என் சகோதரியாராகிய வி. பாலாம்பிகை யம்மையாருக்கு செந்தமிழ்ச் சைவத் தொண்டன் மணிவாசகச் சரணாலயன் எழுதியது.

அம்மா! தேசத்திற்கு உண்மைத் தொண்டுபுரியும் அடியேனுக்கொரு பேருவகையாயிற்று.

அம்மா! நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமை கண்டு அவர்கட்குத் தனியே யுழைக்க முன்வருவாரொருவரையுங் காணுமன் மிகத் துன்புறுமிவ்வமயத்தில்.

எம்மம்மையாராகிய மங்கையர்க்கரசியாரைப் போன்று, எம்போன்னையாறுய ஔவைப் பிராட்டியாரைப் போன்று, அழகிய மாதாவாகிய கௌரியம்மையாரைப் போன்று, எமக்கும் எம் இறைவர்க்கும் இவ்வுலகுக்கும் அம்மையாராகிய காரைக்காலம்மையாரைப் போன்று தாங்கள் உலகத்திற்குழைக்க முன்வந்திருப்பதுவே அப்பேருவகைக்குக் காரணம்.

உலகத்தில் அறியாமை மலிந்த ஆடவர்கண் மாட்டுச் சிக்கி அடிமையாகி எந்திரங்களைப் போன்று இடையறாது உழைத்தேங்கும் எம்சகோதரிகளாகிய பெண்மணிகள் துன்பம் ஒழிந்துவிட்டது அம்மா!

அம்மா! மேலும் அவர்களின் எவ்வித வறுமைகளையும் நீக்கத் துணிந்து தாங்கள் உதவி வருஞ் சிந்தாமணியே அவர்களுக்குப் பண்டைக் காலத்தைப்போல, எல்லாச் செல்வங்களையுமளித்துக் களிப்புண்டாக்கு மென்பதற்கையமின்று.

அம்மா! புரந்தரன் நவநிதியம் பெற்றான், அளகைக்கோன் எந்நலங்களையும் எப்பொருள்களையும் ஒருங்களிக்கத்தக்கதாகிய சிந்தாமணியைப் பெற்றின்புற்றான். அம்முறையே தாங்கள் உதவிவரும் சிந்தாமணியானது நம்நாட்டுப் பெண்மணிகளுக்குப் பல நன்மையளிக்கத் தக்கதாயிற்று என்பதொருதலை.

அம்மா! தங்கள் சிந்தாமணியின் அபிப்பிராயம் மேற்கண்ட அளவுதான் என்னால் எழுத முடிந்தது. நம்நாட்டுப் பெண்மணிகளுக்கு மிகையாகாமலும் குறைவில்லாமலும் பலனை யளிக்கும்படி செந்தமிழ் நாட்டிறையாகிய முருகக்கடவுள் பேரருள்புரிவானாக.

அம்மா! அச்சிந்தாமணியானது எக்காலும் நந்தாமணியாயிருக்க அதற்கொரு வாழ்த்துக் கூறுவது மிகையாகும். ஆயினும், அச்சிந்தாமணியானது இந்நிலவுலகின்கண்ணே நீடூழியுலாவியோங்கி வாழ்க்கடவதாக. தாங்களும் தங்கள் நன் முயற்சியும் நீடூழி நீடூழி யோங்கி வளர்வீர்களாக,

அம்மா! தங்கள் பேருதவியால் நஞ்செந்தமிழ்நாட்டுப் பெண்மணிகளெல்லாம் பெருநன்மையடைவார்களாக.

அம்மா! அடியேன் புரியும் உண்மைத் தொண்டினையும் இருபங்காக்கி ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இரு திறத்தினருக்கும் அளிப்பேனாக.

நம்முடைய தொண்டினிமித்தம் ஏற்படும் நன்முயற்சிகளெல்லாம் விழைந்தவண்ணமே முட்டின்றி முடியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன் முன்னின்று நடத்துவிப்பானாக.

இப்படிக்கு,

க. மணிவாசகச் சரணாலயன்,

தமிழர் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கலாசாலையின் அறக்கடவுணிலையம்,

சண்முகநாதபுரம், குன்னக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,

குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் தேதி.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபணையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண காதரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறீரென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா !

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன்; அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

4-8-26 ல் F. M. S லிருந்து ஸ்ரீமதி சொர்ன லக்ஷ்மி எழுதுவது:—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பேருதவியைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமே யல்லாது வெளி நாடுகளிலுள்ள என்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் ஊக்கங்குன்றா முயற்சியினாலேயே ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.

சிந்தாமணி சந்தா நேயர்களுக்கு

1926ஹு ஆகஸ்டுமாதமிருந்து நமது சிந்தாமணிக்கு மூன்றாவது ஆண்டு தொடங்குகிறது. ஆரம்பம் முதல் சந்தாதாரராகவிருந்து இவ்விரண்டு வருஷ காலமாக சிந்தாமணியை ஆதரித்ததுபோலவே இவ்வருஷத்திலும் சந்தாவை முன்பணமாக வனுப்பி அபிமானிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் சந்தாதாரராகச் செய்தும் சிந்தாமணியை ஆதரிக்கவேண்டுகிறோம். அயல்நாட்டுச் சந்தாதார்களும் இவ்வாறே உதவிப் புரியக்கோருகிறோம்.

பத்திராதிபர்

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளி வந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். இந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேரவாவை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாடச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வாராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டாவென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகளடங்கிய செட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4—8—0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடபபட்டிருக்கின்றன. மகா ராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் கிடையா. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

பால ராமாயணம் டபின் கிரவுன் விலை அணா.	0—6—0
பால பாரதம் ஷை 92-பக்கங்கள் அணா.	0—8—0
பால பாகவதம் ஷை 87-பக்கங்கள் அணா.	0—8—0

தாபற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்
மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

"சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6½; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனாமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியோகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
விவேகாச்ரமம், ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதி யனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.
3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.
4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள் இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.
5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.
6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.
7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிறப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், தொடர்ச்சியாய் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
8. எட்டணா முன்பண மனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.
9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னாருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாய்க் குறிப்பிடல் அவசியம்.
10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
சிந்தாமணி ஆபீஸ்,
சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அத்தியாச் சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனாம்."

விலாசம்:— மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

SILK PITAMBER CO., BENARES CITY.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

குழந்தைகளின் மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனைவியா கூலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

சீக்கிரம் வெளிவரும்!

அச்சிலிருக்கிறது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசீய நூல். இதில் தேச முன்னேற்றத்திற்காகவும், முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கானவுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதவராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந்நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ. 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணு 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"

சலிவன்ஸ் கார்டன் ரோட்.

மயிலாப்பூர் சென்னை.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette,* Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette,* **dated 24-7-23.**

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹேப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette,* **21st October 1913.**

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette,* **Part I-B, page 478, dated 3-6-24.**

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது, விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette,* Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியராயிருந்த, ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணா 12.

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.

207608

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்து வரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக்காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில வாயப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியாவது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்து கூற இடந்தருவதாய் இருக்கிறது.

ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற் கனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன் தாங்கள் நமது பாரத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்க அதிகசந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வலல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்தி பெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே !

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பியிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செந்துலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பதிலுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் செய்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுமிருந்துள்ள பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கும ஆக அதிகப பிரயாசையுடன தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டுப் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் ஆடவர்கள தங்கள தேச நிலையை உணர்ந்து அதனை முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய கருவியாகவும் உதவு மென்பதை வாசிகள அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப் பெறும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்விக்கும் சிந்தாமணியின் நெடுங்வாழ்விற்கும் கடவுள அருள் புரிவாராக.

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—4—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன். அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என்மனது குதூஹலமடைந்தது. ஆகையால் என்னை யொரு சந்தாதாரராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு. சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

சகோதரியே!

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம் போல் விள[illegible] சிந்தாமணி வரப்பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியு[illegible] தாய் நா[illegible] தூங்கிக் கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு.........[illegible] மும்......... மாறறலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்கு கடவுள் [illegible]ணை புரிய வேண்டுகிறேன்.

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

சகோதரியே!

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்கள[illegible] ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள [illegible] முன் னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக் த் தக்கதே. இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்கு மென்பதில் சந்தேக[illegible] லை. தங்கள் பத்திரிகைத் தழைத்தோங்கும பொருட்டுத் தாங்கள நீடூழி வாழச் சிவபிரான் [illegible] பை பாவிப் பாராக.

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் [illegible] ணிலிருந்து எழுதுவது.

தெய்விகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய[illegible] முகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில ஒவ்வொனறுப[illegible] யும் உற்சா கத்தையும நலவழிக்கு ஆதரவையும அளிப்பதுடன இவ்வரிய பெரிய வியாசங்க[illegible] பணடை காலத்து சரித்திரங்களும தமிழ நாட்டுப் பெண்மணிகளின முன்னேற்றங் க[illegible] அவர்கள் தற்கால நிலைமையினின்றும உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழு[illegible], நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப போதிப்பதான விஷயங்கள தக[illegible] பத்திரிகை யில வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள விஷயத்தில இவ்வளவு சிரமம எடுத்துக்[illegible]ண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

27—1—26-ல் சிலோனிலிருந்து ஸ்ரீமான டி. ஜெ. பரமானந்தன் அவர்கள் எழு[illegible]து:—

சகோதரியே,

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகி[illegible]க் கோரளவு இல்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின நன்மைக்கென்று சகல கஷ்[illegible]டங்களை யும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள நடத்திவரும சஞ்சிகையை எல்[illegible]லாம் வல்ல இறை வன மேன்மேலும ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி" நீடூழி வாழ்க. தாங்கள [illegible]ன எனக்கு சஞ்சிகையும் திருப்பியனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறே[illegible]னுப்பியிரு க்கும சந்தாவைப பெற்றுக்கொண்டு என்னையும ஒர சந்தாதாரராகப பதிவுசெய்து கொ[illegible] கோருகிறேன.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras. 2,0[illegible]—7-10-1926.